# மேகமாய் வந்து போகிறேன்

கோனில் வழிந்த ஐஸ்கிரீமைப் போல்... மலை முகட்டை தழுவி, தழுவிக் கொண்டிருந்தது மேகக் கூட்டங்கள்!

அதுவரை அப்பாவிடம் எரிச்சலாய் சலசலத்து வந்த சுப்ரியா அந்தக் காட்சியை பார்த்து விட்டு கண்களை விரித்தாள்.

''வாவ்...!''

தயாளன், மகளை கவலையுடனும், தற்சமயம் தோன்றிய சிறு நிம்மதியுடனும் நோக்கினார்.

சுப்ரியாவின் இருபது வருட வாழ்க்கையில் மலைப்பிரதேசத்திற்கு வருவது இது தான் முதல் முறை! அவளுடைய பிஸியான தருணங்கள் எல்லாம் காபி ஷாப்பிலும், அல்சாபால், மாயாஜாலிலும் தான் கழிந்தன.

''வெலிங்டன் உங்களை வரவேற்கிறது'' என்ற மஞ்சள் நிற போர்டைத் தாண்டி கார்வேகமாய் ஊடுருவி கொண்டை ஊசி வளைவில் திரும்பியது. சுப்ரியா அமைதியாய் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தாள்.

பசுமையான தேயிலைத் தோட்டங்கள்! இரு பக்கமும் ராணுவ வீரர்களைப்போல் அணிவகுத்திருந்த காட்சி ரம்யமாக இருந்தது.

''சுப்ரியா..''

''ம்'' அவர் பக்கம் திரும்பாமலே கேட்டாள்.

''நான் உன்னை இங்கே விட்டுட்டுப் போகப் போறதால் என்னை தப்பா நினைச்சிடாதே சுப்ரியா''

சுப்ரியா தந்தையை ஏளனமாய் ஏறிட்டு மறுபடி பார்வையை வெளிப்பக்கம் ஏவினாள்.

''நான் உங்களை எப்பவும் நல்ல விதமாக நினைச்சதே இல்லையே டாடி!''

மகளின் வார்த்தைகள் வருத்தத்தைத் தந்தாலும், அவள் தலையை கோதி விட்டார்.

**ஆர். மணிமாலா**



''இதே மாதிரி அத்தை வீட்டிலும் யாரையும் எடுத்தெறிஞ்சு பேசாதேடா...!''

''......!''

''எல்லாம் உன் நன்மைக்காகத்தான்னு புரிஞ்சுக்க...''

''போரடிக்காதீங்க டாடி.. சீரியல்ல வர்ற மாதிரி இருக்கு உங்க டயலாக்''

''......?!''

''உங்க அக்கா வீடு வர... இன்னும் எவ்வளவு நேரமாகும் ?''

''இதோ வந்தாச்சு... இன்னும் பத்தே நிமிஷத்துல...''

''இத்தனை வருஷமா எங்கே ஒளிச்சு வச்சிருந்தீங்க உங்க அக்காவை ?''

''......?!''

''இப்பவே சொல்லிட்டேன்... டாடி போரடிச்சா.. அடுத்த நிமிஷமே கிளம்பி வந்துடுவேன்!''

''எனக்கு போன் பண்ணுடா.. நான் வந்து பார்த்துட்டுப் போறேன்!''

அப்பாவைப் பார்த்து நக்கலாய் சிரித்து வைத்தாள்.

எதையோ சொல்ல நினைத்து .. கையால் வாயை மூடிக்கொண்டாள்.

சில்லிட்ட காற்றுக்கு உடம்பை சிலிர்த்துக் கொண்டாள்.

''அதோ.. அந்த பச்சை கலர் கேட் போட்ட வீடுதான்... நிறுத்திக்க! சுப்ரியா உங்க அத்தை வீடு வந்தாச்சு!''

இவர்கள் இறங்குமுன்.:. காரின் சப்தம் கேட்டு வாசலுக்கு வந்து விட்டாள் சியாமளா. பின்னாலேயே அவள் சாயலையொத்த இளம் பெண் ஒருத்தி.

இவர்களைப் பார்த்ததும் பரவசமும் பரபரப்புமாய் கீழிறங்கி வந்தாள்.

வாப்பா.. வா தயாளா! வாம்மா...!''

''வேலு பெட்டிகளை கொண்டு வந்து உள்ளே வை! நல்லாருக்கியாக்கா... பார்த்து எத்தனை வருஷமாயிடுச்சு? இளைச்சிட்டே...!''

''வயசாயிடுச்சில்லையா.. உள்ளே வந்து உக்காரு!'' இவ தான் என் பொண்ணு ரோமா...!''

''மூணு வயசுல பார்த்தது.. கிடுகிடுன்னு வளர்ந்துட்டா... நல்லாருக்கியா ரோமா!''

''நல்லாருக்கேன் அங்கிள்!''

''ரோமா... இது சுப்ரியா.. மை டாட்டர்!''

''ஹாய்...''

''ஹாய்..!'' என்றாள் பதிலுக்கு சலனமின்றி.

''ரோமா... போய் டீ போட்டுக் கொண்டு வா.. என் பொண்ணு நல்லா டீ போடுவா.. நல்லாவும் சமைப்பா.''

ரோமா அங்கிருந்து நகர, சங்கடத்துடன் தன் தமக்கையைப் பார்த்தார் தயாளன்.

'எந்த பாசாங்குமின்றி, கசப்பு மின்றி எவ்வளவு இயல்பாய், சரிசனமாய் பேசுகிறாள்.

''அக்கா...''

''சொல்லு தயாளா!''

''உனக்கு என்மேல கோபமே இல்லையா?''

''இருந்தது... ஆனா இப்ப இல்லே! ஒரு வயித்துப் பிள்ளைங்க நாம! கோபம், வருத்தம், சண்டை சச்சரவுன்னு வர்றது இயல்பான விஷயம் தானே! ஆனா, அதை மனசுல நிரந்தரமா அழுந்த பதிய வச்சுக்கறது அழகில்லையே தயாளா! ரொம்ப நாள் கழிச்சுப் பார்க்கறோம் பழைய கதை எதுக்கு?''

''ஸ்ஸ்....அப்பாடா...!'' சலிப்புடன் எழுந்தாள் கப்ரியா.

''என்னாச்சும்மா?'' என்றாள் சியாமளா.

''டி.வி.பார்க்கிற மாதிரி இருக்கு. இப்போதைக்கு நீங்க ரெண்டு பேரும் இந்த சேனலை மாத்தப் போறதில்லை..''என்றபடி வீட்டை பார்வையால் அளந்தபடி நகர்ந்தாள்.

''அக்கா.. தப்பா எடுத்துக்காதே.. கப்ரியா கொஞ்சம் துடுக்கு. மனசுல உள்ளதை பட்டு பட்டுன்னு பேசுவா... பெரும்பாலும் அந்த பேச்சு எதிராளியை காயப்படுத்தாம இருக்கறதில்லே... கொஞ்சம்...''

''புரியுதுப்பா.. அவளுக்கு மனசு சரியில்லே.. அவளோட நட்பு சரியில்லே.. இடமாற்றம் தேவை.. அதுக்காக இங்கே அனுப்பி வைக்கட்டுமான்னு போன் பண்ணினப்பவே.. விஷயத்தின் வீரியம் புரிஞ்சுது. பாவம்ப்பா.. அம்மாவோட நிழல் இல்லாம வளர்ந்த பொண்ணு... அவ மனசுல என்ன இருக்கோ...? மாறிடுவா.. கவலைப் படாதே.. நாங்க இருக்கோம். அவ யாரு, என் தம்பி பொண்ணு! என் பொண்ணு மாதிரியே பார்த்துக்கிறேன்...சரியா?''

''இப்பதான்க்கா..மனசுக்கு நிம்மதியா இருக்கு!''

''தொழில் எல்லாம் எப்படிப் போகுது ?''

''நானே நினைச்சுப்பார்க்காத அளவுக்கு நல்லாப் போய்க்கிட்டிருக்கு. ஆமா.... ஆதித்யா எங்கே?''

''அவன் பெங்களூருல வேலை பார்த்துட்டிருக்கான். லீவு கிடைக்கறப்ப வந்து பார்த்துட்டுப் போவான்.''

''என்ன படிச்சிருக்கான்.. எவ்வளவு சம்பளம்?''

''எம்.பி.ஏ.! நாப்பதாயிரம் சம்பளம் வாங்கறான்!''

''அப்பா இல்லாத பிள்ளைகளை நீ நல்லா வளர்த்து ஆளாக்கியிருக்கே! ஆனா, அம்மா இல்லாம என் கப்ரியா..'' குரல் கம்மியது.

''அட.... அந்தப் பேச்சை விடுங்கிறேனே!''

''ஆதி மறுபடி எப்ப வருவான்?''

''தெரியல தம்பி. ரெண்டு வாரம் முன்னாடி தான் வந்துட்டுப் போனான்.''



''எனக்கு போன் பண்ணச் சொல்லுக்கா! என்னால முடியல.. சில நிர்வாகப் பொறுப்புக்களை அவன் கிட்டே ஒப்படைச்சிடறேன். ஒரு லட்சம் சம்பளம் தர்றேன். என்னக்கா சொல்றே?'' என்ற தயாளன் பணக்காரர்களுக்கே உரிய களையோடு, மிடுக்கோடு இருந்தார்.

சியாமளாவின் முகத்தில் எந்த ஆச்சர்யமும் வெளிப்படவில்லை.

''வரட்டும் சொல்றேன். அவனோட உரிமையிலே, சுதந்திரத்திலே நான் தலையிடறதில்லே.''

''கப்ரியாவை உன்னை நம்பித்தான் ஒப்படைச்சிட்டுப் போறேன். சராசரிப் பொண்ணா அவளை மாத்தறது உன்னோட பொறுப்பு!''

''நான் பார்த்துக்கறேன்னு சொல்லிட்டேனே!''

''அவ செலவுக்காக மாசம் ஒரு தொகையைக் குடுத்துடறேன்!''

''தயாளா.... என் தம்பி மாதிரிப்பேசு. பணக்காரனாப் பேசாதே! இது என் புருஷன் வாங்கின சொந்த வீடு. என் பையன் கை நிறைய சம்பாதிக்கிறான். எங்களுக்கு எந்த கஷ்டமும் இல்லேப்பா! இது ஹாஸ்டலும் இல்லே... பணம் வாங்கிக்கிட்டு உன் பொண்ணுக்கு இருக்க இடமும், சாப்பாடும் தர்றதுக்கு!''

முகம் சிவந்து போயிற்று சியாமளாவுக்கு?

தயாளன் தமக்கையின் கையைப் பற்றிக் கொண்டு கண்களை மூடிக் கொண்டு சிரித்தார்.

''தப்புதான்க்கா! எல்லாத்தையும் பிஸினஸ் மைண்ட்லேயே பாத்து, நடந்து பழகிட்டேன் இல்லையா? அன்பான உறவுகளை விட்டு விலகி வாழ்ந்துட்டேன் இல்லையா? அதுக்கான பலனையும் அனுபவிச்சேன்.. கப்ரியா மூலமா!''

''....?!''

''பதினஞ்சு, பதினாறு வருஷமிருக்கில்லையா மாமா இறந்து? அப்ப வந்ததோட சரி! அதுக்கப்புறம் உன்னையோ, உன் குழந்தைகளைக் கூட நான் வந்து பார்க்கலையே பெரிய



''தமிழ் நாட்டின் மாவட்டங்கள் மொத்தம் எத்தனை?''

''புதுப்புது மாவட்டங்கள் தோன்றிக் கொண்டிருப்பதால் தீர்மானமாகச் சொல்ல முடியாது சார்''

''???''

-ச.ஆ.சேகவன்,
இளம்மணியாச்சி.

தப்பில்லையா? இப்ப என் பொண்ணுக்கு ஒரு பிரச்சனைன்னதும் தானே உங்க நினைப்பே வந்தது?

எவ்வளவு சுயநலக்காரன்க்கா நான்?'' தயாளன் கண்கள் துளிர்க்க.. கூனிக்குறுகி நின்றார்.

''அதனாலென்ன தயாளா? அப்ப உன் வாழ்க்கையில ஏற்பட்ட பிரச்சனைகளுக்கு மத்தியில் எதைப்பத்திதான் யோசிக்க முடியும்? புரிஞ்சுக்க முடியாதா என்னால? எவ்வளவு தூரம் வசித்தாலென்ன? பார்க்காமலேயே போனாலும் என்ன? நாம ஒரு தாய் மக்கள்னு இல்லாமப் போய்டுமா? பழசை விடு! இப்பக் கதையை பேசு! சுப்ரியாவும் என் பொண்ணுதான். அவளைப் பத்திக் கவலைய இன்னையோட விட்டு! நான் பார்த்துக்கறேன், புரியுதா?''

அக்காவின் இதமான பேச்சு ஆறுதலைத் தர நிம்மதியான பெருமூச்சுடன் தலையசைத்தார்.

## 2

சாப்பிட்டு முடித்து... தயாளன் சென்னைக்குப் புறப்பட்டுப் போனதும் சுப்ரியா மனம் கலங்கினாள்.

''நீ ஒழுங்காய் இருந்திருந்தால்.. நானும் ஒழுங்காய் இருப்பேனே டாடி! இப்ப வீடு விடா என்னை விட்டு.. எதை மாத்தப்போறே?''

இந்த சின்ன வீட்டிற்குள் எவ்வளவு நேரம் தான் இருப்பது? போரடித்தது அவளுக்கு!

மூன்று பெட்ரூம், ஒரு ஹால், பூஜையறை, கிச்சன், பாத்ரூம் வகையறாவுடன் மொட்டை மாடி! அவ்வளவுதான்! இந்த வீட்டின் மொத்தமும், சென்னையில் உள்ள அவள் வீட்டின் ஹாலில் அடங்கி விடும்.

அவளுக்கென்று ரோமா தன் அறையை ஒதுக்கித் தந்திருந்தான். சுப்ரியா முகம் சுளித்தாள்.

''இதுவா.. இதிலேயா நான் தங்கணும்? எங்க வீட்டு பாத்ரூம் அளவுக்குதான் இருக்கு?''

ரோமா சங்கடமாய் நெளிந்தான்.

''எனக்கு இது அதிகம். ஆனா, உனக்கு பத்தாது தான்!''

''பக்கத்து ரூம் கொஞ்சம் பெரிசாயிருக்கே? அங்கே ஷிப்ட் பண்ணு!''

''அ...அது... எங்க ஆதி அண்ணாவோடது சுப்ரியா.''

''இருக்கட்டுமே... ஸோ வாட்?''

''அ.. அண்ணனுக்கு தான் வச்சப் பொருள் வச்ச இடத்துல இல்லைன்னா கோபம் வரும். ப்ளீஸ் ... அட்ஜஸ்ட் பண்ணிக்க.''

''ஏஸியெல்லாம் இல்லையா? அட சீலிங் ஃபேன் கூட இல்லாம எப்படி உயிர் வாழறே ரோமா?''

அவளின் பேச்சில் தொனித்த ஏளனமும், கிண்டலும் அவர்களின் வசதியின்மையை சுட்டிக்காட்டுவதை நன்றாகவே உணர்ந்தாலும் ரோமாவிற்கு அவள் மீது கோபமே வரவில்லை.

''இது உங்க ஊரு மாதிரி ஹாட் இல்லை சுப்ரியா! வெலிங்டன்.



ஃப்ரிட்ஜ்ல வச்சிருக்கிற ஊரு. அதோ டேபிள் ஃபேன் இருக்கு. ஆனா, ஈவினிங்ல இந்த ஜன்னலை மூட மறந்துட்டியோ... பனிப்புகை உள்ளே நுழைஞ்சு உன்னை உறைய வச்சிடும்.. பி கேர்ஃபுல்!''

''ரியல்லி? ஜன்னல் வழியா பனிப்புகை உள்ளேயே வந்துடுமா? ஜில்லுன்னு இருக்குமா? என்னை அப்படியே.. கவர் பண்ணிக்குமா? த்ரில்லிங்கா இல்லே?'' விழிகள் விரிய ஆர்வமாய் கேட்ட போது.. ரோமாவிற்கு சிரிப்புதான் வந்தது.

''ஏன் சிரிக்கிறே?''

''ரொம்ப சாதாரண விஷயம் தான் இது? ஆனா அதைக் கூட தெரிஞ்சுக்காம.. இத்தனை வருஷமா சென்னையிலே மாசுப்பட்ட புகையிலேயே வாழ்ந்திருக்கியே...''

''வாட்... டு... டூ? இப்படி யொரு அத்தை இருக்காங்கன்றதே எனக்கு இப்ப தானே தெரியும்?''

''சென்னையை தவிர எங்கேயும் போனதில்லையா?''

''பாண்டிச்சேரி, மகாபலிபுரம் தவிர, ரெண்டு முறை கனடாவுக்கும், சிங்கப்பூர், மலேஷியாவுக்கும் ஃப்ரண்ஸோட ஜாலி டூர் போயிருக்கேன். தட்ஸால்!''

பேசிக்கொண்டே தன் லெதர் பேக்கிலிருந்து ஷாம்பூ, ஸ்ப்ரே, மாய்ச்ரைஸர் போன்ற பொருட்களை எடுத்து டேபிள் மீது வைத்தாள்.

ரோமா பெட் கவரை மாற்றிக் கொண்டே அவளை ரசித்தான்.

மூங்கில் போன்ற தேகம். பள பள சருமம். மாசு மருவில்லாத முகம். உறுத்தாத நிறத்தில் லிப்ஸ்டிக். ஒரே சீராக வெட்டப்பட்ட தோள் தாண்டி புரண்ட கூந்தலுக்கு.. அங்கங்கே விட்டு விட்டு தங்க நிறம் பூசியிருந்தாள். முழங்கால் வரை கவ்விப் பிடித்திருந்த டைட் பேண்ட்... அவளின் வழுவழுப்பபான கால்களை காட்டியது. மொத்தத்தில் பனியன் அவளின் அளவான அளவை சொல்லியது. மொத்தத்தில் சுப்ரியா அதிரடியான நாகரீகப் பட்டாசு.

''உங்கண்ணே எங்கே?''

''பெங்களூரில் வொர்க் பண்றார்!''

''ஓஹோ.. எங்கே... அவரோட போட்டோவையேக் காணோம் !''

''அதோ... ஹால்ல மாட்டியிருக்கே?''

''அதுவா.. ஏய்... அது பாரதியார் இல்லே?''

''போச்சு.. எங்கண்ணன்தான் அது! பாரதியார்னா ரொம்பப்பிடிக்கும். அதனால் அவரை மாதிரி வேஷம் போட்டு போட்டோ எடுத்துக்கிட்டாரு!''

அருகில் சென்று உற்றுப் பார்த்தவளுக்கு வித்தியாசம் புரிந்தது.

'சரிதான்.. இவனும் இவன் மூஞ்சியும்... பார்க்க சகிக்கலையே!' முதல் பார்வையிலேயே அவனைப் பிடிக்காமல் போயிற்று சுப்ரியாவிற்கு.

''ஏய் ரமா...''

"ரோமா..."

"ஸாரி.. ரோமா, ஒரு விஷயம் தெரியணுமே!"

"என்ன?"

"பக்கத்துல எதாவது ஸ்டார் ஹோட்டல் இருக்கா?"

"இ.... இல்லே சுப்ரியா. அதெல்லாம் ஊட்டியிலதான் இருக்கும். ஏன் கேக்கறே?"

"சொன்னாப் புரியாது. ஊட்டி இங்கேர்ந்து எவ்வளவு தூரம்?"

"ரோமா.. இச்சுல நீயற வாசம் வருதே... என்ன வச்சிருக்கே?"

அம்மாவின் குரலைத் தொடர்ந்து, "அச்சச்சோ.. உருளைக்கிழங்கு கறி, அத்தனையும் கரியாப் போச்சோ?" என்று ஒரே ஓட்டமாய் ஓடி விட்டாள் ரோமா.

சுப்ரியாவால் தொடர்ந்தாற்போல் ஒரு மணிநேரம் கூட அந்த வீட்டினுள் இருக்க முடியவில்லை. எளிமையான அந்த வீடும், வாயல் சேலை கட்டிய சியாமளாவையும், பகட்டில்லாத கிராமத்து அழகோடிருந்த ரோமாவும் அவளைக் கவரவேயில்லை. அவள் வயதுள்ள பெண்தான் என்றாலும், அவளை உறவுக்காரியாகவோ, அட்லீஸ்ட் தோழியாகவோ கூட ஏற்றுக் கொள்ள அவளின் பணக்கார மனம் இடம் தரவில்லை.

"பாத்ரூம் வழுக்குது... க்ளீன் பண்ணு ரோமா!"

"தரையிலே தூசியைப் பார். என் வீட்ல என் ரூம் கண்ணாடி மாதிரி இருக்கும்."

இப்படி அவளை வேலை வாங்கினாள். ரோமா வலிய வந்து ஒட்டி உறவாடினாலும் அவட்சியப்படுத்தினாள்.

அவள் தந்த டீயுடன் மொட்டை மாடிக்கு வந்தாள்.

"வாவ்!"

எங்கு திரும்பினாலும் பசுமை! அவற்றை தழுவிச் சென்ற பனிப்புகை மேகம். நான்கு மணிக்கே சூரியன் காணாமல் போய் காற்றில் ஏஸி காத்திருந்தது. நிறையவே இடை வெளிவிட்டு இங்கொன்றும், அங்கொன்றுமாய் வீடுகள். மங்கிக்குல்லாவும், ஸ்வெட்டரும் அணியாத மக்களைப் பார்ப்பதே அரியதாகியிருந்தது. கொதித்துக் கொண்டிருந்த சுப்ரியாவின் உள்ளம் அந்த சூழல் சாந்தப்படுத்தியது.

சற்று தொலைவில் அவளை நோக்கி வந்து கொண்டிருந்தது வெண் புகை. "வாவ்...வாவ்!" பெரிய புதையலையே கண்டது போல் துள்ளினாள். ஒரே நிமிடத்தில் அவள் அந்த வெண்புகைக்குள் காணாமல் போனாள்.

கண்மூடி அந்த ஜில்லிப்பை சிலிர்ப்புடன் ரசித்து உள் வாங்கிக் கொண்டாள்.

சற்று நேரத்தில் மேலே வந்தாள் ரோமா.

"இங்கே என்னப் பண்ணிட்டிருக்கே சுப்ரியா?"

"க்ளவுட்ஸ் என்னை கவர் பண்ணிடுச்சுத் தெரியுமா? ரொம்ப பிடிச்சிருக்கு..."

".....?!"



"டீ ஆறிடுச்சு... எனக்கு சூடா வேற டீ போட்டுக் கொண்டு வா ரோமா!"

ம்...."என்றபடி கீழிறங்கிப் போய்விட்டாள்.

கனமான கம்பளிக்குள் சுருண்டு கிடந்தவளுக்கு எழவே மனசில்லை. தாய் மடிக்குள் படுத்துக் கிடப்பது போல் கதகதப்பு!

லோ வால்டேஜில் சுடாத சூரியன்! மணி ஒன்பதை தாண்டி விட்டிருந்தது.

எட்டு மணிக்கே டிபன் சாப்பிட்டு பழகியிருந்த அந்த வீட்டுப் பெண்கள் சுப்ரியாவின் விழிப்பிற்காக காத்திருந்தனர்.

"பசிக்குதும்மா..."

"கொஞ்சம் பொறுத்துக்க ரோமா! பாவம் சுப்ரியா... தனியா சாப்பிட கஷ்டப்படுவா!"

"எழுப்பட்டுமா?"

"கோவிச்சுக்கப் போறா!"

"மணியப்பாரும்மா! அண்ணாவுக்கு இதெல்லாம் பிடிக்காது. ஏற்கனவே கோவமாயிருக்கு. இப்பவே சரிபண்ணினாத்தான் சரிப்பட்டு வரும்."

"அப்படிங்கறியா? சரி.. காபி போட்டுத்தர்றேன். அப்புறம் எழுப்பு!"

"ப்ரஷ் பண்ணாமலா?"

"அவளுக்கு பெட்காபி சாப்பிட்டுத் தான் பழக்கமாம். சட்டுனு எல்லாத்தையும் மாத்திட முடியுமா?"

"சரி.. சீக்கிரம் போட்டுத்தா!"

அடுத்த ஐந்தாவது நிமிடத்தில் காபியோடு போய் அவளை எழுப்பினாள்.

பெரும்பாடு பட வேண்டியிருந்தது....

"குட்மார்னிங் சுப்ரியா! இந்தா...."

"குட்மார்னிங்.. தேங்க்ஸ்!"

"பாத்ரூம்ல சுடுதண்ணி வச்சிருக்கேன்... குளிச்சிட்டு வந்துடு... சாப்பிடலாம்!"



"எதுக்கு ஒரு வாரம் லீவு போட்டு இருக்கீங்க..?"

"ஒன்றும் இல்லை என் மனைவி கூட பொங்கலுக்கு ஜவுளி எடுக்க போகணும்."

-எம்.எஸ்.வி.அருண்
புளியங்குடி.

தொள தொள இரவு உடையில் கைகளை தூக்கி கொட்டாவி விட்டபடி கட்டிலிலிருந்து இறங்கினாள்.

''சும்மா சொல்லக்கூடாது. செம குளிரு உங்க ஊரு... ஐ லைக் இட்! பந்து ஏஸிய ஒரே ரூம்ல வச்ச மாதிரி இருந்துச்சு.''

''அப்ப... இந்த ஊரை உனக்கு ரொம்ப பிடிச்சிருக்கா?''

''ஊரை பிடிச்சிருக்கு. பட், உங்க வீடு எனக்கு பிடிக்கலே!''

பிறர் மனம் புண்படுமே என்று ஆராயாமல் தன் கருத்தை சொல்வதில் தயங்குவதில்லை சுப்ரியா.

குளித்து முடித்து சாப்பிட அமர்ந்த போது மணி பத்தைத் தாண்டி விட்டது.

சியாமளா இரண்டு பெண்களுக்கும் சுடச்சுட பூரியும், கிழங்கும் பரிமாறினாள்.

அதைப் பார்த்ததும் முகம் சுளித்தாள் சுப்ரியா.

''என்ன ஆன்ட்டி இது? உவ்வே!''

''என்னம்மா?''

''என்ன டிபன் இது ? ம் ஹூம்.. வேணாம்!''

உனக்கு பூரிக்கிழங்கு பிடிக்காதுன்னு எனக்கு தெரியாது சுப்ரியா'' என்றாள் தர்மசங்கடமாய்.

''தலையெழுத்து'' என்றவள் ஒரு பூரியைக்கூட முழுதாக சாப்பிடவில்லை.

''வேற என்ன இருக்கு?'' என்று கேட்டாள்.

தாயும் மகளும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர்.

## 3

''இ... இப்ப வேற எதுவும் இல்லைம்மா! அஞ்சு நிமிஷம் பொறுத்துக்கிட்டா... உப்புமா செய்து தருவேன்.''

''ச்சீ... உப்புமாவா? அதை என் பங்கஜ் கூட சாப்பிட மாட்டான்''

''பங்கஜா? அது யாரு?''

''என்னோட நாய்க்குட்டி!'' என்றவள் கையை உதறிக் கொண்டு எழுந்துப் போனாள்.

சியாமளா உடனடியாக எழுந்த வேதனையை துடைத்துப் போட்டு விட்டு அவள் கரத்தை வாத்சல்யத்துடன் பற்றினாள்.

''உனக்கு வேற என்னல்லாம் பிடிக்கும்னு சொல்லு... நாளைலேர்ந்து சமைச்சுத் தர்றேன்.''

''நிஜமாவா?''

''கண்டிப்பா!''

''ம்.... ஷம்மி கபாப், பேஷ்வரி, சன்னா பனீர், பிட்சா டாகாடக்...''

''இ....இதெல்லாம் என்ன சுப்ரியா?'' என்றாள் மலைப்புடன்.

''சைனீஸ் புட்!''

''இதெல்லாம் வாயிலேயே நுழையிலியே...''

இட்ஸ் ஓக்கே... அட்லீஸ்ட் மட்டன், சிக்கனாவது சமைப்பீங்க இல்லே...?''

''சமைச்சுத் தர்றேன்ம்மா!''

அடுத்தடுத்து வந்த நாட்களில் இருவருமே அவளிடம் நொந்து போகின்றனர்.

''ரோமா...!''

''சொல்லு சுப்ரியா!''

''உங்க வீட்ல சொர்வண்ட் யாருமில்லையா?''

''எதுக்கு சுப்ரியா? அண்ணன் பெங்களூருல இருக்கு. இங்கே நானும் அம்மா மட்டும் தான்! எல்லா வேலையும் நாங்க ரெண்டு பேருமே செஞ்சுடுவோம்.''

''துணியெல்லாம் யாரு வாஷ் பண்றது?''

''நான் தான்!''

''அப்ப சரி... என் அழுக்குத் துணியெல்லாம் வாஷ் பண்ணிடு!''

''நா...னா?''

''ஏன்... நீதானே வாஷ் பண்ணிட்டிருக்கே? டோன்ட் வொர்ரி... நீ எனக்கு ப்ரீயா செய்ய வேண்டாம். எல்லாத்தையும் காம்பன்சேட் பண்ணிடுவேன்... ஓக்கே?''

பதில் கூறாமல் சிரித்தபடி அழுக்குத் துணிகளை அள்ளிக் கொண்டு சென்றாள்.

அவள் அகன்றதும் 'டேப்'பில் 'தூம்' இந்திப்படப் பாடலை போட்டு துள்ளித் துள்ளி டான்ஸ் ஆட ஆரம்பித்தாள்.

சத்தம் அந்த ஏரியாவையே கிடுகிடுக்க வைத்தது.

''அம்மா... என்னம்மா இது?'' அம்மாவை பயத்துடன் பார்த்தாள்.

''பாவம்டி அவ... இந்தவேலை எல்லாம் அவளுக்கு பழக்கமில்லே... குடு நான் துவைச்சுத் தர்றேன்!''

''இது பெரிய விஷயமில்லேம்மா! நானே துவைச்சுக்கறேன். ஆனா, அவ நம்மளை வேலைக்காரி மாதிரி நினைக்கிறது தான் கஷ்டமாயிருக்கு. நம்மளை விட்டு... ஏற்கனவே அண்ணனுக்கு இதுல உடன்பாடில்லை. இந்த மாதிரி அண்ணன் பார்த்துச்சுன்னா...அவ்ளோ தான்!''

''பார்த்துக்கலாம் விடு! மாறிடுவா... அந்த நம்பிக்கை எனக்கிருக்கு.''

சொல்லி முடிக்கவில்லை... போன் அலறியது.

சியாமளா எடுத்து, ''ஹலோ'' என்றாள்.

''ஹலோ...அம்மா நான்தான்!''

''ஆதி... உனக்கு ஆயுசு நூறுப்பா... இப்பதான் ரோமாகிட்டே உன்னைப் பத்தி பேசிக்கிட்டிருந்தேன்''

''உன் வீலிங் பிராப்ளம் எல்லாம் எப்படியிருக்கு?''

''பரவாயில்லேப்பா!''

''உடம்பை பார்த்துக்கம்மா. ரோமா என்ன பண்ணிட்டிருக்கா?''

''துணி துவைச்சிட்டிருக்கா!''

''அவளை இன்னொரு வீட்டுக்கு அனுப்பப் போகிறோம்.

எம்மா இந்த வேலையெல்லாம் செய்யச் சொல்றே? வேலைக்கு ஆளைப் போடும்மா. நீயும் நல்லா ரெஸ்ட் எடும்மா!''

''சரிப்பா... நீ எப்படி இருக்கே? நீ எங்கோ ஒரு மூலையிலே... நாங்க ஒரு மூலையிலே... கஷ்டமா இருக்கு ஆதி!''

''எல்லாத்துக்கும் ஒரு தீர்வு சீக்கிரம் கிடைச்சிடும்மா. ஆமா... வந்தாரா உங்க பணக்கார தம்பியும், அவரோட செல்வபுத்திரியும்?''

''வந்துட்டாங்க ஆதி...!''

''எதுக்கும்மா உனக்கு வயசான காலத்திலே தேவையில்லாத வேலையெல்லாம்? அவங்க உறவே நமக்கு வேணாம்னு சொன்னேன்... கேட்கலையே....

''பாவம் பா சுப்ரியா!''

''சுப்ரியாவா... யாரது?''

''என் தம்பிப் பொண்ணு!''

''இதோப் பாரும்மா... நம்ம வீட்லேயும் வயசுப் பொண்ணு இருக்கு. உன் தம்பி பொண்ணைப் பார்த்து ரோமா மனசு தடுமாறிடக் கூடாது. சீக்கிரம் அவளை அனுப்பி வைக்கிற வழியப்பாரு... வச்சிடறேன்!''

''அம்மா... குடும்மா நான் பேசறேன்!'' ரோமா ஆர்வமாய் கையை நீட்டினாள்.

''இல்லடி... வச்சிட்டான்!''

''என்கிட்டே பேசாம அண்ணன் வைக்காதே!''

''கோவத்துல வச்சிட்டான்!... என்றாள் வருத்தமுடன்.

''ஏம்மா?''

குரலை தாழ்த்தி, ''சுப்ரியாவை சீக்கிரம் வீட்டை விட்டு அனுப்பிடணுமாம். பாவம்... அந்தப் பொண்ணு என்னடி பண்ணினா? அவங்கப்பன் ஒதுங்கியிருந்தான். அது அவன் தப்பு! அவளைப் பார்க்காமலேயே அவமேலே அவ்வளவு கோபமா இருக்கான்.... ஹூம்!''

''சுப்ரியா பாவம் தான். ஆனா அவபண்ற அமர்க்களத்தை கண்டிப்பா அண்ணன் ஒத்துக்காது. அவகிட்டேயே பேசிப்பாரேன்ம்மா...''

''இங்கேர்ந்து போய்டுன்னா?''

''சேச்சே... அவளோட சில பழக்க வழக்கங்களை மாத்திக்க சொல்லு!''

''எப்படி சொல்றது? கேட்டுக்குவாளா?''

கேட்டுத்தானே ஆகணும்!''

''கொஞ்சம் விட்டுப் பார்ப்போம்!''

மூச்சடைப்பது போல் இருந்தது சுப்ரியாவுக்கு!

அப்படி இப்படி என்று பத்துநாளை கஷ்டப்பட்டு ஓட்டியாகி விட்டது. ஒவ்வொரு மணித்துளியும் அவளுக்கு சம்மந்தமில்லாத் கணங்கள்! அவள் இது நாள் வரை வாழ்ந்த வாழ்க்கையே வேறு! இந்த பத்து நாட்களாய் வாழ்ந்த வாழ்க்கை வேறு. அது சொர்க்கம் என்றால்... இது நரகம்!



எதற்காக நான் இங்கிருக்க வேண்டும்? அப்பா தன் உயிரை மாய்த்துக் கொள்வேன் என்று மிரட்டியதற்கு பயந்து ஏன் பணிந்தேன்? சே...! இந்த வீட்டைத் தவிர எந்த அவுட்லெட்டும் இல்லை. பைத்தியமே பிடிச்சிடும் போலிருக்கிறதே!''

எரிச்சலுடன் ஜன்னலைத் திறந்தாள்... சில்லென்று முகத்தை உரசியது குளிர். கொஞ்சம் கொஞ்சமாய் மனச்சூடு குறைய ஆரம்பித்தது.

கைகளை மார்புக்கு குறுக்கே கட்டிக் கொண்டு சற்று நேரம் காற்றை உள்ளிழுத்து சுவாசித்தாள்.

ரோமா கேட்டைத் திறந்துக் கொண்டு வெளியே செல்வது ஜன்னலிலிருந்தே தெரிந்தது.

எங்கே போகிறாள்?

''ரோமா... ஏய்... ரோமா!''

கையை தட்டி கூப்பிட்டாள்.

ரோமா நின்றாள். கேட்டருகே ஓடி வந்தாள் சுப்ரியா.

''ஏய்... எங்கே போறே?''

''லைப்ரரிக்கு!''

''லைப்ரரி? நீயா? இதென்ன கையிலே புக்ஸ்?''

''படிச்சிட்டேன்....குடுத்துட்டு வேற எடுத்துட்டு வரணும்னு தான் போய்ட்டிருக்கேன்.''

''நானும் கூட வர்றேன்!''

''நீயுமா? அம்மாகிட்டே சொல்லிட்டு வாயேன்!'' என்றாள் தயக்கமாய்.

''பரவாயில்லேடி... கூட்டிட்டுப்போ! வீட்டுக்குள்ளேயே அடைஞ்சுக்கிடந்தா போர் அடிக்காதா? நீ போ சுப்ரியா!''

அவர்கள் பேசுவதை கேட்டுக் கொண்டிருந்த சியாமளா அவள் செல்வதை அனுமதித்தாள்.

நடந்தார்கள்.

''ஒரு கிலோ மீட்டர் நடக்கணும்... உன்னால முடியுமா சுப்ரியா?''

''உன் வீட்ல இருக்கறதுக்கு பத்து கிலோமீட்டர்கூட நடப்பேன்! என்ன புக்ஸ் அது?'' என்று கை நீட்டினாள்.

கொடுத்தாள்.



வாங்கிப் பார்த்தவள் அதிர்ந்து போனாள்.

"ஏய்... அத்தனையும் இங்லீஷ் நாவல்ஸ்? இதை எல்லாம் நீயா படிக்கிறே?"

"ஆமாம்!"

"என்ன படிச்சிருக்கே ரோமா?"

"பி.பி.ஏ.!"

"....?!" இன்னும் வியப்பு கூடிற்று.

"டிகிரி படித்தவள். ஆனால், பேச்சிலோ, செயலிலோ துளியும் வெளிக்காட்டிக் கொள்ளாமல், நான் சொல்கிற வேலைகளை எல்லாம் செய்தாள். என் துணிகளைக் கூட துவைத்தாளே... எப்படி?'

பிரம்மிப்பும், புதிதாய் ஏற்பட்ட மரியாதையுமாய் அவளை ஏறிட்டுப் புன்னகைத்தாள். அதில் சிநேகபாவம் இருந்தது.

"என்ன சுப்ரியா?"

"ஒண்ணுமில்லே!" என்றபடி அமைதியாய் நடந்தாள். வளைந்து நெளிந்த பாதையின் இருபக்கமும் தேயிலைத் தோட்டங்களும், முட்டை கோஸ், கேரட், உருளைச் செடிகளும் கண்ணைப் பறித்தன.

ரோமா ஒவ்வொன்றையும் சுட்டிக் காட்டி விளக்கிச் சொல்லிக் கொண்டு வர... குழந்தையைப் போல் ஆர்வமாய் கேட்டுக் கொண்டு வந்தாள்.

இதற்கு முன் சுப்ரியா அவளைப் பார்த்த பார்வைக்கும், இப்போது பார்க்கிற பார்வைக்கும் வித்தியாசம் இருந்தது.

மனசிற்குள் குற்ற உணர்வு தலை தூக்கியது.

# 4

"சுப்ரியா"

"ம்..."

"உனக்கு கடவுள் நம்பிக்கை இருக்கா?"

"சொல்லத் தெரியலே..."

"என்ன பதில் இது?"

"நான் இதுவரைக்கும் கோவிலுக்கெல்லாம் போனதில்லே... வீட்டிலேயும் கூட சாமி கும்பிட்டதில்லே..."

"அப்ப வீட்ல பூஜையெல்லாம் யாரு பண்றது? உங்க அப்பாவா?"

"டாடியா? அவருக்கு பிஸினஸ் பார்க்கறதுக்கே நேரம் போதாது. வேலைக்காரங்க தான் பண்ணுவாங்க. உங்க வீட்ல யாரு பண்ணுவாங்க?"

"நானும் அம்மாவும் தான்!"

"ஏய்... நான் பார்த்ததில்லையே!"

"காலையிலே ஆறு மணிக்கு!" என்றாள் சிரிப்பை மென்றபடி.

"ஓ... என் உலகம் விடியாதப்பவா? ஆமா, ஏன் இதையெல்லாம் கேக்கறே?"

"இந்த ஏரியாவுல ஒரு முருகன் கோவில் இருக்கு. போய்ட்டு வரலாம்னுதான்!"



"நோ...நோ... ஐம் நாட் இன்ரஸ்ட்!"

"பரவாயில்லே சுப்ரியா!"

"உனக்கு இங்கே போரடிக்கலையா ரோமா? பொழுதுபோக்க இங்கே ஒண்ணுமே இல்லையே...?"

"ம்ஹூம்... அருமையான க்ளைமேட்! சுட்டெரிக்காமல் இதமாய் வருடும் சூரியன், பசுமையான மலைமுகடுகள், பசுஞ்சோலைகள், வெண்மேகக் கூட்டங்கள்... இதைவிட வேறென்ன வேணும் சுப்ரியா? சென்னையிலே இருக்கச் சொன்னா... ரெண்டு நாள்கூட என்னால இருக்க முடியாது. அமைதியான சூழ்நிலையும், தைலகாற்றையும் சுவாசித்து விட்டு, இயந்திரத்தனமான சூழ்நிலையும், டீசல் புகையையும் சுவாசிக்க என்னால முடியாது."

"சப்போஸ் உனக்கு சென்னையிலே மாப்பிள்ளை அமைஞ்சிட்டா?"

"அமையாது!"

"எப்படி அவ்ளோ உறுதியாச் சொல்றே?"

"எங்கண்ணனுக்கும் சரி, எனக்கும் சரி, இதே ஊர்ல தான் வரன் பார்க்கணும்னு முடிவு பண்ணியாச்சு!"

"அது சரி... அப்படியென்ன சென்னை மேல அவ்ளோ கடுப்பு? உங்க ஊரு அழகுதான்... இல்லேங்கலே... ஆனா, வாழ்க்கைக்கு தேவையான அத்தனை விஷயமும் சென்னையிலேதான் இருக்கு. பலகோடி பேரோட வாழ்க்கையும் அங்கே தான் துவங்குது. எத்தனை தொழிற்சாலைகள், வேலைவாய்ப்புகள், ரிலாக்ஸ் பண்ணிக்க தோதான இடங்கள்? எங்க ஊரை அடிச்சுக்க ஆளே இல்லையாக்கும்!" அவளிடம் சரளமாய் பேசத் துவங்கினாள் சுப்ரியா.

"இவ்ளோ நல்லா, ஜாலியாப் பேசறே! இத்தனை நாளா ஏன் உம்முனு இருந்தே?"

"என் டாடி மேல கோபம்!"

"அட...ஏன்?"

"ஃப்ரெண்ட்ஸோட பழகறது தப்பா ரோமா?"

"சேச்சே... யார் சொன்னது?"

"என் டாடிதான்! அவங்களோட சேர்ந்து கெட்டுப் போறேனாம். மனசு திருந்தணுமாம்... அதனால இங்கே கொண்டு வந்து விட்டுட்டார். தப்பா எடுத்துக்காதே ரோமா. டஞ்ஜன் மாதிரி இருக்கு உங்க வீடு. எங்க வீட்டை பார்த்ததில்லையே... அஞ்சு கிரவுண்ட்ல கட்டினது. எவ்ளோ பெரிசா இருக்கும்னு கற்பனை பண்ணிப்பார்! கஷ்டமா இருக்கு ரோமா... என் டாடிய நான் பழிவாங்காம விடமாட்டேன்!" கோபத்தில் முகம் சிவந்துப் போயிற்று.

நடு வழியில் மண்ணிலிருந்து கேரட்டைப் பிடுங்கி கழுவிக் கொடுத்தாள்.

"சாப்பிடு... நல்லாயிருக்கும்!"

"ஐ லைக் யூ ரோமா!" என்றபடி கேரட்டை கடித்தாள். பேச்சை

திசைமாற்ற விரும்பியவள், "தாங்க்ஸ் சுப்ரியா! உனக்கு ரொம்ப பிடிச்ச பிரண்ட்ஸ் யாரு?"

"ம்... திலக், கோகுல், கண்ணா, பிரான்சிஸ், விக்டர், மோனு, ஹமீது ஜான், வாசன், பிரிட்டோ...."

"ஒரு கேர்ள் பிரண்ட் கூட இல்லையா?"

"இருக்காங்க... பட் உண்மையா பழக மாட்டாங்க. ஒரு எல்லையோட நிறுத்தி வச்சிடுவேன். பாய் பிரண்ட்ஸ் எனக்காக உயிரையும் தருவாங்க. குட் பாய்ஸ். அவங்களோட தான் டிஸ்கொதே போவேன். அவங்களை ரொம்ப மிஸ் பண்றேன் ரோமா!"

உள்ளுக்குள் அதிர்ந்தாலும் வெளிக்காட்டிக் கொள்ளவில்லை ரோமா.

"என்ன அமைதியாய்ட்டே ரோமா? எனக்கு நிறைய பாய் பிரண்ட்ஸ் இருக்காங்கன்னா? அவங்களோட பழகுறது தப்பா என்ன?"

"சேச்சே! மனசு சுத்தமாயிருந்தா யார் கூட வேண்டுமானாலும் பழகலாம். அதுவும், நீ இருக்கிற இடம், சொஸைட்டிக்கு இது சாதாரண விஷயம். ஆனா...

"சொல்லு!"

"டிஸ்கொதே, பார்ட்டி இதெல்லாம் அநாவசியம்னு நினைக்கிறேன்!"

வாய்விட்டு சிரித்தாள்!

"கிட்டத்தட்ட நீயும் என் டாடி மாதிரியே பேசறே! என் சூழ்நிலை, மனசு, ஏக்கம் இதெல்லாம் யாருக்கும் தெரியாது. சொன்னாலும் புரியாது. நான் செஞ்சதெல்லாம் தப்பே இல்லே... தட்ஸால்!" என்றாள் ஆணித்தரமாக.

அப்போது... வளைவிலிருந்து ஒரு கார் வெளிப்பட்டு, இவர்கள் முன் பிரேக்கிட்டு நின்றது.

அதிலிருந்து சிவப்பாய், உயரமாய் அழகான இளைஞனொருவன் இறங்கினான்.

"ஹாய் ரோமா... எங்கே லைப்ரரிக்கா?"

"அ... ஆமாம்!" என்றாள் சுப்ரியாவை சங்கடத்துடன் ஏறிட்டு.



"உன்னோட அப்பா பேரை எழுதி பீரோவுல ஏன் பத்திரமா பூட்டி வச்சிருக்கே...!"

"எங்கப்பா இறக்கும் போது... 'நீ எம் பேச்சத்தான் கேட்கல... என் பேரையாவது காப்பாத்து'ன்னு சொன்னாரு!"

-ச.ஆ.கேசவன், இளம்மணியாச்சி.



சுப்ரியாவும் அவனை கேள்வியை சுமந்துப் பார்த்தாள்.

"ஆமா... இவங்க யாரு ரோமா? உங்க வீட்டுக்கு மாமா பொண்ணு வந்திருக்கிறதா சொன்னியே... அந்த சுப்ரியாவா?"

"என்ன ரோமா... என் ஜாதகத்தையே புட்டு புட்டு வைக்கிறார்... யாரிது? அறிமுகப்படுத்தி வைக்கறது நாகரிகம்."

"சுப்ரியா... இ... இவர் அஸ்வின், என்னோட வுட்பி!"

"வுட்பி?" பெரிதாய் அதிர்ந்தாள்.

"அப்ப... இதுவரைக்கும் இவ உங்ககிட்டே என்னைப்பத்தி எதுவும் சொன்னதில்லையா? நானே சொல்றேன்" என்று வசீகரமாய் சிரித்தான்.

பார்த்தாலே பணக்காரக் களை தெரிந்தது.

"மிஸ். சுப்ரியா. என் பேரு அஸ்வின். இதோ கண்ணுக் கெட்டின தூரம் வரைக்கும் பரந்து விரிந்திருக்கிற இந்த அஸ்வின் எஸ்டேட் எங்கள் குடும்பத்துக்கு சொந்தமானது. அம்மா, அப்பா, ஒரு தங்கை மட்டுமே. தங்கைக்கு கல்யாணமாகி மலேஷியாவுல இருக்கா. ரோமாவை எனக்கு சின்ன வயசிலேர்ந்தே தெரியும். பட். ரெண்டு வருஷமா காதலிக்கிறோம். அடுத்த வருஷம் கல்யாணம்.... ரெண்டு பேர் குடும்பத்தோட சம்மதத்தோட! என்னப் பார்க்கறீங்க? என் பேரண்ட்ஸ் ரொம்ப நல்லவங்க. ஜாதி, அந்தஸ்தெல்லாம் பார்க்கறவங்க இல்லே. ரோமாவை அவங்களுக்கும் நல்லா தெரியும். அவளோட குணத்தை பத்தியும் தெரியும். அதனால எங்க காதலுக்கு பச்சைக்கொடி காட்டிட்டாங்க. எங்க கல்யாணத்துக்கு கொஞ்சம் முரண்டு பிடிச்சதென்னவோ, இவளோட அண்ணன் ஆதித்யாதான்! என் பிரண்ட், இன்ட்ரஸ்டிங் பர்ஸன். பொதுவா பணக்காரங்கன்னாலே நல்ல அபிப்ராயம் இல்லாதவன். அவனுக்கு எடுத்துச் சொல்லி புரிய வைக்கிறதுக்குள்ளே... விதை விதைச்சு அறுவடையே பண்ணியாச்சு."

முதல் சந்திப்பிலேயே அதிகமாய் பேசிய அவனைப் பார்த்து சிரித்தாள்.

"க்ளாட்டு மீட் யூ மிஸ்டர் அஸ்வின்!"

"நைஸ் மீட்டிங் யூ!" நீட்டிய கையைப் பற்றிக் குலுக்கினான்.

வீட்டிற்கு வந்தபிறகும் அவளை கேள்விகளால் துளைத்தாள் சுப்ரியா.

"உன்னை நினைச்சா பல விஷயங்கள்ல ஆச்சர்யமாயிருக்கு ரோமா. முதல் ஆச்சர்யம் நீ காதலிச்சது. அதெல்லாம் கூட உனக்குத் தெரியுமா?"

".....?!"

"பெரிய எஸ்டேட் ஓனரை கல்யாணம் பண்ணிக்கப் போறே. ஆனா, இவ்வளவு எளிமையா இருக்கே. வீட்டு வேலையெல்லாம் செய்யறே! அவ்வளவு ஏன் நானே உன்னை விரட்டி, விரட்டி வேலை வாங்கி இருக்கேன். ஆனா, முகம் சுளிக்காம என் டிரஸ்லை எல்லாம் துவைச்சுக் கொடுத்தே! எப்படி முடிஞ்சது உன்னால?"

"இத்தனை ஆச்சர்யம் எதுக்கு சுப்ரியா? அஸ்வின், தன்னை எப்பவுமே பணக்கார வீட்டுப் பிள்ளையா நினைச்சதே இல்லே. எளிமையானவர். யூ... தேக... எங்க அப்பா அவங்க எஸ்டேட்ல தான்

மேனேஜரா வேலை செய்தார். சின்னவயதிலேர்ந்தே அஸ்வின் கூடயும், அவர் தங்கைக் கூடயும் விளையாடியிருக்கேன். அஸ்வினோட குணங்கள் என்னை ரொம்ப கவர்ந்திருந்தாலும் என் காதலை நான் வெளிப்படுத்தியதில்லை. அவருக்கும் என்மேல ஒரு சாப்ட் கார்னர் இருந்துச்சு. அவர் தான் முதல்ல லவ்வை சொன்னார்.

''வெரி இன்ட்ரஸ்டிங். அப்புறம்?''

''எங்கப்பாவும் சரி, அம்மாவும் சரி நம்ம வேலைய நாமளே செஞ்சுக்கணும்னு சொல்லி... சொல்லி வளர்த்தாங்க. வீட்டு வேலை செய்யறதும் எக்சர்சைஸ் தானே? தவிர, நீ வளர்ந்த சூழ்நிலை வேற. செய்யக் கஷ்டப்படுவே. அதனால தான் உன் டிரஸ்ஸை எல்லாம் துவைச்சேன். நீ யாரு... வேத்து மனுஷியா? எங்க மாமாப் பொண்ணு! செய்யறதுல என்ன தப்பு?''

முதன் முறையாய் உறவு முறையை சொல்லி உரிமையாய் பாசம் காட்டிய முதல் மனுஷி ரோமா தான். கப்ரியா நெகிழ்ந்து போய் அவளின் கையைப் பற்றி அழுத்தினாள்.

''ரொம்ப தேங்க்ஸ் ரோமா!''

''எதுக்கு?''

''என் மேல நீ வச்சிருக்கிற பிரியத்துக்கு?''

# 5

''இந்தா...! ரோமா ஒரு கவரை நீட்டினாள்.

''என்ன இது?'' வியப்புடன் கேட்டாள்.

''ஸ்வெட்டர்... அம்மா வாங்கிட்டு வந்தாங்க. போட்டுப்பாரு... சைஸ் சரியா இல்லேன்னா வேற மாத்திக்கலாம். தெரிஞ்ச கடைதான்...''

''எனக்கெதுக்கு ரோமா?''

''பிளீஸ் கப்ரியா... டேக் இட்! நீ குளிர்ல நடுங்கறதை பார்த்தேனே... உடம்புக்கு வந்துடப் போகுது...''

மனசேயில்லாமல் வாங்கிக் கொண்டாள். உல்லன் ஸ்வெட்டர்தான்! ஆனால், இதுமாதிரி சாதாரண விலையில் வாங்கி உடுத்தும் பழக்கம் அவளுக்கு இருந்ததில்லை. அந்த கவரை கட்டிலின் மேல் வீசி எறிந்தாள்.

அவளுக்கு இந்த ஊரையும், பனிமேகத்தையும், சில நாட்களாக ரோமாவையும் தான் பிடித்திருக்கிறது. மற்றபடி இந்த வீடோ, அத்தையோ பிடிக்கவேயில்லை.

சென்னையில் ஒவ்வொரு கணங்களையும் அவள் ரசித்து அனுபவித்த விதமே வேறு! வண்ணமயமான நாட்கள்! அவள் மனதைப் புரிந்த நண்பர்கள். டிஸ்கொதே ஹாலும், பிட்ஸா கார்னரும், காபி ஷாப்பும், மாயாகாலும்... ஹூம்!

'எப்படி மனசு வந்தது டாடிக்கு? என்ன தப்பு பண்ணிவிட்டேன் என்று இங்கு வந்து விட்டுட்டுப் போனார்? நோ... என் சுதந்திரத்தை பறிக்க யாருக்கும் உரிமையில்லை. நீங்களே வந்து என்னை



சென்னைக்கு அழைச்சிட்டு போகாம நான் விடப் போவதில்லே!'

கப்ரியாவின் நிலையற்ற மனசு எதிலும் திருப்தி கொள்ளவில்லை.

போரடிக்கிறதே... என்ன பண்ணலாம்? நான் பழகற அளவுக்கு தகுதியுள்ள ஜென்ட்ஸ் இங்கே யாரிருக்கா? அஸ்வின்? யெஸ்! குட்சாய்ஸ், பட், நான் அவன்கிட்டே பேசறேன்னு ரோமா கோவிச்கப்பாளா? படிச்ச பட்டிக்காடாச்சே...! ம்... என்னதான் பண்றது? கோகுலுக்கு போன் பண்ணி இங்கே வரச் சொல்லலாமா? யா... தட்ஸ் கரெக்ட்!''

அடுத்த நொடியே செல்போனில் அவன் நம்பரை அழுத்தினாள். மறுகணமே லைனில் வந்தான் கோகுல்.

''ஹாய் ஹனி... எங்கேயிருக்கே... எப்படியிருக்கே?''

''அதையேன்டா கேக்கறே? தயாளன் என்னை வெலிங்டன்ல பேக் பண்ணி உட்கார வச்சிட்டார்!''

''யூ மீன் டாடி?''

''அந்தாளேதான்!''

''என்ன கப்ரியா... டாடியப்போய் மரியாதையே இல்லாம...''

''அந்தாளைப் பத்தி விடு! நீ ஏன் எனக்கு போனே பண்ணலே? முழுசா இருபது நாள்... நீயும் சரி... நம்ம செட்ல உள்ள யாருமே எனக்கு போனேப் பண்ணலே... ஏன்டா?''

''அது... வந்து!''

''என்னாச்சு?''

''உங்க டாடிதான் எங்க எல்லாரையும் வார்ன் பண்ணினார். உனக்கு போன் பண்ணக் கூடாதுன்னு மீறிப் பண்ணினா சைபர் கிரைம்ல பிடிச்சுக் கொடுத்துடுவேன்னார். அதான்! ஆனா, நீயாப் பேசினா எனக்குப் பிரச்சனையில்லை. நானே உன் காலுக்காக வெய்ட் பண்ணிட்டிருந்தேன்!''

''ஓ... இவ்வளவு தூரம் போய்ட்டாரா டாடி!

அவருக்கு சரியான லெஸனை நான் கத்துத் தர்றேன். கோகுல் நான் சொல்றதை கேப்பியா?''

''ஷ்யூர்... சொல்லுடா!''

''நீ இங்கே வர்றியா!''

''எங்கே வெலிங்டனுக்கா?''

''ஆமாம்!''

''வர்றதுப் பத்தி பிரச்சனையில்லே. உங்கப்பாவுக்குத் தெரிஞ்சா?''

''எந்தப் பிரச்சனையும் ஆகாது. நீ வா! இங்கே பக்கத்துல நல்ல ஹோட்டல் எதுன்னு விசாரிச்சுட்டு வா! டிஸ்கொதே கையும் காலும் பரபரன்னு இருக்கு. ஷாம்பெய்னும் எடுத்துட்டு வா!''

''ஷ்யூர்... ஷ்யூர்... குளிருக்கு கதகதப்பா இருக்குமே... நீ இப்ப எங்கே தங்கியிருக்கே?''

சொன்னாள்.

''நான் அங்கே வந்தா சரியா வருமா?''

"கார்லதானே வர்றே? என்னை பிக்கப் பண்ணிக்க. ரெண்டு நாள் கழிச்சு மறுபடி இங்கேயே விட்டு, விஷயம் டாடிக்குப் போய்.. அவரா ஓடி வந்து என்னை சென்னைக்கு அழைச்சிட்டு வந்துடுவார்!"

"நீ சொல்றதெல்லாம் சரிதான் சுப்ரியா. உங்கப்பா என்னை சும்மா விடுவாரா?"

"என்ன பண்ணிட முடியும்? நான் உன்னை காப்பாத்தறேன். உன்னை கல்யாணப் பண்ணிக்கிட்டாவது!"

"எய்... எய்... என்னச் சொன்னே?"

"உடனே கனவு காணாதே! உன் மேல அந்த மாதிரி எண்ணமெல்லாம் எனக்கு இல்லே. அப்படி ஒரு சூழ்நிலை ஏற்பட்டால்... உன்னைக் காப்பாத்த அந்த முடிவுக்கு வரவும் தயங்கமாட்டேன்னு சொல்ல வந்தேன்!"

முதிர்ச்சியில்லாத அந்த பேச்சில் மதிமயங்கிப் போனான் கோகுல்.

அழகும், அந்தஸ்தும் குவிந்திருந்த சுப்ரியா மீது டன் டன்னாய் ஒரு தலைக் காதல் கோகுலுக்கு. அவள் அவனுடன் இழைந்துப் பழகும்போது எல்லாம் "ஐ லவ் யூ" என்ற வார்த்தை வாய்வரை வந்து விழுங்கியிருக்கிறான். ஏனோ, அந்த வார்த்தையை மட்டும் சொல்ல அவனுக்கு தைரியம் வந்ததேயில்லை.

"நிஜமாதான் சொல்றியா சுப்ரியா?"

"டேய்... எத்தனை முறை சொல்லுவேன்? நான் சொல்ற மாதிரி செய்... ஓக்கே?"

"சரி... சரி... நான் உடனே கிளம்பி வர்றேன்!"

"அக்கா... சுப்ரியா எப்படியிருக்கா? ரொம்ப டிஸ்டர்ப் பண்றாளா?" தயாளன் போனில் விசாரித்தார்.

"அதெல்லாம் ஒண்ணுமில்லடா... விளையாட்டுத்தனமான பிள்ளை! அவ்வளவுதான். அவளைப்பத்திய கவலைய விட்டுட்டு உன் பிஸினஸை கவனி.

"உங்ககிட்டேயெல்லாம் நல்லாப் பழகறாளா?"

"ரோமாக்கிட்டே ஒட்டிக்கிட்டா..."

"அவ நன்மைக்குதான்னாலும்... அவளை அங்கே விட்டுட்டு இருக்க முடியலேக்கா. இந்த ஒரு மாசமா நான் சரியாவே தூங்கலே. இத்தனை வருஷத்துல அவளை இத்தனை நாளா பிரிஞ்சிருந்ததே இல்லே."

"இவ்வளவு பாசமாயிருக்கே... அப்புறம் ஏன்டா உன்னை வெறுக்கிறடா?"

"அது வெறுப்பு இல்லேக்கா... கோவம்!"

"சரி விடு! இதுவும் நல்லதுக்குதான். பொட்டைப்புள்ள என்னைக்கிருந்தாலும் வேறொரு வீட்டுக்கு சொந்தமாகப் போறவதானே? இந்தப் பிரிவை பழகிக்க! இரு... சுப்ரியாகிட்டே கொடுக்கிறேன் பேசு!"

"வேணாங்க்கா... அவ என்மேல கோபமாயிருக்கா அவகிட்டே



பேசட்ரை பண்ணும்போதெல்லாம் கட் பண்ணிடறா. நான் அப்புறம் பேசறேன். உடம்பைப் பார்த்துக்க... வச்சிடறேன்!"

"சரிப்பா!"

அன்றிரவு!

ரோமாவின் பதற்றமான குரல்கேட்டு உறக்கம் கலைந்தாள் சுப்ரியா.

அம்மா... அம்மா... உனக்கு ஒண்ணுமில்லேம்மா... கொஞ்சம் பொறுத்துக்கம்மா... இந்தா இந்த மாத்திரைய போட்டுக்கம்மா... கொஞ்ச நேரத்துல வலி சரியாய்டும்...

பயப்படாதேம்மா! "என்றவளின் குரல்தான் பயத்தில் நனைத்திருந்தது. சுப்ரியா எழுந்து வந்தாள்.

"என்னாச்சு?"

"அம்மாவுக்கு நெஞ்சுவலி சுப்ரியா, ப்ளீஸ்... கொஞ்சம் பார்த்துக்கறியா... நான் ஆட்டோ, டாக்ஸி எதுவாவது அழைச்சிட்டு வந்துர்றேன்."

"கருச்சிதைவு பண்ணுகிற டாக்டர்கள் எல்லாம் சேர்ந்து டி.வி.யில் நிகழ்ச்சி நடத்துகிறார்களாம்..."

"அப்படியா.... தலைப்பு...?"

"கலைக்கப்போவது யாரு?"

-எம்.அசோக் ராஜா,
அரவக்குறிச்சிப்பட்டி.



"இந்நேரத்திலா?"

"யோசிக்க நேரமில்லே... டாப்லட் கொடுத்தும் வலி குறையல... நான் வந்துடறேன்" அவளுக்கு மட்டுமே கேட்கும்படி உரைத்துவிட்டு ஓடினாள் ரோமா.

நள்ளிரவு ஒரு மணிக்கு... தாயின் உயிரைக் காப்பாற்ற பதைபதைத்து ஓடும் ரோமாவை பார்க்கையில் ஆச்சர்யமாய் இருந்தது.

"இந்த மாதிரி ஒரு சூழ்நிலை எனக்கு ஏற்பட்டால் இந்தளவுக்கு நான் பதறுவேனா?

'இல்லை' என்றுதான் அவள் மனசாட்சி பதில் சொல்லியது.

சியாமளா வலியில் முகம் கருங்க... நெஞ்சைத் தடவியபடி சுருண்டுக் கிடந்தாள். வியர்வையில் தெப்பமாய் நனைந்திருந்தாள்.

"ஆன்ட்டி... என்ன பண்ணுது?"

"வா... வலி... க்குதும்மா... ரோ...மா... ரோமா எங்கே?

"இதோ... இப்ப வந்துடுவா...!"

வாசலுக்கு வந்தாள். அணிந்திருந்த கம்பளியைத் தாண்டி குளிர்காற்று உடம்பைத் துளைத்தது. சாலையேத் தெரியாத அளவுக்கு பனிப் புகை படர்ந்திருந்தது.

"இவள் எப்படி, எங்குப்போய் வண்டியை அழைத்து

வருவான்?''

பத்து நிமிடம் கழித்து ஒரு டாக்ஸியுடன் வந்த ரோமா வேகமாக செயல்பட்டாள்.

கடுமையான நெஞ்சுவலி! சியாமளா ஹாஸ்டலில் அனுமதிக்கப்பட்டாள். தீவிர சிகிச்சைக்குப்பின்... அபாயக்கட்டத்தை தாண்டிவிட்டாள்.

சுப்ரியாவை வீட்டிலேயே விட்டுவிட்டு வந்திருந்தாள். அவளை சிரமப்படுத்த விரும்பவில்லை. அவளும், ஹாஸ்பிடல் வாசம் அலர்ஜி என்பதால்... வருவதாக சொல்லவுமில்லை.

ஒருநாள் முழுக்க சியாமளா ஹாஸ்பிடலில் இருக்க வேண்டும் என்று டாக்டர் கூறியதால்... அதிகாலையில் வீட்டிற்கு வந்த ரோமா... அவசரகதியில் இயங்கினாள்.

சுப்ரியாவுக்கு காலை டிபனும், மதிய உணவும் தயாரித்து ஹாட்பேக்கில் வைத்தாள். ம போட்டு அவளை எழுப்பும் வரை உறங்கிக் கொண்டிருந்தாள் சுப்ரியா.

''ஹாய்... எப்ப வந்தே?''

''ரெண்டு மணி நேரமாச்சு... டிபனும், லன்சும் ஹாட் பேக்ல இருக்கு... எடுத்துப் போட்டுட்டு சாப்பிட்டு!''

''ஆன்ட்டி எப்படி இருக்காங்க?''

''பரவாயில்லே சுப்ரியா. ஈவினிங் அழைச்சிட்டு வந்துடுவேன். சமையல் சிம்பிளாதான் இருக்கும். அட்ஜஸ்ட் பண்ணிக்க!''

''இப்ப அதுவா முக்கியம்? உங்க அண்ணனுக்கும், அல்வினுக்கும் சொல்லிட்டியா?''

''எதுக்குப்பா? பாவம் அண்ணன்... தெரிஞ்சா அடிச்சுப் பிடிச்சுக்கிட்டு ஓடிவரும். மெதுவா சொல்லிக்கலாம்.''

''சரி... டாக்ஸி பிடிக்க அர்த்த ராத்திரியிலே ஓடறியே... ஒரு போன் பண்ணினா அல்வின் வரமாட்டாரா?''

''ஏன் வரமாட்டார்? கல்யாணத்துக்கு முன்னாடி மிட்நைட்ல அவர் கல்யாணம் பண்ணிக்கப் போற ஆளாகவே இருந்தாலும் கூப்பிடக் கூடாது அது தப்பு!''

சுப்ரியா அவளை வியப்பாய் ஏறிட்டாள்.

# 6

படித்தவள்... ஆனால் பட்டிக்காடு மாதிரி பேசுகிறாளே... என்ற எண்ணத்தில் எழுந்த வியப்பல்ல. இந்த காலத்தில், இந்த வயதில் இவ்வளவு கட்டுப்பெட்டித்தனம் அவசியமா? என்றுதான் வியந்தாள்.

சுப்ரியா எந்த விஷயத்திலும் தன்னை அலட்டிக் கொள்வதில்லை. அவளைப் பொறுத்தவரை யாரையும் தொந்தரவுப் படுத்தமாட்டாள். தன்னை தொந்தரவுப்படுத்துகிறவர்களையும் விடமாட்டாள். வாழ்க்கையில் ஒவ்வொரு நாளையும் மகிழ்ச்சியாக செலவழிக்க வேண்டுமென்பதில் உறுதியாக இருந்தாள்.



சியாமளா தேறிவந்தாள். அவள் குணமான பின்பே பெங்களூரில் இருந்த ஆதித்யாவிற்கு போன் பண்ணி விபரத்தைச் சொன்னாள் ரோமா.

போனிலேயே கத்தி தீர்த்துவிட்டான் ஆதித்யா. ''ரோமா... அறிவில்லே உனக்கு? அம்மாவுக்கு ஹார்ட் அட்டாக் வந்திருக்கு... என்கிட்டே நாலு நாள் கழிச்சு சொல்றே? படிச்சப் பொண்ணா நீ?''

''இல்லேண்ணா... நீ பதறிப்போய் ஓடிவருவே. தவிர, முடிஞ்சவரை நானே சமாளிச்சுக்கலாம்னு நினைச்சேண்ணா! இப்ப நார்மலாதான் இருக்காங்க!''

''நீ என்ன ரீஸன் சொன்னாலும் சரி ...யூ ஆர் ராங்! சரி... என்னைதான் கூப்பிடலே... பக்கத்திலேயே அல்வின் இருக்கானே... அவனையாவது கூப்பிட்டிருக்கலாமே!''

''அ... அவங்க அப்பா, அம்மா தப்பா நினைச்சிடுவாங்களோன்னு...!''

''ஆபத்து, அவசரத்துக்கு உதவிக்கு கூப்பிட்டா யாரும் தப்பா நினைக்க மாட்டாங்க புரியுதா?''

''ம்...!''

''அம்மாவுக்கு சீரியஸா ஆகியிருந்தா என்னப் பண்ணியிருப்பே? இனி... இந்த மாதிரி முட்டாள்தனம் பண்ணாதே... எதுவாயிருந்தாலும் போன் பண்ணு! நானும் இந்த வேலைய ரிஸைன் பண்ணிட்டு, வெலிங்டனுக்கு பக்கமாகவே வேலை பார்க்கலாம்னு ஒரு ஐடியா! ட்ரை பண்ணிட்டிருக்கேன். நைன்ட்டி பர்ஸன்ட் கிடைச்சிடும். ஒரு வாரத்துல அங்கே வந்திடுவேன்.''

''அண்ணா... நிஜமாகவாச் சொல்றே?''

ஆமாம்! அம்மாவுக்கு ஏற்கனவே ஒருமுறை அட்டாக் வந்திருக்கு. இது செகண்ட் டைம்! ஒவ்வொரு முறையும் நான் பக்கத்துல இல்லாமல் போனது கஷ்டமாயிருக்கு. எல்லாத்தையும் விட நமக்கு அம்மா முக்கியம். உனக்கும் கல்யாணமாகப் போகுது. அப்புறம் அம்மாவைப் பார்த்துக்க ஆளில்லாமப் போயிடும்.''

''கேட்கவே சந்தோஷமாயிருக்குண்ணா. நாமெல்லாம் ஒண்ணா சேர்ந்திருந்து எத்தனை வருஷமாகுது?''

''சரிம்மா... அவ இன்னமும் நம்ம வீட்லதான் இருக்காளா?''

''யாரைண்ணா சொல்றே?''

''புதுசா வந்து ஒட்டிக்கிட்ட உறவுக்காரியதான்!''

''சுப்ரியாவையா? பாவம்ண்ணா... ரொம்ப நல்லவ...''

''அந்த சர்ட்டிபிகேட் எல்லாம் நான் கேக்கலே! நான் வரும்போது அவ வீட்ல இருக்கக் கூடாது!''

''என்னண்ணா இப்படிச் சொல்... ''அவன் சொல்லி முடிக்குமுன் லைனை கட் பண்ணிவிட்டான் ஆதித்யா. 'சே... இப்ப என்னப் பண்றது?'

''சுப்ரியா... இந்தா... இதை சாப்பிடு!'' பால் பாயாசத்தை அவளிடம் தந்தாள் சியாமளா.

''எனக்கு பாயாசமெல்லாம் பிடிக்காது... வேண்டாம்.''

''கொஞ்சமாவது சாப்பிடும்மா... என் திருப்திக்காக நான் இன்னைக்கு ரொம்ப சந்தோஷமாயிருக்கேன்.'' களைத்த முகத்தில் மகிழ்ச்சி திரண்டிருந்தது.

''என்ன விசேஷம்? உங்க பர்த்டேயா?''

''இந்த வயசுல எனக்கெதுக்கும்மா அந்த கொண்டாட்டமெல்லாம்? என் பிறந்தநாள் எப்போன்னே எனக்குத் தெரியாது. அந்த காலத்துல அதையெல்லாம் கவனமா குறிச்சு வச்சுக்கற பழக்கமெல்லாம் கிடையாது. ஜோஸியம், ஜாதகமெல்லாம் பார்த்து கல்யாணம் பண்ணினதில்லே.''

''அப்புறம் என்னதான் ஸ்பெஷல்?''

''என் பிள்ளை வர்றான் சுப்ரியா.' நிரந்தரமா இங்கேயே வந்துடப் போறான். குன்னூர்லேயே வேலை கிடைச்சிடுச்சு. இன்னைக்கு போன் பண்ணிச் சொன்னான். கடவுள் கண்ணைத் திறந்துட்டான்.''

சியாமளா உணர்ச்சிப் பூர்வமாய் பேசிக் கொண்டேப் போக... சுப்ரியாவுக்கு எரிச்சலாய் இருந்தது.

'சனியன்... அவன் இருக்கிற வீட்டில் நானா? அவனும் அவன் மூஞ்சியும்!' அவனைப் பார்க்காமலேயே ஏனோ அவனைப் பிடிக்காமல் போனது.

தயாளன் நம்பாமல் மறுபடி செல்போனைப் பார்த்தார். அதன் திரையில் சுப்ரியா பெயர் ஒளிர்ந்தது.

''சுப்ரியா... எப்படிடா இருக்கே? நான் போன் பண்ணும் போதெல்லாம் ஏன்டா கட் பண்ணினே? உன்கிட்டே பேசி எத்தனை நாளாச்சு?''

''டாடி... ப்ளீஸ்... போதும் உங்க டயலாக் எல்லாம்?''

''டாடி மேல இன்னுமா கோபமாயிருக்கே?''

''இன்னுமாவா... எப்பவுமே உங்க மேல உள்ள கோபம் மாறாது டாடி! என் பாத்ரூம் சைஸ்ல இருக்கிற இடத்துல என்னை விட்டுட்டுப் போனீங்கள்ல? சரி. இப்ப நான் பேச வந்ததே வேற...

''என்னடா பணம் வேணுமா?''

''உங்க அக்கா பையன் ஆதி இங்கேயே வந்துடறானாம்.''

''ஆதியா.? வெரிகுட்... வெரிகுட்!''

''''ஜெயிலுக்குப் போயிட்டு வந்தாயே... என்ன தெரிந்து கொண்டாய்?''

''ஜெயில் கம்பிகளெல்லாம் எண்ணெய் போடாததால் ஒரே துருவாக இருக்கிறது!''

-எம்.அசோக்ராஜா, அரவக்குறச்சிப்பட்டி.





"அவன் இருக்கிற வீட்ல நான் இருக்க மாட்டேன். ஊட்டியில உங்க பிரண்டோட கெஸ்ட் அவுஸ் இருக்கில்லே... நான் அங்கே தங்கிக்கறேன்."

"எ...எதுக்குடா அங்கெல்லாம்! வேணாம்மா... அதெல்லாம் சரிப்படாது."

"அவன் அலட்டல் கேஸ் டாடி! என்னால இங்கே இருக்க முடியாது."

உள்ளத்தை கவ்விக் கொண்டது.

வீட்டையே தலைகீழாய் புரட்டிக் கொண்டிருந்தாள் ரோமா!

ஆதியின் அறையை அங்குலம் அங்குலமா சுத்தப் படுத்திக் கொண்டிருந்தாள். பெட்டை தட்டிப் போட்டு, கவர் மாற்றி, திரைச்சீலை மாற்றி, ஷெல்பிலிருந்த புத்தகங்களை ஒழுங்கப்படுத்தி... என்று பிஸியாக இருந்தாள்.

சுப்ரியா படித்துக் கொண்டிருந்த புத்தகத்தை முடித்துவிட்டு மூடி வைத்தாள். போர் அடித்தது.

"ரோமா!"

"என்ன சுப்ரியா?"

"வாயேன் லைப்பரிக்கு போய் வரலாம்."

"ஸாரி சுப்ரியா. நாளைக்குப் போகலாமே... இன்னும் கொஞ்சம் வேலை பாக்கியிருக்கு... முடிச்சிடறேன்."

"உங்கண்ணன் எப்ப வர்றார்?"

"கமிங் சன்டே!"

"அதுக்கு இன்னும் அஞ்சுநாள் இருக்கே?"

"இருந்தா என்ன? முன்னாடியே கிளீன் பண்ணி வச்சிட்டா நல்லதுதானே?"

"தலைகால் புரியலே உனக்கு. நான் போய் ஒரு ரவுண்ட் அடிச்சிட்டு வர்றேன்."

"சுப்ரியா... எங்கேப் போறே? தனியா எங்கேயும் போக வேண்டாம்."

"நான் என்னச் சின்னக்குழந்தையா? போய்ட்டு வந்திடறேன்."

"ப்ளீஸ் சுப்ரியா... நான் சொல்றதை..."

அவள் பேச்சை கேட்கும் நிலையில் இல்லாத சுப்ரியா வெளியேப் போய்விட்டாள்.

தலையில் கைவைத்து அமர்ந்துவிட்டாள் ரோமா.

'ஐயோ... அம்மா கேட்டா என்ன பதில் சொல்லுவேன்? இவபாட்டுக்கு டிஸ்கொதே அதுஇதுன்னு கிளம்பிப் போய்விட்டால்? பதறியது.

பிற்பகல் மூன்று மணிக்கு சில்லென்ற புல்வெளியில் மந்தாரமான சீதோஷ்ண நிலையில் காலாற நடப்பது புத்துணர்ச்சியைத் தந்தது.

முதுகில் கூடை சுமந்தப் பெண்கள் வேகவேகமாக தேயிலைப் பறித்துப்போடும் அழகு பார்த்துக் கொண்டே இருக்கச் சொன்னது.

வளைந்து சரிந்தப் பாதையில் இறங்கினாள். நான்கு கற்கள் தாங்கி நின்ற ரெடிமேட் டீக்கடையில் கணிசமாய் கூட்டமிருந்தது. மங்கிகுல்லாவும், ஸ்வெட்டரும் அணிந்து டீ சாப்பிட்டுக் கொண்டிருந்த ஆண்கள் மெழுகு பொம்மைப் போலிருந்த சுப்ரியாவை ஆவென வாயைப் பிளந்தபடி பார்த்தனர்.

அவர்களை அசட்டை செய்தவள்... வெலிங்டனின் அழகை கண்குளிர ரசித்தபடி நடந்தாள்.

'இன்னும் எத்தனை நாள் இங்கிருக்கப் போகிறோம்? கோகுல் வந்ததும் நடையைக் கட்டிவிட வேண்டியதுதான்! டாடி கண்டிப்பாய் கோகுலுக்கு பிரச்சனைத் தருவார். அதற்காக அவனைப் போய் கல்யாணம் பண்ணிக்கறேன்னு சொன்னது டூ மச்! ஏன் அப்படிச் சொன்னேன்? ஹி இஸ் மை பிரெண்ட். தட்ஸால். அதற்கு மேல் அவனை மட்டுமல்ல... வேறு யாரையும் நான் நினைச்சதே இல்லையே! லவ்! அது இதுநாள் வரைக்கும் யாரிடமும் எனக்கு ஏற்பட்டதே இல்லையே!

எனக்குரியவனை நான் கற்பனை கூட செய்ததே இல்லையே! சுப்ரியாவின் மனசைக் கொள்ளையடிப்பவனுக்கு சம்திங் ஃபேசஷ் இருக்க வேண்டாமா?

சம்திங்?

'அசரடிக்கிற ஆண்மை, பார்க்கும் பார்வையில் கம்பீரம், எனக்காக உருகாமல், மருகாமல், என்னை தவிக்க வைத்து, ஏங்க வைக்கும் திமிர்! இத்தனையும் உள்ளடக்கிய பீஸடி ராஸ்கல்... நீ எங்கேடா இருக்கே?'

இரு கைகளையும் பரபரவென தேய்த்து கன்னத்தில் வைத்து மனம்விட்டு சிரித்தாள் சுப்ரியா.

அந்த நிமிடம் அவள் மனதில் தோன்றிய எண்ணங்கள் மிகமிகப் புதியவை. உற்சாகம் பீறிட மெல்ல ஓடினாள்... எதிரே வரும் காரை கவனிக்காமல்!

அவசர அவசரமாய் கார் ஹாரன் அடிக்கப்பட்டும், பிரேக் போடப்பட்டும் பலனின்றி, சுப்ரியா மீது கார் உரசி விட்டுத்தான் நின்றது.

## 7

எதிர்பாரா தாக்குதலின் அதிர்ச்சியில் நிலைகுலைந்துப் போன சுப்ரியா தடுமாறிக் கீழே விழுந்தாள்.

அவசரமாய் காரை விட்டிறங்கிய அந்த இளைஞன் "ஸாரி... வெரி ஸாரி..." என்ற படி அருகில் வந்து பதறியவன் அசந்துப்போனான்.

புத்தம் புது ரோஜா மலரைப் போலிருந்த அவளைப் பார்த்ததும் உள்ளுக்குள் நீருற்று ஒன்று உற்பத்தியானது.

'யூ... ராஸ்கல்!' வாய்வரை வந்த வார்த்தைகளை, கோபத்துடன் சேர்த்து அப்படியே விழுங்கி விட்டாள். சுப்ரியா... அவனைப் பார்த்ததும்!

'அசரடிக்கிற வசீகரம், பார்வையில் கம்பீரமும், அலட்சியமும்

அவன் ஆண்மையை தூக்கிக் காட்ட... சுப்ரியாவின் மனசை இச்சு இச்சு மூட்டியது.

என்னவோ.. அவனுக்காகவே இது நாள்வரை காத்திருந்ததுப் போல் உணர்வு!

''ஸாரி..''

''இட்ஸ் ஒக்கே.. நான் தான் பார்க்காமல் ஓடி வந்தேன். தப்பு என்மேலதான்!''

''நானும் இந்த வளைவுல இவ்வளவு வேகமா வந்திருக்கக் கூடாது. அடிகிடி பட்டுடுச்சா?''

''இல்லீங்க.. சின்னதா சிராய்ப்பு மட்டும்தான்!''

''தாங்க் காட்! வலி எதுவும்...?''

''நத்திங்!''

''நான் வேணா உங்களை ட்ராப் பண்ணட்டுமா?''

''நோ... தாங்ஸ்... வாக் பண்ணனும்னு ஆசைப்பட்டு வந்தேன்!''

''ஒக்கே.. தாங்க்யூ!''

காரில் ஏறப்போனவனின் பரந்த தோள்கள் சுப்ரியாவின் மனதை துவம்சம் செய்தது. அடுத்து அவள் பேசின வார்த்தை.. அவளே அறியாமல் பழக்க தோஷத்தில் வந்தது.

''எக்ஸ்க்யூஸ்மீ...''

''எஸ்....'' என்று திரும்பினான்.

''என்னோட டேட்டிங் வரமுடியுமா?''

''வாட்?'' மிக மிக பலமாய் அதிர்ந்தான் அந்த இளைஞன். எனக்கு உங்களை பிடிச்சிருக்கு. உங்களோடு டேட்டிங் போகணும்னு ஆசைப்படறேன்.''

அடுத்த விநாடி... ஊரிலிருந்த பட்டாம்பூச்சி எல்லாம்... அவள் கண்களில் பறந்தது... அவன் அறைந்த அறையில்!

''ச்சீ!'' அவன் வார்த்தையில் வெளிப்பட்ட அறுவருப்பும், கோபமும், சுப்ரியாவின் வாழ்நாளில் சந்தித்திராதவை.

''நீயெல்லாம் ஒரு பெண்ணா? என்னை எத்தனைநாளாய் தெரியும்? அட்லீஸ்ட் ஹவர்ஸ்? ஜஸ்ட் த்ரீ மினிட்ஸ், அதற்குள் என்னை டேட்டிங் போகலாம் வர்றியான்னு கூப்பிடறே? நீ எந்த மாதிரிப் பொண்ணுன்னு எனக்குத் தெரிஞ்சு போச்சு. ஆனா, நான் எந்த மாதிரிப் பொண்ணுங்களோட காத்துப்பட்டாக் கூட கேவலம்னு நினைக்கறவன் நான்!'' கண்களில் டன்டன்னாய் வெறுப்பு வழிய காரில் அமர்ந்து விசுக்கென வேகமெடுத்துப் புறப்பட்டான்.

சுப்ரியா அதிர்ச்சியில் நிலை குலைந்து போனாள். அவளை இதுவரை யாரும் கடிந்து ஒருவார்த்தைப் பேசியதில்லை. அடித்ததில்லை. இது தான் அவள் சந்தித்த முதல் பேரிடி.

அவளுக்கு ஏகப்பட்ட நண்பர்கள் உண்டு அவள் விழியோரப் பார்வை தன் மீது விழாதா என்று தவமிருப்பவர்களும், அட்லீஸ்ட் தன்னை ஒரு நண்பனாகவாவது ஏற்றுக் கொள்ள மாட்டாளா என்று



ஏங்கித் தவிப்பவர்களும் ஏராளம், ஏராளம்.

'சுப்ரியா என் பிரண்ட் தெரியுமா?' என்று அடுத்தவர்களிடம் சொல்லி பெருமைப்பட்டுக் கொள்பவர்கள் எத்தனை பேர்? நான் ஹாய் என்று சொன்னாலே ஷேர் மார்க்கெட்டில் கொள்ளை லாபம் கிடைத்தது போல் துள்ளி குதிப்பவர்கள் மத்தியில் இவன் மட்டும் எப்படி என்னை அலட்சியப்படுத்தினான்?

அப்படியானால் இவனுக்கு என்னைப் பிடிக்கவில்லை என்று தானே அர்த்தம்? அதெப்படி இவனை எனக்குப் பிடித்திருக்கிறதே! இதுநாள் வரை யாரிடமும் ஒட்டாத மனசு இவனிடம் மட்டும்தானே ஒட்டிக் கொண்டது? நான் ஆசைப்பட்டு கிடைக்காதது என்று ஒன்று உண்டா இந்த உலகத்தில்?

என்னை அவமதித்து விட்டாப் போகிறாய்? நீயெல்லாம் ஒரு பெண்ணா என்றா கேட்டாய்? என்னை அசிங்கப்படுத்திப் பேசிய அதே வாயால், ''நீயில்லாமல் எனக்கு வாழ்க்கையே இல்லை?'' என்று புலம்ப வைக்கவில்லை என்றால்... என் உயிரையே மாய்த்துக் கொள்கிறேன். நீ எனக்கு வேணும்டா செல்லம். உன்னோடத் திமிரும், அலட்சியமும் தான் என் மனதை உன் பக்கம் இழுத்து விட்டது. என்னிடம் பணம் இருக்கிறது. உன்னை என்னால் வாங்க முடியும்.'

இருட்டத் தொடங்கிய பின்பும்.. அங்கேயே அமர்ந்திருந்தாள் சுப்ரியா. அவள் எண்ணமெல்லாம்... அவனை எப்படிக் கண்டுபிடிப்பது? தன் வசப்படுத்துவது என்றே சுற்றிக் கொண்டிருந்தது.

''என்ன ரோமா.. இப்பப் போய் சுப்ரியா இன்னும் வீடுத் திரும்பலேன்னு சொல்றே? கொஞ்சம் தூங்கி எழும்பறதுக்குள்ளே கனேபரமா? அவளை ஏன் தனியா அனுப்பினே?'' சியாமளா பதறினாள்.

''நான் என்னம்மாப் பண்ணட்டும்? நான் சொல்லச் சொல்ல சுத்திப் பார்த்துட்டு வர்றேன்னு தனியாக் கிளம்பிட்டா!''

''இப்ப என்னப் பண்ணுவேன்? தயாளன் கிட்டே என்னன்னு



''டாக்டர் அந்த மூணாவது வார்டு பேஷண்ட் இழுத்துட்டு இருக்கார்''

''அப்படின்னா உடனே நீவிர சிகிச்சை வார்டுல சேர்த்துடுங்க சிஸ்டர்''

''அதில்ல டாக்டர்... பேஷண்ட் என் கையை பிடிச்சு இழுத்துட்டு இருக்கார்னு சொல்ல வந்தேன்''

-க.வேடியப்பன், கும்மிடிப்பூண்டி.

சொல்லுவேன்? என்னை நம்பிதானே விட்டுட்டுப் போனான்?''

''அம்மா... இப்ப என்ன ஆகிப்போச்சன்னு அலர்றே? அவ என்ன சின்னக்குழந்தையா? வந்துடுவாம்மா''

''இந்த ஊரு அவளுக்குப் புதுசுடி!''

''இருக்கட்டுமே! அவகிட்டே செல்போன் இருக்கு. வழி தெரியலேன்னா போன் பண்ணப்போறா.''

''அதைவேற ஆப் பண்ணி வச்சிருக்கான்னு சொல்றியே''

''வந்துடுவாம்மா... கவலைப்படாதே!''

''ஒருவேளை இங்கிருக்கப்பிடிக்கலைன்னு..''

''அவ லக்கேஜ் எல்லாம் இங்கே தான் இருக்கு. சும்மா புலம்பிக்கிட்டு என்னை டென்ஷனாக்காதே! வந்துடுவா... நீ அமைதியாயிரு!''

''இருட்டிப் போச்சேடி...''

வாசலில் காரின் ஹார்ன் சப்தம் கேட்டது.

''சுப்ரியா வந்துட்டாப் போலயிருக்கு..'' ரோமா ஆர்வமாய் வாசல் கதவைத் திறந்தவள் ஆச்சர்யத்தில் வாய் பிளந்தாள்.

''அ..ண்..ணா! நீயா? அம்மா... அம்மா... இங்கே வாயேன்... யார் வந்திருக்கறது பாரேன்!''

''சுப்ரியாவா.. வந்துட்டாளா?'' ஆர்வமாய் வாசலுக்கு வந்தவள்.. வாயைப் பிளந்தாள் சியாமளா.

''ஆ..தி.. ஆதி நீயா? வந்துட்டியாப்பா?'' கண்கள் கண்ணீரில் பளபளக்க... கைகளால் அவன் கன்னத்தைப் பற்றிக் கொண்டாள்.

அந்தக் கைகளை தன் கரங்களால் பற்றிக் கொண்டு கண்களை மூடித் திறந்து நிம்மதியாய் மூச்சுவிட்டான்.

''வந்துட்டேன்ம்மா.. இனி எப்பவுமே உன் கூடவே இருக்கணும்னு ஓடி வந்துட்டேன்.''

உள்ளே வந்து அமர்ந்தனர்.

''அண்ணா.. நீ சன்டே தானே வர்றேன்னு சொல்லியிருந்தே.. சர்ப்ரைஸா இன்னைக்கே வந்துட்டியே!''

''அதான் நீயே சொல்லிட்டியே சர்ப்ரைஸ்னு! அதனால் தான் இன்பார்ம் பண்ணாம வந்துட்டேன் நல்லாருக்கியா ரோமா?''

''எனக்கென்னண்ணா குறைச்சல்? ஆதிக்கு தங்கையாய் பிறந்துட்டு..''

''அட... நல்லாப் பேசக்கத்துக்கிட்டியே.. அஸ்வினோட மச்சிங்கா?''

''ஐயோ.. இல்லேண்ணா... நான் போன்லக் கூட அதிகமாப் பேசறதில்லே..''

''இப்படி ஊமை மாதிரி இருக்கிறவங்களை தான் நம்பவே முடியாது.''

''இல்லேண்ணா.. நான் நிஜமாத்தான்!''

''சீச்சீ மண்டு ... உன்னைப் பத்தி எனக்குத் தெரியாதா... சும்மா விளையாடினேன். சூடா ஒரு டீ போட்டுக் கொண்டு வா..!''

''இதோண்ணா...''



அவன் நகர்ந்ததும் அம்மாவிடம் நெருங்கி அமர்ந்தான்.

''இப்ப உடம்புக்கு எப்படிம்மா இருக்கு?''

''களைப்பா இருக்கு.. அவ்ளோ தான். மத்தபடி எதுவும் இல்லே! இப்ப நீயும் வந்துட்டியே.. இனி எனக்கு தலைவலிக் கூட வராது.''

''கோயம்புத்தூர்ல ஒரு பெரிய டாக்டர்கிட்ட அப்பாய்ன்ட்மென்ட் வாங்கியிருக்கேன்ம்மா! ஒரு புல் செக்கப் பண்ணிடலாம். அடுத்த வாரம் நாம போறோம்.''

''எதுக்குப்பா.. எனக்குதான் இப்ப நல்லாயிடுச்சே?''

''இருக்கட்டுமேம்மா.. என்னோட திருப்திக்காக!''

''அண்ணா.. டீ!''

இஞ்சியும், ஏலக்காயும் மணக்க.. ஒரு சிப் அருந்தியவன்.. ''ப்பா.. இப்பதான் சொந்த மண்ணை மிதிச்ச பீலிங்கே வருது. சூப்பர் ரோமா.''

''தாங்ஸ்ண்ணா!'' என்றவள் சிரித்தாள்.

''ஏன் சிரிக்கிறே?''

''உன்கிட்டே நிறைய மாற்றம் தெரியுது. முன்பை விட ரொம்ப அழகா.. ஹீரோ மாதிரி இருக்கே. பாலீஷ் போட்ட மாதிரி, நிறம் கூடி, குளோஸா ஹேர் கட் பண்ணி, மீசை கீழே சுருக்கமா பிரெஞ்ச் தாடி வச்சி.. கலக்கலா இருக்கேண்ணா!''

''சரி.. சரி.. அதெல்லாம் விடு'' என்று வெட்கமாய் சிரித்தவன்... ''பரவாயில்லையே.. நான் சொன்னதும் அந்த சனியனை வீட்டை விட்டு அனுப்பிட்டீங்களே...

குட்!'' என்றான் ஆதித்யா.

''சனியனா.. நீ யாரைண்ணா சொல்றே?''

''புது உறவுக்காரி.. சுப்ரியாவைதான்!''

''ஐயோ.. நீ வந்த சந்தோஷத்துல மறந்தேப் போயிட்டேனே... ஆதி.. அந்தப் பொண்ணு மூணு மணிக்கு வீட்டை விட்டு வெளியேப் போச்சு.. மணி ஏழாயிடுச்சு... இன்னும் வரலே...'' என்று அலறினாள்.

''அதுக்கேன்ம்மா நீ அலர்றே? விட்டது சனியன்னு விடுவியா?''

''அப்படியெல்லாம் பேசாதப்பா.. பாவம்ப்பா அவ..'' என்று சொல்லி முடிக்கு முன்.. வாசலில் ஆட்டோ வந்து நிற்கும் சப்தம் கேட்டது.

## 8

ரோமா வாசலுக்கு செல்லும் முன் உள்ளே வந்துக் கொண்டிருந்தாள் சுப்ரியா.

''எங்கே போயிட்டே சுப்ரியா... இவ்வளவு நேரமா உன்னைக் காணாம... நானும் அம்மாவும் பயந்துப் போயிட்டோம்.'' ரோமா பேசிக் கொண்டே போக ஆதித்யாவும், சுப்ரியாவும் பேரதிர்ச்சியோடு பார்த்துக் கொண்டிருந்தனர்.

''அட.. சொல்ல மறந்துட்டேனே... இதுதான் எங்க அண்ணன்

ஆதித்யா. நேர்ல இன்னைக்கே வந்து இறங்கிட்டார். அண்ணா இதுதான்...!''

''போதும் நிறுத்து'' என்பது போல் கைகளை உயர்த்திக் காண்பித்தவனின் முகத்தில் படர்ந்திருந்த கோபத்தைப்பார்த்தும் அவன் தோளைப் பற்றி அழுத்தினாள் சியாமளா.

''ஆதி... அவசரப்பட்டு எதுவும் பேசி அந்தப் பொண்ணு மனசை சங்கடப்படுத்திடாதேப்பா... தயவு செய்து... எனக்காக...'' கெஞ்சிப்பாய் கெஞ்சினாள்.

கஷ்டப்பட்டு தன்னை அடக்கிக் கொண்டவன் எதுவும் பேசாமல் வேகமாய் தன்னறைக்குள் நுழைந்துக் கொண்டான்.

கப்ரியாவோ மனசுக்குள் பறந்த பட்டாம்பூச்சிகளோடு தானும் பறந்துக் கொண்டிருந்தாள்.

''உங்க மனைவிய சந்தோஷப் படுத்த, நகை வாங்கித் தருவீங்களா? புடவை வாங்கித்தருவீங்களா?''

''அதெல்லாம் இல்ல; நல்லா சமைச்சுப் போடு வேன்; அவ்வளவுதான்''

-கே.அகிலாண்டனம்,
காஞ்சிபுரம்.



'அடடா... எதுவோ நழுவி எதிலியோ விழும்னு பெரிசுங்க சொல்லுமே... அது இதுதானா? என் மனசைக் கிள்ளிவிட்டுப் போனவனை எங்கும் தேடவேண்டிய அவசியமில்லாமல் இங்கேயே... என் கண்ணெதிரேயே கொண்டு வந்து நிறுத்தியிருப்பது விதிதானே? ஆதி... என் அத்தை மகனே... நீ எனக்குத்தான்!''

''என்ன கப்ரியா.. ஷாக்கடிச்ச நின்னுட்டே? ஏன் இவ்ளோ லேட்?''

''வழிமறந்துப் போச்சு!''

''அப்பவே நினைச்சேன்!''

''இனிமே ரோமா இல்லாம தனியா வெளியே போகாதே. உங்கப்பாவுக்கு யாரு பதில் சொல்றது?''

''சரி ஆன்ட்டி? என்றவள் ரோமாவை தன் அறைக்கு தள்ளிக் கொண்டு வந்தள்.

''ஏய். நிஜமாகவே அது உன் அண்ணன் தானா?''

''தோடா... இதுக்காக யாரையாவது சாட்சிக்கு கூட்டிட்டு வரணுமா என்ன?''

''அப்ப... நீ அந்த போட்டோவுல இருக்கறவரைதானே அண்ணன்னு சொன்னே?''

''ஆமா!''

''அந்த மூஞ்சிக்கும், இந்த மூஞ்சிக்கும் சம்பந்தமே



இல்லையே!''

''அந்த போட்டோவுல அண்ணன் மீசை, புருவம், கன்னுன்னு மேக்கப் போட்டு பாரதியார் வேஷம் போட்டு ஆபீஸ்ல ஒரு பங்ஷன்ல நடிச்சப்ப எடுத்தது. இப்ப இருக்கறது தான் ஒரிஜினல் முகம் போதுமா? எங்கண்ணன் ரொம்ப ஸ்மார்ட்டா இல்லே?''

பதிலேக் கூறாமல் சின்ன சிரிப்புடன் ஜன்னல் பக்கம் நகர்ந்தாள் கப்ரியா.

''டின்னர் ரெடி பண்ணனும்... வர்றேன்'' என்று வெளியேறினாள் ரோமா.

ஜன்னல் கம்பியில் கோலம் போட்டுக் கொண்டிருந்த கப்ரியா இது நாள் வரை தோன்றாத உணர்வுடன் தடுமாறிக் கொண்டிருந்தாள்.

ஆதித்யாவின் வெகுபக்கத்தில் இருப்பதே பெரும் நிம்மதியைத் தருவதை உணர்ந்தாள்.

'கம்பீரம், ஆணவம், ஆண்மை எல்லாம் உள்ளடக்கிய என் இனிய ராஸ்கல் இவனாய் இருப்பான் என்று நினைத்தேப் பார்க்கவில்லையே! முதன் முறையாக என்னைப் பார்த்து வழியாமல், என்னை தவிக்க வைத்த ஆண்மகன்! ஆதி.. இனி நீ என்னில் பாதி!''

ரோமா அண்ணனின் அறைக்குள் நுழைந்தாள். ''அண்ணா.. நைட்டுக்கு என்ன சமைக்கட்டும்?''

தூங்கிக்கு மாறியிருந்த ஆதி, ''அதெல்லாம் இருக்கட்டும் இப்படி வா ரோமா!''

''என்னண்ணா?''

''அந்த சனியன் இன்னும் எத்தனை நாளைக்கு இங்கிருக்கும்?''

''ஏண்ணா சனியன் கினியன்னு பேசறே? கப்ரியா பாவம்ண்ணா!''

''யாரு அவளா? அவ இங்கே இருந்தா... நமக்கு தான் பாவம்!''

''இல்லேண்ணா... அவமனசிலே ஏதோ வருத்தமிருக்கு அதனோட வெளிப்பாடுதான் திமிரா நடந்துக்கறதெல்லாம் பழகிப் பார்த்தா குழந்தைதான்!''

''நடிக்கிறா ரோமா! அவக்கூட பழகாதே... உன் பேர் கெட்டுப் போய்டும்.''

''உனக்கு அவளை பார்க்கறதுக்கு முன்னாடியிருந்தே பிடிக்காது. அதனால தான் அவளைத் தப்பாவே நினைக்கிறே!''

''உனக்கு எப்படி சொல்றதுன்னுப் புரியலே, ஆனா, அவளைப் பத்தி எனக்கு தான் தெரியும். சரி.. விடு. இனி நான் பார்த்துக்கறேன். அவளாகவே இந்த வீட்டை விட்டு போக வைக்கலே.. பார்த்துக்கிட்டே இரு! ஒரு மாசம் கழிச்சுதானே வேலைல ஜாய்ன் பண்ணப் போறேன்.? அதுக்குள்ளே அவளை... ''

அண்ணனின் முகத்தில் கொப்பளித்த வெறுப்பு அவள் இதுவரை அறியாதது.

'என்னாகப் போகுதோ? அண்ணனுக்கு கப்ரியாவை சுத்தமாய் பிடிக்கவில்லை. அவளோ.. அண்ணனுக்கு பிடிக்காத அத்தனை

பழக்க வழக்கங்களையும் கொண்டிருப்பவள்? மாமா நினைச்சது நடக்காதோ?' வருத்தத்துடன் வெளியே வந்தாள்.

சியாமளா மணியடித்துக் கொண்டே இன்னொரு கையால் கற்பூர ஆராதனைக் காட்ட... ரோமா கண்மூடி, கை குவித்து வணங்கிக் கொண்டிருந்தாள்.

குளித்து முடித்து பாத்ரூமிலிருந்து வெளிப்பட்ட ஆதித்யா இடுப்பில் கட்டிய டவலுடன் பூஜையறைக்கு வந்து தீபாராதனையைத் தொட்டு வணங்கினான் விபூதியை எடுத்து மகனின் நெற்றியில் இட்டவள், "தீர்க்காயுசா, நோய் நொடியில்லாம இருக்கணும்ப்பா!" என்றாள்.

"உடம்பு சரியில்லாதப்ப அதிகாலைல எழுந்து பூஜையெல்லாம் பண்ணணுமாம்மா? அதையெல்லாம் ரோமா பார்த்துக்க மாட்டாளா?"

"நானும் அதைதாண்ணா சொன்னேன்... கேட்கலே!"

"நீ போய் ஆதிக்கு காபி கொண்டு வாடி... கோள் மூட்டறதிலேயே இரு... பழகிப் போச்சப்பா.. விட முடியலே! அட... என்னப்பா இது... வெறும் உடம்போட நிக்கறே.. முதல்ல டிரஸ்ஸைப் போடு. இந்த வருஷம் பனி அதிகம் ஆதி! வாசல்ல உறைஞ்சிகிடக்கிற பனியை கூட்டித் தள்ள வேண்டிய தாயிருக்கு."

"ஆமாம்மா... கவனிச்சேன்... ஒரே நிமிஷம்.. இதோ வந்திடறேன்." என்றவன் தன் அறைக்குள் சென்று உடைகளை அணிந்து வந்தான்.

"ரோமா சொன்னா.. ஒரு மாசம் கழிச்சே வேலைல ஜாய்ன் பண்ணப் போறதா... எவ்னோ சந்தோஷமாயிருக்குத் தெரியுமா?"

"எனக்குந்தாம்மா! உன் சமையலை நிதானமா ரசிக்க, ருசிக்க சாப்பிடணும், ரெண்டாவது... ரோமாவுக்கும் கல்யாணமாகப் போகுது. அவகூடவும் டைமை ஸ்பெண்ட் பண்ணணும். என்னை ரிலாக்ஸ் பண்ணிக்கணும்."

"நல்லதுப்பா.. இங்கேர்ந்து குன்னூருக்கு எப்படிப்போவே? அங்கேயே ஒண்ணும் தங்கிட மாட்டியே!"

"சான்ஸே இல்லே.. உன்னை விட்டு இனி எங்கேயும் போக மாட்டேன்ம்மா! கார் இருக்கேம்மா... என்ன பிரச்சனை?"

"அப்புறம்... ஆதி... ஒரு விஷயம்..." இழுத்தாள்.

"என்னம்மா சொல்லு?"

"உன் மாமா தயாளன்.."

"உங்க தம்பின்னு சொல்லுங்க... எனக்கு மாமான்னு எந்த உறவுமில்லே..."

"அவன் மாறிட்டான் ஆதி! வாழ்க்கையிலே நிறைய அடிப்பட்டுட்டான். நாமளா ஒண்ணும் தேடிப் போகலையே! அவனாதானே வந்தான்? மன்னிச்சு ஏத்துக்கறதுல என்னப்பா தப்பு?"

"....?!"

"அவன் தன் கம்பெனி பொறுப்புகளை உன்கிட்டே ஒப்படைக்க ஆசைப்படறான். மாசம் ஒரு லட்சம் ரூபா சம்பளம் தர்றதா..."



"போதும்மா... இந்தப் பேச்சு வேண்டாம். அந்த ஆள் போடற பிஸ்கட்டை சாப்பிடறதுக்கு ஏகப்பட்ட நாய் இருக்கும். நான் அந்த வர்க்கம் இல்லேன்னு சொல்லிடு"

"சொல்ல சொன்னான்.. சொல்லிட்டேன். உன் முடிவுல நான் தலையிட மாட்டேன்!"

"அந்தாளோட பொண்ணை எதுக்கும்மா இன்னும் நம்ம வீட்லே வச்சிருக்கிறே? அவ கேரக்டர் சரியில்லேம்மா... ரோமா மாதிடப் போறா. அனுப்பி வச்சிடேன்ம்மா!"

"ஆதி... உனக்கு உன் மாமா தேவையில்லாம இருக்கலாம். ஆனா, எனக்கு என் தம்பி வேணும். உனக்கு ரோமா எப்படியோ, அப்படி தான் எனக்கும் தயாளன். ஒரே ரத்தபந்தம் ஆதி. அவ்னோ ஈஸியா அறுத்துட முடியாது. நாம கஷ்டப்பட்டப்ப வந்து எட்டிப் பார்க்கலே தான். ஆனா, அந்த நேரத்துல அவனுக்கும் வாழ்க்கையில கசப்பான சம்பவங்கள் நடந்திருக்கு. தாயில்லாப் பொண்ணை வளர்க்கறது எவ்வளவு கஷ்டம் தெரியுமா?

சுப்ரியாவை எதுக்காக இங்கே கொண்டு வந்து விட்டான். தெரியுமா? ரோமா மாதிரி ஒரு பொறுப்பான பொண்ணா மாறணும்னு தான்!"

"இதுவா மாறும்? சாக்கடை!"

"தப்பா பேசாதப்பா..."

"அண்ணா காபி... அம்மா இது உனக்கு!"

எடுத்துக் கொண்டவன், "ஒரு நிமிஷம்.. அது யாருக்கு?" என்றான் தட்டிலிருந்த இன்னொரு கோப்பையைக் காட்டி.

"சுப்ரியாவுக்குண்ணா!"

"ஓ... மகாராணி இன்னும் எந்திரிக்கலையாக்கும். பெட்காபியோட தான் எழுப்பணுமாக்கும். அதை இப்படிக் குடு!"

"அ..ண்..ண்ணா!" தயங்கினாள்.

"குடுன்னு சொல்றேனே! அவளுக்கு எப்படி பெட் காப்பி தரணும்னு எனக்குத் தெரியும், ம்!" வலுக்கட்டாயமாய் தட்டை வாங்கிக் கொண்டு சுப்ரியா.. இருந்த அறையை நோக்கிச் சென்றான்.

சியாமளாவும், ரோமாவும் தர்மசங்கடத்துடன் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர்.

# 9

கை வைத்ததும் திறந்துக் கொண்டது கதவு!

கட்டிலில் கம்பளிக்குள் உடம்பை குறுக்கி முகத்தை மட்டும் வெளியில் காட்டிக் கொண்டு படுத்திருந்தவளைப் பார்க்கும் போது மெலிதாய் உடம்பிற்குள் மின்சாரம் பாய்ந்தது.

கள்ளம் கபடமற்ற முகம். குடை பிடித்திருந்த இமைகள் பட்டாம்பூச்சி அமர்ந்திருப்பது போல் கவிதையாய் இருந்தது. செதுக்கிய மோவாய் என எத்தனை அழகு? கருமேகத்திலிருந்து எட்டிப்பார்க்கும் நிலவைப்போல் முகம். செடியில் பூத்திருக்கும் ஒற்றை ரோஜாப்பூவைப் போல் படுத்திருக்கிறாள். அவளை

யாரென்றே தெரியாத சந்திப்பில் பார்த்த மாத்திரத்தில் மனதை கொள்ளையடித்தானே! ஆனால்... ஆனால்... வாயைத் திறந்து கேட்ட ஒற்றைக் கேள்வியில் புரிந்துபோனதே அவனின் யோக்கியதை? இத்தனை அழகும் அப்படிப்பட்ட ஈனத்தனத்திற்காக பயன்படுத்தியிருக்கிறாய். எல்லாமே பணம் இருக்கிற திமிர்! உனக்கே நீ யாரென்று நான் சொல்லித்தருகிறேன். மறக்க முடியாத பாடத்துடன்!

ஆதித்யாவிற்கு அவளைப்பார்க்க பார்க்க, கல்லெறிந்த குளமாய் கோபவட்டம் பெரிதாகிக் கொண்டே போனது.

சுற்றிலும் பார்த்தான்! டேபிள் மீதிருந்த டைம்பீஸ் மணி எட்டு பத்து காட்டியது. பக்கத்தில் டம்ளரில் தண்ணீர் தட்டுப்போட்டு மூடப்பட்டிருந்தது.

நெருங்கியவன், காபியை அங்கே வைத்து விட்டு தண்ணீர் டம்ளரை எடுத்தான்.

அவள் அருகில் சென்றவன், சரேலென தண்ணீரை முகத்தில் ஊற்றினான்.

''ஏய்... ஏய்...'' அலறியபடி திடுக்கிட்டு எழுந்தவள் அங்கு ஆதியை பார்த்து திகைத்தாள்.

''...?!''

''என்னம்மா சுகவாசி? மணி என்ன ஆச்சு? பொம்பளை இவ்ளோ நேரம் தூங்கினா வீடு உருப்படுமா? இந்த அழகிலே உனக்கு பெட்காபி வேறயா? உவ்வே! இந்த கருமாந்திரத்தை எல்லாம் உன் வீட்ல வச்சுக்க. இங்கே இனி அதெல்லாம் நடக்காது. இஷ்டமிருந்தா இரு... இல்லேன்னா நடையக் கட்டு... வேக் அப்!''

அவன் செய்கையும், பேச்சும் இதயத்தை ஊசியால் குத்தியதும் போலிருந்தாலும், மறுகணமே தன்னை திடப்படுத்திக் கொண்டாள்.

கட்டிலை விட்டு இறங்கியவள், குளிரில் வெடவெடத்தபடி பாத்ரூமிற்கு சென்றாள்.

மூன்றே நிமிடத்தில் பல் விளக்கி, முகம் கழுவிக் கொண்டு வந்தாள்.

அதுவரை அங்கேயே நின்றிருந்த ஆதி, ''ம்... அதோ காபி... குடி! நாளையிலேர்ந்து ரோமா எழும்போதே எந்திரிக்கறதாயிருந்தா இங்கே இரு! இல்லேன்னா...''

''சரி...'' என்றவள் காபியை கையிலெடுத்தாள், ''காபி சூடு ஆறிப்போச்சு...''

''உனக்குத்தான் சூடு, சொரணையே இல்லையே! காபிகிட்டே மட்டும் எதிர்பார்க்கலாமா? குடி!''

''சரி!''

ஆதித்யா வெளியேப்போன பின்பு தன்னை நினைத்து வெகுவாய் ஆச்சரியப்பட்டாள்.

'நானா இது? அவன் முகத்தில் தண்ணீர் ஊற்றி, அவமானப்படுத்தி பேசியப்பின்பும் அமைதிக் காத்தேனே... எப்படி? எங்கே போனது என் கோபமும், கவுரவமும்? நேற்றுக்கூட



அவனை எப்படியாவது வளைத்துக் காட்டுகிறேன் என்றல்லவா எனக்கு நானே சவால் விட்டேன்? இன்றோ... அவன் மார்பில் முகத்தைப் புதைத்துக் கொள்ள அனுமதிக்க மாட்டானா என்று தவிக்கிறேனே! அவன் மடியில் சுருண்டுப்படுத்துக் கொள்ள வேண்டும் போல் ஆசை எழுகிறதே! அவனை விட்டு போகவேக்கூடாது என்று மனசு மருகுகிறதே... எதனால்? அவனை சந்தித்து முழுதாய் ஒரு நாள் ஆகவில்லை. ஆனால், என் ஆயுள் முழுக்க அவன் முகத்தைப் பார்த்துக் கொண்டே இருக்க வேண்டும் போல் ஆவல் எழுகிறதே! ஏன்... ஏன்? எது என்னை மாற்றியது? காதலா?'

அந்த அறையைப் பார்வையால் அளந்தாள்.

சாதாரண வீடு, சாதாரண அறை! ஆனால் இப்போது அந்த வீடு நந்தவனமாய் தெரிந்தது.

ஆதி எனக்கு எதுவும் வேண்டாம். உன் அன்பு வேண்டும். அதை மட்டும் எனக்குக் கொடுத்து விடு!

மூன்று பேரும் அமர்ந்திருக்க சியாமளா பரிமாறிக் கொண்டிருந்தாள்.

ஆதிக்கும், ரோமாவுக்கும் பூரியும், சென்னாவும் வைத்தவள், சுப்ரியாவுக்கு ஆனியன் தோசையும் காரச்சட்னியும் வைத்தாள்.

''அம்மா''

''என்ன ஆதி... இன்னொரு பூரி வைக்கவா?''

''சாப்பிட்டு வச்சுக்கறேன்! அதென்ன... அது தட்டுல மட்டும் பூரி தோசை மாதிரி இருக்கு?''

''அ...அது ஆனியன் தோசை ஆதி!''

''ஏன்... நாங்கள்லாம் பூரி சாப்பிடறோம். மேடத்துக்கு மட்டும் ஸ்பெஷல்?''

''அவளுக்கு பூரியெல்லாம் பிடிக்காது ஆதி...''

''இதோ பாரும்மா. இது ஒண்ணும் அவ வீடு இல்லே. வகை வகையா சமைச்சுப்போட... நீ சமையல்காரியும் இல்லே. இந்த வீட்லே தனிப்பட்ட வகையில யாருக்கும் சமைக்கக்கூடாது. நாங்க சாப்பிடறதை தான் அவளும் சாப்பிடணும். விருப்பமிருந்தா



''எங்க வீட்டு வேலக்காரி ஒரு எழுத்தாளர் மாதிரி...!''

''எத வெச்சி சொல்ற?''

''அக்கம் பக்கத்து சேதிகளை அப்படியே சொல்லாம, கற்பனைய கலந்து கூட்டி கொறச்சு சொல்றாளே, அதெ வெச்சித் தான்...!''

-கே. அகிலாண்டம், காஞ்சிபுரம்.

சாப்பிட்டும்... இல்லேன்னா கிளம்பட்டும்!''
அவன் பேச்சு சுப்ரியாவை சுருக்கென தைத்தது. மௌனமாய் எழுந்து வெளியில் வந்தான்.

''சுப்ரியா... சுப்ரியா... இரும்மா... அவன் தான் சொல்றான்னா'' சியாமளா பின்னாலேயே செல்ல..

''விடும்மா... பட்டினிகிடந்தா... கொழுப்பு கரையும்!''

''சும்மாயிரு ஆதி... என்ன சுப்ரியா... சாப்பிடாம எந்திரிச்சு வந்துட்டே?''

கண்களை துடைத்துக் கொண்டவள், பரவாயில்லே ஆன்ட்டி எனக்கெந்த கோபமும் இல்லே! அவர் சாப்பிட்டு முடிச்சதும் நான் சாப்பிட்டுக்கறேன்.''

''சு...ப்...ரி...யா!''

''போங்க... போய் கவனிங்க!'' என்றாள் சின்ன சிரிப்புடன்.

சியாமளாவுக்கு வியப்பு.

''எதிரில் நிற்பது சுப்ரியா தானா? இத்தனை சாத்வீகமான வார்த்தைகளை அவளா சொல்கிறாள்? நிம்மதியுடன் உள்ளே வந்தாள்.

''ஆதி... என்னப்பா நீயா இப்படியெல்லாம் நடந்துக்கறே? யார் மனசும் புண்படக்கூடாது, யார் வயிறும் காயக்கூடாதுன்னு தர்மகாரியங்கள் பண்ற என் பிள்ளையா... இப்படி நடந்துக்கறது?''

''அவளை எனக்கு பிடிக்கலேம்மா.''

''ஒரு குழந்தைய ஆண் வளர்க்கறதுக்கும், பெண் வளர்க்கறதுக்கும் நிறைய வித்தியாசம் இருக்கு. நானும் ஒரு பொண்ணை பெத்திருக்கேன் ஆதி! தேவையில்லாத சகவாசம் சுப்ரியாவை முரட்டுத்தனமான ஆக்கியிருக்கு. அதையெல்லாம் மறக்கணும்னுதானே என் தம்பி அவளை இங்கே கொண்டுவந்து விட்டிருக்கான். நீயும் அவகிட்டே அன்பா நடந்துக்கணும் ஆதி!''

''அதெல்லாம் தானா வரணும்மா! எனக்கு வராது விட்டு!''

வாசல் படிக்கட்டிலிருந்து இறங்கி நடந்தாள். சரிவாய் இறங்கிய வழியில்... இருபக்கமும் ரோஜாப்பூக்களும், குரங்கு வால் பூக்களும் மணமை ஆக்கிரமித்தது.

சற்று தூரத்தில் காரிலிருந்து கோகுல் இறங்குவதை பார்த்த சுப்ரியா பதறினாள்.

அப்போது தான் கோகுலை இங்கு வரச்சொன்ன ஞாபகம் வந்தது.

''மைகாட்...'' பின்பக்கம் திரும்பிப் பார்த்தபடி வேகமாய் இறங்கி ஓடினாள்.

இவளைப் பார்த்ததும் உற்சாகமாய் கையை ஆட்டியபடி வந்த கோகுல், ''ஹாய் சுப்ரியா...!'' என்றான்.

''கோகுல்...' அங்கே... அங்கேயே நில்லு!'' மூச்சிரைக்க அவனருகில் வந்து நின்றாள்.

''எப்படியிருக்கே டியர்!''

''அதெல்லாம் இருக்கட்டும்... அப்புறம் பேசிக்கலாம். இங்கேர்ந்து சீக்கிரம் கிளம்பு!''



''என்ன சுப்ரியா... வரச்சொன்னே... வந்தேன்... இப்ப உடனே போங்கறே...'' கோகுலின் முகம் சடுதியில் மாறியது.

''என்ன சொல்லி விரட்டுவது? ஆதி இவனைப் பார்த்துவிட்டால் அவ்வளவு தான்!''

சட்டென ஒரு யோசனை உதித்தது.

''கோகுல்... இப்ப பேச நேரமில்லை. நிலைமை ரொம்ப மோசம்... டாடி திடீர்னு வந்துட்டார். உள்ளே தான் இருக்கிறார்.''

''மைகாட்!''

''உன்னைப் பார்த்துட்டார்னா அவ்வளவுதான். குய்க்... கிளம்பு! சென்னைக்கே போய்டு!

''நீயும் என்னோட வந்துடு சுப்ரியா. நாம... நாம கல்யாணம் பண்ணிக்கலாம்.''

''ஸ்டுப்பிட்! நாம கல்யாணம் பண்ணிக்கறதுக்கா உன்னை இங்கே வரச் சொன்னேன்? டாடி உன்னைப் பார்த்துட்டார்னா என்னாலக் கூட உன்னை காப்பாத்த முடியாது. கிளம்புன்னு சொல்றேனில்லே?'' அவ்வப்போது பயத்துடன் திரும்பி... திரும்பிப் பார்த்துக் கொண்டாள்.

''எவ்ளோ ஆசையா வந்தேன். என்னை ஏமாத்திட்டே?''

''ஏமாத்திட்டேனா? ஜூஸாடா நீ? யூ ஆர் மை பிரண்ட்! ஜஸ்ட் பிரண்ட்! ஓக்கே? உன்கிட்டே பேசிக்கிட்டிருக்க நேரமில்லே. கிளம்பு... பை... குட் பை!''

''சுப்ரியா... சுப்ரியா!''

அவன் கத்த கத்த இவள் வீட்டை நோக்கி திரும்பி நடந்தாள்.

சற்று நேரம் கத்திவிட்டு காரை கிளப்பிக் கொண்டு போய்விட்டான் கோகுல்.

கார் போகிற சத்தம் கேட்ட பின்பு திரும்பிப் பார்த்து நிம்மதியாய் மூச்சுவிட்டாள் சுப்ரியா.

வேற்று கிரகத்திலிருந்து வந்தவனைப்போல் கலரிங்குடன் கூடிய ஹேர் ஸ்டைலையும், ஒத்தைக்காது கடுக்கணையும், முக்கால் பேண்ட், தொள தொள ஷர்ட்டையும் மாட்டிக்கொண்டு வந்திருந்தவனை ஆதித்யா மட்டும் பார்த்திருந்தால் என்னை அல்லவா மட்டமாய் எடைபோட்டிருப்பான்?'

எல்லாம் சரி கோகுலின் உடையே அவன் குணமற்றவன் என்று உணரச் செய்கிறது என்ற எண்ணம் எனக்கேன் இதற்கு முன்பு தோன்றவில்லை?

அவளுக்கே பிடிபடவில்லை.

அடுத்த நாளிலிருந்து சுப்ரியாவிடம் தெரிந்த மாற்றம் அம்மாவுக்கும் பெண்ணுக்கும் வியப்பைத் தந்தது.

ஆறு மணிக்கே அலாரம் வைத்து எழுந்து குளித்து கிச்சனுக்கு வந்தாள்.

''ஆன்ட்டி... நான் காய்கறி நறுக்கித் தரட்டுமா?''

''அதெல்லாம் வேண்டாம். நீ ஏம்மா இவ்ளோ சீக்கிரம்

எந்திரிச்சிட்டே?''

''நல்லது தானே... பழகிக்கறேன்?! அப்புறம் எனக்காக தனி சமையல் பண்ணாதீங்க. நீங்க எல்லோரும் என்ன சாப்பிடறீங்களோ... அதையே நானும் சாப்பிடறேன்!''

''எம்மா கப்ரியா? ஆதி சொல்லிட்டான்னு நீ மனசுல...''

''சேச்சே! அவர் சொன்னதுல எந்த தப்பும் இல்லே ஆன்ட்டி! வாழ்க்கைன்னா என்ன? குடும்பம்னா என்னன்னு எனக்கு இப்பதான் கொஞ்சம் கொஞ்சமா புரிய ஆரம்பிச்சிருக்கு!''

''கப்ரியா... என் கண்ணே!'' சியாமளா அவளை இழுத்து தன் நெஞ்சில் முகம் சாய்த்துக் கொள்ள அந்த அன்பான வார்த்தையும், கதகதப்பான நெஞ்சமும் புதிதாய் அவளுக்கு அறிமுகமாக சட்டென கலங்கிப்போனாள் கப்ரியா.

**10**

''ஏய்... ஏய்... கப்ரியா... நீ என்னப் பண்ணிக்கிட்டிருக்கே இங்கே!'' கொல்லைப்பக்கம் வேகமாய் வந்தாள் ரோமா.

''துணி துவைச்சிட்டிருக்கேன்!''

''அதை தான் என்னுக் கேக்கறேன்!''

''என் துணிதானே ரோமா? அதை நான் தானே துவைக்கணும்?''

''நேத்து எங்கண்ணன் உன் துணிய துவைக்கிறப்ப திட்டிட்டார்னு தானே கோவத்துல...''

''நீயும் ஏன் என்னை தப்பாப் புரிஞ்சுக்கறே ரோமா? உங்கண்ணன் திட்டும்போது ஒருபக்கம் மனசுக்கு வருத்தமாதான் இருந்துச்சு. ஆனா, அவர் உன்மேல எவ்ளோ பாசம் வச்சிருக்கார்? உன்கிட்டேயும், ஆன்ட்டிகிட்டேயும் சும்மா சாதாரணமா பேசிக்கிட்டிருந்தாக் கூட அதிலே வெளிப்படற நேசமும் வார்த்தையும்... எனக்கேப் பொறாமையா இருக்கு ரோமா!'' குரல் மெலிதாகி கலங்கலாய் வெளிப்பட்டது.

''க...ப்...ரி...யா!''

''என்கிட்டே இந்த மாதிரியெல்லாம் யாரும் அன்பு காட்டினதே இல்லை தெரியுமா?



''பழைய பேப்பர்க்காரனுக்கு தேர்தலில் சீட்டு கொடுத்தாங்களாமே...?''

''தோட்டகல் பேனர் எல்லாவற்றையும் எடைக்குப் போட்டுட்டு பணம் பார்த்துட்டான்!''

-எம்.அசோக்ராஜா, அரவக்குறிச்சிப்பட்டி.



ரொம்ப ஏக்கமா இருக்கு ரோமா!''

''ஏய்!'' பரிவுடன் அவள் தோளைத் தொட்டாள்.

''நாங்கள்லாம் இல்லியா உனக்கு?''

''தாங்க்ஸ்!''

''இ...இதை எப்படி பிரஷ் பண்ணனும்னு சொல்லிக்குடு!''

''நீ எந்திரி... நான் வாஷ் பண்றேன்!''

''நோ... நோ நானே பண்ணிக்கறேன்... கத்துக்குடு... போதும்!''

''உனக்கென்ன தலையெழுத்து சுப்ரியா? உங்கப்பா உனக்காக சேர்த்து வச்சிருக்கிற சொத்தே நூறு கோடி தாண்டும். நீ இங்கே வந்து...''

''ஆனாலும் அன்பு கிடைக்காத ஏழைதானே நான்? ஆதிக்கிட்டே நல்ல பேர் வாங்கணும். என்கிட்டேயும் அன்பா பேசணும். அதுக்காக நான் எந்தளவுக்கும் மாறத் தயாரா இருக்கிறேன் ரோமா!''

இயல்பாய் தான் சொன்னாள். ஆனால், அதில் பொதிந்திருந்த அர்த்தம் மனமாச்சர்யத்தை உண்டாக்கியது.

பயமும், சந்தோஷமுமாய் சுப்ரியாவை ஏறிட்டாள். அவளோ துவைப்பதில் கவனமாயிருந்தாள்.

ஜன்னல், டேபிள்களில் தூசி தட்டுவது, ரோமாவுடன் காய்கறி வாங்க மார்க்கெட் செல்வது, சமையலில் சிறுசிறு வேலை செய்வது, கோணல், மாணலாக சப்பாத்தி மாவைத் திரட்டுவது என்று லயித்து செய்தாள் சுப்ரியா. எவ்வளவுத் தடுத்தும் கேட்பதில்லை.

அன்று குன்னூர் சென்று வந்த ஆதித்யா... கை நிறைய பார்சலுடன் வந்தான்.

''என்ன ஆதி இதெல்லாம்?''

''அடுத்த வாரம் என் பர்த்டே வருதேம்மா. ரெண்டு மூணு வருஷமா உங்களோட கொண்டாட முடியலை. இந்த வருஷம் ஹாப்பியாக கொண்டாடப்போறேன். அதான்... உங்களுக்கெல்லாம் டிரஸ் வாங்கிட்டு வந்தேன்!''

''எங்களுக்கு எதுக்குண்ணா?''

''சரி... முதல்ல ஆ...காட்டு! உனக்கு பிடிச்ச ரசமலாய் ஸ்பூனால் எடுத்து தங்கையின் வாயில் ஊட்டினான்.

''அம்மா... நீ அதிகமா சாப்பிடக்கூடாது... கொஞ்சமா... இந்தா!'' அம்மாவுக்கும் ஊட்டி விட்டான்.

பிறகு தானும் வாயில் போட்டுக் கொண்டான்.

''இது உனக்கு ரோமா!''

''ஐயோ... பட்டுப்புடவையா?''

''ஆ... பட்டுப்புடவையான்னு கேட்டா... ஒரு அர்த்தம் இருக்கும்.''

''எதுக்குண்ணா காஸ்ட்லியா?''

''என் தங்கைக்கு நான் செய்யாம வேற யாரு செய்யறதாம்? அம்மா இது உனக்கு!''

''வயசான காலத்துல எனக்கெதுக்குப்பா பட்டுப்புடவையெல்லாம்?''



''கஷ்டப்பட்டு ஆளாக்கி என்னை இந்த உயரத்துல வச்சது நீதானேம்மா!''

சுப்ரியா தன் அறை வாசலிலிருந்து அவர்களையே ஏக்கத்துடன் பார்த்தாள்.

குடும்பம் என்றால் அன்பு, நேசம், சின்னச்சின்ன பரிசுகள், உரசல்கள், கூடல்கள்... அத்தனையும் உள்ளடக்கிய அந்த சிறிய வீட்டில்... சிறிய குடும்பத்தில் அர்த்தமாய் வாழ்கிற அவர்களை பார்க்கையில் மனசு பாரமானது.

'என்ன இல்லை என்னிடம்? ஆனால் இருக்க வேண்டிய எதுவுமே இல்லாமல் இருபது வருடமாய் வாழ்ந்திருக்கிறேனே? பரிசுப் பொருளை சுற்றிய வண்ணக்காகிதம் போல் பளபளப்பான வாழ்க்கை தானே அது? உள்ளிருக்கிற பரிசுப்பொருள் கைக்கு வந்த உடன் காகிதங்கள் குப்பைக்கு போய் விடுவது போலல்லவா இருந்திருக்கிறது என் அந்த நேரத்து சந்தோஷங்களும்? என் இழப்பு எவ்வளவு பெரியது?'

''ஆதி... எங்க ரெண்டு பேருக்கும் குடுத்துட்டே! சுப்ரியாவுக்கு!''

''அவளுக்கு எதுக்கும்மா? நீ என் அம்மா. ரோமா என் தங்கை. வாங்கி வந்தேன். அவ யாரும்மா எனக்கு? நான் ஏன் அவளுக்கு வாங்கணும்?'' என்றான் எரிச்சலாக.

''தெரியாம கேட்டுட்டேன் விட்ரு!''

சுப்ரியா மனம் கசிய உள்ளே போய் விட்டாள்.

''ஆதி... நிஜமாகவே உங்களிடமிருந்து டிரஸ்ஸை எதிர்பார்த்தது மனசு. இதெல்லாம் நடக்காது என்று தெரிந்தும் கூட ஆசைப்படுறேன். நீ என்னை வெறுக்க... வெறுக்க... என் அன்பு அதிகமாகிறது. நீ விலக... விலக உன்னை நெருங்கி வந்துக் கொண்டே இருக்கிறேன். என்னை என்னால் கட்டுப்படுத்த முடியவில்லை ஆதி! எத்தனையோ ஆண்கள் என்னை விரும்பினார்கள். ஆனால், அவர்கள் யாரையும் நேசிக்காத இதயம் உன்னை மட்டும் ஏன் நேசிக்கணும்?' கன்னத்தில் இறங்கி உருண்டது கண்ணீர்.

அதிகாலையிலேயே எழுந்து சமையலில் ஈடுபட்டிருந்தனர் சியாமளாவும், ரோமாவும்.

ஆறு மணிக்கு இவ்ளோ சீக்கிரமா? வாசனை கமகமன்னு வீடு முழுக்க கத்திக்கிட்டிருக்கு.''

''இன்னைக்கு ஆதிக்கு பிறந்தநாளாச்சே! அதுக்கு தான் இத்தனையும்? தவிர, அஸ்வினையும் சாப்பிடக்கூப்பிட்டிருக்கோம்.''

''ரியல்லி? அதான் மேடம் வேக வேகமா வேலை செஞ்சிட்டிருக்காங்களா?'' ரோமாவின் கன்னத்தைத் தட்டி சிரித்தாள்.

''அப்படியெல்லாம் ஒண்ணுமில்லை!'' வெட்கத்தில் முகம் சிவந்தாள்.''

''சுப்ரியா... நாங்கள்லாம் பக்கத்திலே பெல் மவுண்ட்ல

சவுடேஸ்வரி அம்மன் கோவிலுக்குப் போகிறோம். நீயும் ரெடியாகிக்க!''

''ஓ... இதோ!'' சந்தோஷம் அப்பிக்கொள்ள துள்ளிக்குதித்து ஓடினான்.

''பச்சைக்குழந்தை மாதிரி நடந்துக்கறா. முன்னே மாதிரியேல்ல... கவனிச்சியா?''

''ஆமாம்மா!''

''தயானன் பார்த்தா சந்தோஷப்படுவான். போன் பண்ணி வரச்சொல்லணும்!''

''ஆமாம்மா!''

''நிஜமாவே நான் சொல்றதெல்லாம் காதிலே விழுதா... இல்லே கவனமெல்லாம் வேறெங்கோ போயிடுச்சா?''

''போம்மா... நீயும் சுப்ரியாகூட சேர்ந்து கெட்டுப்போய்ட்டே!'' செல்லமாய் கோபித்துக் கொண்டு சிரித்துக் கொண்டே ஓடிப்போனான் ரோமா.

கருநீல ஜீன்சும், இளநீல ஷர்ட்டும் ஆதித்யாவுக்கு வெகு அம்சமாய், கம்பீரமாய் இருந்தது. துளிக்கூட தொப்பை இல்லை, பரந்த தோள்களும், உயரமும் யாரையும் வசீகரிக்கும்.

வாசலில் நின்றபடியே... அவனை விழியகலாமல் பார்த்து ரசித்தாள் சுப்ரியா.

முதுகில் எதுவோ ஊர்வது போல் உணர்ந்த ஆதி, சட்டென திரும்பினான். வாசலில் நின்றிருந்தவளைப் பார்த்து முகம் கருக்கினான்.

''ஏய்... இங்கே என்ன பண்ணிட்டிருக்கே?''

''உங்களுக்கு விஷ் பண்ணிட்டுப் போகலாம்னு...'' தயங்கித் தயங்கி உள்ளே வந்தாள்.

''அதெல்லாம் ஒண்ணும் தேவையில்லை... வெளியே போ!''

''ஆதி ப்ளீஸ்! இ... இது நான் உங்களுக்கு தர்ற பர்த்டே பிரெசென்டேஷன்!'' ஒரு அழகிய தங்க மோதிரத்தை அவனிடம் நீட்டினாள்.

''ஏய்... உனக்கு கொஞ்சம் கூட சொரணையே இல்லையா? நீ யார் எனக்கு பரிசு தர? என்ன... உன் பணக்கார புத்தியை காட்டறியா?''

''ப்ளீஸ் ஆதி? ஏன் என்னைப் புரிஞ்சுக்க மாட்டேங்கறீங்க? ஏன் வெறுக்கறீங்க. அவ்வளவு மோசமானப் பெண்ணா நான்?''

''அதுல கூட சந்தேகமா உனக்கு? நீயெல்லாம் மும்பையிலே... மோசமான ஏரியாவுல இருக்க வேண்டியவ... இங்கே வந்து என் வீட்டு புனிதத்தை அசிங்கப்படுத்திக்கிட்டிருக்கே!'' என்றான் காரமாக.

''போதும் ஆதி! எவ்ளோ மோசமாப் பேசறீங்க? நான் ஜாலியா வாழ்ந்தவ தான். ஆனா, எந்த சூழ்நிலையிலேயும் தரங்கெட்டுப் போயிடலே! என் லைப்ல யாருக்குமே கட்டுப்பட்டதில்லே, ஆனா, உங்களுக்காக என்னையே நான் மாத்திக்கிட்டேன். நீங்க எவ்வளவோ என்னை மட்டமாப் பேசினாலும் வருத்தப்பட்டிருக்கேனே தவிர, கோபப்பட்டதில்லே? ஏன் தெரியுமா?''

''...?!''

யார் மேலயும் வராத காதல் உங்களைப் பார்த்ததும் வந்தது''

''காதலா? அதுக்கு என்ன அர்த்தம்னு தெரியுமா உனக்கு? அதெல்லாம் மனுஷங்களுக்குள்ளே வர்றது. உன்னை மாதிரி அல்சேஷியன்களுக்கல்ல...!

''ஆ...தி!'' அந்த வார்த்தையில் நொறுங்கிப் போனாள்.

''இதோ பார்! என் பிறந்தநாளை என் பேமிலியோட ஹாப்பியாக் கொண்டாடணும்னு ஆசைப்படறேன். என் மூடை ஸ்பாயில் பண்ணிடாதே! எங்கம்மா உன்னைக் கோவிலுக்கு வரச் சொல்லி கூப்பிடுவாங்க. ஏதாவது காரணம் சொல்லி அவாய்ட் பண்ணிடணும். உன்னை என் கார்ல ஏத்தி... அதை அசிங்கப்படுத்த விரும்பலே.''

அதற்கு மேல் கேட்டுக் கொண்டிருக்க முடியாமல் போய் விட்டாள் சுப்ரியா.

தனிமையில் அழுது தீர்த்தவள், வயிறு வலிக்கிறது என்று கோவிலுக்கு வர மறுத்தாள்.

அன்று முழுக்க ஆதியின் கண்களில் படாமல் படுத்துக்கிடந்தாள்.

## 11

பழைய நண்பர்களை சந்தித்து விட்டு வீட்டிற்கு வந்தவனை சியாமளா காபியுடன் புகார் கூற ஆரம்பித்து விட்டாள்.

''பாரு ஆதி... ரோமா என்னென்னவோச் சொல்றா!''

''என்னவாம்?''

''போன வாரம் அஸ்வினோட அம்மாவும், அப்பாவும் நம்ம வீட்டுக்கே வந்து வர்றதையிலே கல்யாணத்தை வச்சுக்கலாம்... நாள் குறிச்சிடலாமான்னு கேட்டப்ப நாமளும் சரின்னு தானே சொன்னோம்?''

''ஆமாம்... அதுக்கென்ன இப்ப?''



''மன்னர் ஏன் காலில் சக்கரத்தை கட்டி பயிற்சி செய்கிறார்?''

''போர் முனையிலிருந்து புறமுதுகிட்டு ஓடிவர முடியலையாம்''

-க.வேடியப்பன், கும்மிடிப்பூண்டி

''இப்போதைக்கு கல்யாணம் வேணாமாம்!''
''பின்னே?''
''முதல்ல அண்ணனுக்கு முடியுங்க... அடுத்த முகூர்த்தத்திலேயே நான் பண்ணிக்கறேங்கறா!''
''பைத்தியமா அவளுக்கு... எங்கே அவ?''
''இங்கே தான் நிக்கறேன்!'' அவள் பின்னாடியிருந்து வந்தாள்.
''என்னாச்சு ரோமா? என்ன குழப்பம் உனக்கு?''
''எனக்கு எந்த குழப்பமும் இல்லேண்ணா! தெளிவா யோசிச்சு தான் சொல்றேன். நானும் கல்யாணம் பண்ணிக்கிட்டு போய்ட்டா... அம்மாவை யாரு பார்த்துக்கறது?''
''ஏன்... நான் இல்லையா?''
''பிராக்டிகலா யோசிண்ணா! இன்னும் பத்து நாள்ல நீ வேலைல ஜாய்ன் பண்ணிடுவே! நீ குன்னூர்லேருந்து வீடு வர எப்படியும் ஏழெட்டு பணியாகிடும். உடம்பு சரியில்லாத அம்மாவுக்கு இந்த இடைப்பட்ட நேரங்கல்ல முடியாமப் போச்சுன்னா? நான் இருக்கிறவரை பிரச்னையில்லை. நானும் போயிட்டேன்னா!''
''ஆமாம்மா... அவ சொல்றதும் சரி தானே? வீட்டோட ஒரு வேலைக்காரிய ஏற்பாடு பண்ணிடலாம்.''
''வேலைக்காரிய நம்பி எப்படி விட முடியும்? முதல்ல இந்த வீட்டுக்கு ஒரு அண்ணி வரட்டும். அதுக்கப்புறம் நான் என் மாமியார் வீட்டுக்குப் போகிறேன்.''
அதெப்படி... வீட்டுல வயசுப் பொண்ணை வச்சுக்கிட்டு, பெரியவனுக்கு கல்யாணம் பண்ணுவாங்க? நீயே சொல்லு ஆதி? அவங்க நாள் குறிக்க சொன்னப்பிறகு நாம தள்ளி வைக்க முடியுமா?''
''ரோமா... நீ யோசிச்சது நல்ல விஷயம் தான். அதுக்கு வேற சொல்யூஷன் இருக்கு. நாளைக்கு முகூர்த்த நாள் குறிக்கப்போறோம். அதுல எந்த மாற்றமும் இல்லே!''
''இல்லேண்ணா! நான் சம்மதிக்க மாட்டேன்.'' உங்களுக்கு முதல்ல கல்யாணம். அடுத்து தான் எனக்கு.''
''என்ன பிடிவாதம் இது? விளையாட்டான விஷயமா கல்யாணம்? பொண்ணு பார்க்கறதிலேர்ந்து ஆயிரம் விஷயம் இருக்கு!''
''பொண்ணுக்கா பஞ்சம்? நம்ம சொந்தக்காரங்கள்லேயே எத்தனைப் பொண்ணுங்க இருக்காங்க? அதுல... அண்ணனை நேசிக்கிறப் பொண்ணாப் பார்த்து பண்ணுங்க. அப்படிப்பட்ட பொண்ணு தான் அம்மாவையும் சந்தோஷமா வச்சுக்கும்.''
''ரோமா.. விட்ரு! எனக்கு எப்ப கல்யாணம் பண்ணிக்கணும்னு தெரியும்! சின்னக் குழந்தை மாதிரி அடம் பிடிக்காதே!''
''நான் சொல்றதை...''
''ப்ளீஸ் ரோமா... அம்மா மேல எனக்கும் அக்கறை இருக்கு. புரியுதா?'' அழுத்தம் திருத்தமாய் சொன்னான்.
அதற்கு மேல் ரோமாவால் பேச முடியவில்லை. அட்டக்கட்டியை சேர்ந்த ஷியாமளாவின் தோழி அனுசுயா அடுத்த



வாரத்தில் வீடு தேடி வந்தாள்.
சும்மா வரவில்லை. லட்டு மாதிரி வரனோடு தான் வந்திருந்தாள்.
''பொண்ணு பேர் ரேவதி. என் அக்காப்பொண்ணு. பி.இ. படிச்சிருக்கா. முப்பதாயிரம் சம்பளம் வாங்கிட்டிருக்கா. கல்யாணத்துக்குப் பிறகு வேலைக்கு அனுப்புறதும், வீட்டோட வச்சுக்கறதும் உங்க இஷ்டம். இதோ போட்டோ, சினேகா மாதிரியே இல்லே? நம்ம ஆதித்யாவை ரேவதியும், என் அக்காவும் ஏற்கனவே பார்த்திருக்காங்க.
அவங்களுக்கு முழு சம்மதம், உனக்கும், உன் பையனுக்கும் பிடிச்சிருக்கான்னு ஒரு வாரம் கழிச்சு சொல்லுங்க. இதோ.. பொண்ணோட ஜாதகம்!'' என்று கொடுத்து விட்டு போய் விட்டாள்.
ஷியாமளாவுக்கு ரேவதியை ரொம்பவே பிடித்து விட பையன் வந்ததுமே விபரம் சொல்லி போட்டோவை காண்பித்தாள்.
சுப்ரியா அவர்களையே பார்த்துக் கொண்டிருந்ததை ஆதி கவனிக்கத் தவறவில்லை.
''எனக்கும் பிடிச்சுருக்கும்மா! உனக்கும் பிடிச்சிருந்தா முடிச்சிடும்மா. ஆனா, ரோமாவுக்கு ஆனப்பிறகு தான் பண்ணிப்பேன். ரோமா, இப்ப உன் கவலை தீர்ந்ததா?'' என்று கேட்டான்.
ரோமா ஒன்று நினைத்திருக்க... வேறு ஏதோ நடக்க... பதிலேக் கூறாமல் குழப்பத்துடன் பார்த்தாள். சுப்ரியாவின் கலங்கிய கண்களையும் கண்டு கலக்கமுற்றாள்.
ஆதி தன் கை விட்டுப் போய் விடுவானோ என்ற பயம் சுப்ரியாவை காய்ச்சலில் தள்ளியது. அவன் தனக்கு கிடைக்காவிட்டால் வாழ்வதே அர்த்தமில்லாதது போல் பயந்தாள்.
ஷியாமளா ஒரு தாயைப்போல் சுப்ரியாவை கவனித்துக் கொண்டாள்.
''வேறொருத்தி இந்த வீட்டிற்கு வந்து விட்டால்.. இந்த அன்பும், அரவணைப்பும் எனக்கு எப்போதுமே கிடைக்காதே! ரோமாவும் உள்ளன்புடன் என்னைத் தாங்கிக் கொள்கிறாள்.
எத்தனை கோடி கொட்டிக் கொடுத்தாலும் இது போன்ற பாசம் கிடைக்குமா? நோ... விடக் கூடாது. இந்த சொந்தங்கள் எனக்கு வேண்டும். ஆதியின் இதயத்தில் இடம் வேண்டும். மனசு விட்டு பேசியே ஆக வேண்டும். தீர்மானித்தாள்.
அன்று மாலை! காய்ச்சலில் தேறி எழுந்த சுப்ரியா வாடிய மலராய் மொட்டை மாடியிலிருந்த ஆதித்யாவைத் தேடி வந்தாள்.
யாரிடமோ செல்போனில் பேசிக் கொண்டிருந்த ஆதி... இவளைப் பார்த்ததும் நகர்ந்து கீழே போக முயல... ''ப்ளீஸ்... நான் உங்ககிட்டே கொஞ்சம் பேசணும்....பேசியே ஆகணும்!

என்றான் கெஞ்சலும், உறுதியமாய்.

"ஸ்மைல்... கால் யூ லேட்டர்! என்று லைனை கட் பண்ணி போனை பாக்கெட்டில் போட்டுக் கொண்டு இவளையே பார்த்தான்.

பனிமேகக் கூட்டமொன்று இவர்களை உரசிக் கொண்டு சென்றது. தூரத்தில் தெரிந்த மலை முகடுகளை போர்த்திக் கொண்டிருந்தது மற்றக் கூட்டம்!

ரம்மியமான மாலைப்பொழுது! அழகான சூழ்நிலை. காதல் உணர்வை மேம்படுத்தும் சிலிர்ப்பான காற்று. மனதை ஆட்கொண்டவன் எதிரே!

சற்றே நிறம் மங்கி, களைப்பையும், வேதனையும் சுமந்த பார்வையுடன், கலைந்திருந்த பதலை முடியை சீர் பண்ணக் கூட தோன்றாமல், ஏனோ தானோவென்று சல்வாரை உடுத்திக் கொண்டு, முற்றிலும் மாறிப் போயிருந்த சுப்ரியாவை பார்க்கையில் ஒரே ஒரு கணம் 'ஐயோ...' என்று பதறிய உள்ளத்தை உடனடியாக நசுக்கியது இன்னொரு காட்சி.

'என்னோட டேட்டிங் வர முடியுமா?' மண்டையில் அடிப்பதுப் போல் எதிரொலித்தது சுப்ரியாவின் குரல்.

"என்ன?" என்றான் சுருக்கிய முகத்துடன்.

"ஆதி..."

"......?!"

"நீங்க நம்புவீங்களோ, மாட்டீங்களோ... நான் இதுவரை யாரையும் லவ் பண்ணினதில்லே?"

"....?!"

"ஆனா, என்னைக்கு உங்களைப் பார்த்தேனோ, அன்னையிலேர்ந்தே நான் உங்களை நேசிக்கத் துவங்கிட்டேன் ஆதி! நான் யார்கிட்டேயும் கெஞ்சியதே இல்லை. ஆனால் உங்களுக்காக நான் மனசளவிலேயும் நிறைய மாறிட்டேன். மாத்திக்கிட்டேன்.

ஐ... ஐ லவ் யூ ஆதி... ஐ லவ் யூ ஸோ மச்! கல்யாண வாழ்க்கையை ஒரு நாளும் யோசிச்சதில்லை. ஆனா, இப்ப நிறைய ஆசை உண்டாகுது. உங்களை கல்யாணம் பண்ணிக்கிட்டு சராசரிப் பொண்ணுங்களைப் பேல், குழந்தை, குடும்பம்னு செட்டிலாகனும்னு ஆசையாயிருக்கு ஆதி! ப்ளீஸ்... என்னை ஒதுக்கிடாதீங்க!"

அந்த கோமஸ்வரி... அவனின் காதலுக்காக பிச்சைக்காரியைப் போல் அவன் கைகளைப் பற்றி கெஞ்சினாள்.

"ச்... கைய விடு!" உதறி விடுவித்துக் கொண்டான்.

"ஆ...தி!"

"என்கிட்டே மட்டுமில்லே.... வேறெந்த ஆம்பளைக்கிட்டேயும் காதலைச் சொல்ற தகுதி உனக்கில்லை!"

".....?!"

"உன் லைஃப் ஸ்டைலுக்கும், குடும்ப வாழ்க்கைக்கும்



"உங்க உடம்பு ரொம்ப பலவீனமா இருக்கு. போய் டாக்டர்கிட்ட காட்டுங்கள்!"

"ஏண்டி இந்த அக்கறை!"

"இரண்டு அடியிலேயே மயங்கிடுறீங்க... சண்டையில் ஒரு அர்த்தம் இல்லாம போயிடுது...!"

-ம.இராமலிங்கம், வாளாமங்கலம்.



ரொம்ப தூரம்!"

".....?!"

"நான் ரொம்பவே பொஸஸிவ்! என் மனைவி என்னைத் தவிர வேற யாரையும் மனசாலக் கூட நினைக்கக் கூடாதுன்னு நினைப்பவன். அந்த ஒரு விஷயத்திலேயே நீ அடிபட்டுட்டியே! இந்த ஜென்மத்திலே மட்டுமில்லே எந்த ஜென்மத்திலேயும் நீ மட்டுமில்ல.... உன்னை மாதிரி பொண்ணுக் கூட மனைவியா வந்துடக் கூடாது."

"ஆ...தி!"

"சைத்தான் நேர்ல போக முடியாத இடங்களுக்கு உன்னை மதாரிப் பொண்ணுங்களை அனுப்பி வைப்பான். நல்ல வேளை நீ யார்னு முதல்லேயே தெரிஞ்சதால, தப்பிச்சேன். உனக்கும் பிராஸ்ட்டிடியூட்டிற்கும் பெரிய வித்தியாசமில்லை. ஸாரி... ஸாரி... பாவம் அவுங்களைக் கூட உன்னோட கம்பேர் பண்ண முடியாது.

வயித்துப் பசிக்காக உடம்பை காசுக்காக விக்கிறவங்க.... பாவப்பட்ட பிறவிகள்! ஆனா... நீ! பணத்திமிர்ல கொழுப்பெடுத்து அலையற கேடு கெட்ட பொண்ணு நீ!"

"போதும் ஆதி... போதும்! மனசொடித்து கதறி அழுதாள்.

சற்று நேரம் கழித்து, தன்னை சுதாரித்துக் கொண்டு "என்னைப்பத்தி என்னத் தெரியும் உங்களுக்கு? என் பணமும், பகட்டும் பார்த்து நீங்க போட்டதெல்லாம் போட்டது தப்புக்கணக்கு.

என் மனசுல உள்ள ஃபீலிங்ஸ் பத்தி என்னத் தெரியும்? பெங்களூருல் பார்த்துக்கிட்டிருந்த வேலைய ரிஸைன் பண்ணிட்டு இங்கே ஏன் வந்தீங்க? உங்கம்மா மேல உள்ள பாசம். அவங்க உங்ககிட்டே காட்டி அன்பு தானே ஓடி வர வச்சது? அந்த மாதிரி நானும் பாசத்துக்கு கட்டுப்பட்டு ஏதாவது காரியம் பண்ணனும்னு ஆசையாயிருக்கு.

ஆனா என்கிட்டே தான் யாருமே அந்த பாசத்தைக் காட்டலியே! மூனு வயசிலேர்ந்தே... அன்புக்காக ஏங்கி... ஏங்கி... இன்னமும் ஏங்கிக்கிட்டே இருக்கிறேன் ஆதி!"

எல்லாவற்றையும் சொல்லத் துவங்கினாள் சுப்ரியா!

**12**

தயாளனுக்கும், சுபாவுக்கும் திருமணம் நடந்த போது தயாளன் சாதாரண நிலையில் தான் இருந்தார். சுபா வந்த அதிர்ஷ்டம் ஷேர் மார்க்கெட்டில் தயாளன் வாங்கிய பங்குகளுக்கு கனவிலும் நினைத்துப் பார்த்திராத அளவுக்கு பெருத்த லாபம் கிட்டியது.

படித்த புத்திசாலியான அவர் கிடைத்த பணத்தை புதுப்புது தொழில்களில் போட்டார். நாலை நூறாக்கி இரண்டே வருடத்தில் உச்சத்திற்குப் போய் விட்டார். பணம் தயாளனை நன்றாக மாற்றியது. உற்றார், உறவினர்களை விலக்கி வைத்தார். அதில் அக்கா சியாமளாவும் அடக்கம்!

ஒரே மகள் சுப்ரியா.

திடீர் பணம் சுபாவையும் பல புதிய பழக்க, வழக்கங்களை ஏற்படுத்திக் கொள்ள வைத்தது. காரை எடுத்துக் கொண்டு ஊர் சுற்றுவாள். சுப்ரியா வேலைக்காரர்களின் கைப்பிடித்து தான் நடக்கக் கற்றுக் கொண்டாள்.

தயாளன் இன்னும் இன்னும் என்று பணத்தைத் தேடுவதிலேயே தன்னைத் தொலைத்துப் போக.. திருமணத்திற்கு முன் தொலைந்துப் போன காதலை சுபா உயிர் கொடுத்து, ஊட்டம் கொடுத்து வளர்த்தாள்.

ஒரு நாள் பணம், நகைகளுடன் பழைய காதலன் ஹரிபாபுவுடன் ஓடி போய் விட்டாள். அப்போது சுப்ரியா மூன்று வயதுக் குழந்தை! நடந்த கவட்டின் தாக்கம் புரியாமல் தாய் முகம் காணாமல் அழுதழுது மறந்தேப் போனதுக் குழந்தை!

ஆனால் தயாளன் ரொம்பவே ஒடிந்துப் போய் விட்டார். அழகு, அந்தஸ்து எல்லாம் இருந்தும் மனைவி வேறொருவருடன் ஓடிப்போய் விட்டால் அவர் ஆண்மைக்கல்லவா இழுக்கு?

வெளியில் தலை காட்ட முடியவில்லை. அசிங்கமும், அவமானமும் பிடுங்கித் தின்றன. அந்த சமயத்தில் தான் சியாமளாவின் கணவர் இறந்துப் போனார். அப்போது வெளிநாட்டிலுக்கு வந்து எட்டிப் பார்த்ததோடு சரி! சொந்த பந்தங்களை மறந்தார். ஓடிப்போனவளை தேடவும் முயற்சிக்கவில்லை.

வீட்டில் வேலைக்காரர்களை அதிகப்படுத்தி சுப்ரியாவை அவர்கள் பொறுப்பில் விட்டார். பிஸினஸில் தன்னை மூழ்கடித்துக் கொண்டார். அடிக்கடி வெளிநாடுகளுக்குப் பறந்தார்.

சுப்ரியாவுக்கு வேலைக்காரர்கள் தான் உறவினர்களாயினர். அத்தனை பேரும் சம்பளத்துக்குப் பணிபுரிபவர்கள் என்பதால் சுப்ரியாவுக்கு அன்புடன் எதுவும் கிட்டவில்லை. கடமையுணர்வுடன் எட்டவிருந்தே பழகியதால்... இயல்பிலேயே சுப்ரியாவும் யாரிடமும் ஒட்டாமலே வளர்ந்தாள்.

எப்போதாவது ஹாய் டியர்!'' என்று தூக்கிக் கொஞ்சும் அப்பாவையும் வேலைக்காரர்கள் லிஸ்டில் தான் வைத்திருந்தாள்



சுப்ரியா.

'இதைச் சாப்பிடு, இதைப்படி, என் டல்லாயிருக்கே? தலையிலே பேன் பிடிச்சிருக்கா என்ன? இப்படி சொறிஞ்சுக்கறியேடா!' என்று சொல்ல ஒரு அன்பான உறவு அவளுக்கு கிடைக்கவே இல்லை. பிறந்த நாள் கூட வேலைக்காரர்களுடன் தான், கொண்டாடினாள்.

படிப்பிலும் சுமார் தான். ப்ராக்ரஸ் ரிப்போர்ட் கார்டில் கையெழுத்துப் போடவோ, அவள் படிப்பு நிலவரம் பற்றி கவலைப்படவோ, தயாளனுக்கு நேரமும், நினைப்பும் இல்லாததால்... அவரின் கையெழுத்தை சுப்ரியாவே போடக் கற்றிருந்தாள்.

விதவிதமான உணவு! செலவுக்கு தாராள பணம். அவளுக்கென டிரைவருடன் கார்!

பத்து வயதிலேயே அவளுக்கு நட்பு வட்டம் அதிகமானது. பள்ளி முடிந்து வந்த பிறகும் தோழிகள் வீட்டிற்கு சென்று விடுவாள்.

இடையில் சில உறவுக்காரர்களும், நண்பர்களும் தயாளனை வேறொரு திருமணம் செய்துக் கொள்ளச்சொல்லி வற்புறுத்தினார்கள்.

எனக்கு சுப்ரியா இருக்கிறாள். அவள் போதும். இனி என் வாழ்க்கை அவளுக்காக மட்டும் தான் என்று தியாகியைப் போல் வசனம் பேசி வாயை அடைத்தார்.

ஆனால், மறுமணம் தான் செய்துக் கொள்ளவில்லையேத் தவிர, மற்றபடி தாம்பத்ய சுகத்தை, நள்ளிரவில் வீட்டிற்கே ...கேர்ள்ஸையும், செக்ரட்டரியையும் அழைத்து வந்து அனுபவித்தார்.

ஆரம்பத்தில் சிறு பெண்ணான சுப்ரியாவிற்கு அப்பாவின் நடவடிக்கைகள் எதுவும் தெரியாது. அவள் பருவம் அடைந்தப் பிறகு தான் அப்பாவின் நிழல் வாழ்க்கைப் புரிந்தது.

அதுவும் அவள் பருவம் அடைந்த சூழ்நிலைக் கொடுமையானது. தயாளன் அந்த சமயத்தில் கனடா சென்றிருந்தார். அந்த வீட்டில் வேலைக்காரர்கள் நிறைய இருந்தாலும், வேலைக்காரி மட்டும் ஒருத்தி தான் இருந்தாள்.

(தயாளனுக்குப் பெண்கள் என்றால் வெறுப்பாம்!) வேலைக்காரி கங்கம்மா சுப்ரியாவின் தேவைகளை மட்டும் கவனித்துக் கொள்ளவே நியமிக்கப்பட்டிருந்தாள்.

அவள் ஒரு வார லீவில் ஊருக்குப் போயிருந்த போது தான் சுப்ரியா பருவம் எய்திருந்தாள். அதைப்பற்றி அவளுக்கு யாரும் அதற்கு முன் அறிவுறுத்தியிராததால், பயந்துப் போய் தனிமையில் அழுதாள். நாப்கின் பயன்படுத்தக் கூட தெரியவில்லை.

தான் அசிங்கப்பட்டு விட்டதுப் போல், அவமானமடைந்து விட்டதுப் போல் கூனிக் குறுகிப் போனாள். அறைக்குள்ளேயே அடைந்து கிடந்தவள், பள்ளிக்கும் செல்லவில்லை. யாரிடமும் சொல்லவுமில்லை. நான்கு நாட்கள் கழித்து கங்கம்மா வந்த பிறகே

அழுதுக் கொண்டே தனக்கேற்பட்ட நிலைமையைச் சொன்னாள் கப்ரியா.

பதறிப்போன கங்கம்மா உடனடியாக ஆக வேண்டிய காரியங்களைச் செய்து தயாளனுக்கும் தெரியப்படுத்தினாள். அந்த விஷயத்தைப் பெரிதாய் எடுத்துக் கொள்ளாமல் அவளையே சடங்குகளை செய்யச் சொல்லி விட்டார்.

பருவமடைந்த பின் கப்ரியாவின் நட்பு வட்டத்தில் பெண் தோழிகள் விலக்கப்பட்டு, ஆண் நண்பர்கள் அடைக்கலமாயினர். மதுவும், தேவையற்ற பழக்கவழக்கங்களும் அறிமுகமாயின.

ஒரு கட்டத்தில் ஆண் நண்பர்களும், டிஸ்கொதே பார்ட்டியும் இல்லாமல் பொழுதேப் போகவில்லை. பை நிறைய பணமிருக்கும் பார்ட்டி என்பதால் அவளின் நண்பர்கள் வட்டம் பெருகியது.

கல்லூரிக்கு எப்பவாவது சென்று தலையைக் காட்டி விட்டு வருவாள்.

தினமும் சத்யம், மாயாஜால், அபிராமி என்று ஆங்கிலப் படங்களுக்கு நண்பர்கள் படை சூழ செல்வாள். யாருடனாவது பைக்கில் பின்னாடித் தொற்றிக் கொள்வாள். களைப்படையும் வரை பார்ட்டிகளில் நடனமாடுவாள்.

ஆனால், ஒரு விஷயத்தில் மட்டும் கவனமாகவும், நெருப்பாகவும் இருந்தாள். அத்துமீறி யாரையும் தொட விட்டதில்லை. அவளைப் பொறுத்தவரையில் நட்பில், ஆண்-பெண் பேதமில்லை. ஐ..லவ்...யூ சொன்னவர்களை ஒரு சிறு புன்னகையுடன் அலட்சியப்படுத்தினாள். நண்பர்களுடன் ஊர் சுற்றி விட்டு நள்ளிரவில் வீடு திரும்புவாள்.

அவளுக்கு ரொம்பவேப் பிடித்தது பைக் பயணம் தான்! அதுவும் மாலை மங்கி இருள் கவியும் பொழுதில் கிழக்குக் கடற்கரைச் சாலையில் கடல் காற்று முகத்தை உராயும் பயணம்... அவள் மனச்சூட்டை தணிப்பதாக இருந்தது. நண்பர்கள் தவிர, இதற்கென்றே சில ஆண்கள் இருந்தார்கள். கப்ரியாவைப் போன்ற இன்னும் பல பணக்கார இளம் பெண்கள் பைக்கில் செல்வதை பொழுதுபோக்காக செயல்பட அதிலும் காசு பார்க்க ஆரம்பித்தது சில இளைஞர்கள் படை! அவர்கள் விரும்புகிற இடத்துக்கு.

விரும்புகிற வேகத்தில் அழைத்துச் செல்வார்கள். ஹோட்டலில் நல்ல சாப்பாடு. ஆயிரம் ரூபாயிலிருந்து போய் வருகின்ற தூரத்திற்கு ஏற்றபடி ஃபீஸ்!

ஒரு நாள் நண்பன். மற்றபடி வேறெந்த அபத்தத்திற்கும் இடமில்லை. மதியம் கிளம்பினால் கிழக்கு கடற்கரை சாலை வழியாக பாண்டிச்சேரிக்கு போய் சாப்பிட்டு விட்டு அதே வழியாக சென்னைத் திரும்ப நள்ளிரவாகி விடும்.

இதுப்போன்ற பயணங்களை கப்ரியா அடிக்கடி மேற்கொள்வாள்.

ஒரு நாள் கப்ரியா பார்க்கக் கூடாத காட்சியை பார்க்க நேர்ந்தது. இரவு ஒரு மணிக்கு தூக்கம் வராமல் வாளில் நடந்தவள், அப்பாவின்



அறையிலிருந்து வெளியேறிய பெண்ணைப் பார்த்து உடல் கூசிப் போனாள். அவள் படித்தக் கல்லூரியில் வேறு வகுப்பைச் சேர்ந்த அழகான ஏழை மாணவி! மகள் வயதை ஒத்தப் பெண்ணிடம் கூடவா?

வெறுத்துப் போனாள். அந்நியமாய் உணர்ந்தாள். பிரம்மாண்டமான அந்த மாளிகையின் ஒவ்வொரு அடியும் பணத்தை அள்ளிக் கொட்டி இன்டீரியர் டெக்ரேஷன் செய்யப்பட்டிருந்தது. கண்ணாடிப்போல் பளபளத்த வீட்டினுள் மலை போல் குப்பைக்கொட்டி வைத்திருப்பதுப் போல் தோன்றியது.

வீட்டிற்கு வருவதையே வெறுத்த கப்ரியா பத்து நாளுக்கு ஒரு முறை, வாரத்திற்கு ஒரு முறை ....போன டிஸ்கொதே பார்ட்டிகளுக்கு வாரத்திற்கு நான்கு நாட்கள் போக ஆரம்பித்தாள்.

எப்போதாவது சாப்பிட்ட மதுவை எப்போதும் சாப்பிட ஆரம்பித்தாள். களைத்து மயக்கம் வரும் வரை நடனம் ஆடினாள். தினம் ஒரு நண்பன் அவளை வீட்டில் கொண்டு வந்து விடுவான். அந்த நேரங்களில் தயாளன் ஏதாவது ஹோட்டலில் எவளோ ஒருத்தியுடன் தன்னை மறந்திருப்பார்.

அல்லது தன் வீட்டில் தன் அறையில் அதிகமான போதையில், ஆழ்ந்த உறக்கத்தில் இருப்பார். வேலையாட்களுக்கோ, யாரைப்பற்றி யாரிடம் கம்ப்ளைண்ட் பண்ணுவது என்ற குழப்பத்தில் இருந்ததால்... வாயேத் திறக்கவில்லை.

அன்று!

தயாளன் இருபத்து ஐந்து வயது பெண்ணுடன் அந்த பாரில் நுழைந்தாள். அதனுள்ளே ஜோடியில்லாமல் செல்ல முடியாது. நெஞ்சகப் பகுதியில் ஆரம்பித்த உடை தொடை தாண்டி செல்லவில்லை. உடன் வந்த பெண்ணிற்கு!

மதுவை அருந்தியபடி மாதுடன் நடனமாடத் தொடங்கியவர்... நேரம் ஆக... ஆக... ஜோடிகள் மாறி யார் வேண்டுமானாலும், எவருடன் வேண்டுமானாலும் ஆடலாம் என்ற ஸ்டேஜிற்கு வந்த போது... ஆட்டமும் பாட்டமும் அதிர. நடனத்தில் மோகத்துடன் வேகமும் சேர்ந்துக் கொண்டது.

தன்னை மறந்து ஆடியவர்... அப்போது தான் தன்னுடன் நடனமாடிக் கொண்டிருந்த பெண்ணைப் பார்த்தார்.



"தலைவர் சம்பவத்துக்கேற்றபடி மாத்திப் பேசுவார்..."

"அப்ப தலைவர் ஒரு 'சமய'ச் சொற்பொழிவாளர்ன்னு சொல்லு!"

-எம். அசோக்ராஜா, அரவக்குறிச்சிப்பட்டி

அ..தி..ர்..த்..தா..ர்!

## 13

'சு...ப்..ரி..யா!'

அவர் கதாரிப்பதற்குள் இளைஞனொருவன் அவரிடமிருந்து அவளை இழுத்து இறுகக் கட்டி அணைத்தபடி... ஆடிக் கொண்டே அவளை முத்தமிட முயல...

''நோ... நோ... லாரன்ஸ்!'' என்று தடுத்தாள் அந்த நிலைமையிலும் தயாளன் உடம்பிலிருந்த ஆல்கஹால் மொத்தமும் காணாமல் போக... சுப்ரியாவை இழுத்து பளாரென அறைந்தார்.

மறுநாள்!

அப்பாவும் மகளும் எதிரெதிரே அமர்ந்திருந்தனர்.

''என்னால நம்பவே முடியல சுப்ரியா... நீயா இப்படியெல்லாம்''

''...?!''

''நான் உன்னை எப்படியெல்லாம் வருவேன்னு கனவு கண்டேன். ஆனா, நீ... அங்கே போதையோட ஒரு பையன் கூட டான்ஸ் ஆடிக்கிட்டு... ச்சே... மானமே போச்சு!''

''என்னால மட்டும்தானா டாடி?''

''சு..ப்..ரி..யா!''

''நீங்க அங்கே எப்படி வந்தீங்க டாடி? ஜோடியில்லாம உள்ளே வர முடியாதே... யார் கூட வந்தீங்க?''

''...?!'' எதிர்பாராமல் வந்து தாக்கிய கேள்வியில் நிலைகுலைந்து போனார்.

''நாம மீட் பண்ணி எத்தனை நாள்.... ஸாரி எத்தனை மாசமிருக்கும் டாடி? இது மாதிரி உட்கார்ந்து பேசி எத்தனை வருஷமாச்சு? நாம ரெண்டு பேரும் ஒண்ணா உட்கார்ந்து சாப்பிட்டதா... ப்ச்... அப்படியொரு சம்பவமே நடக்கலையே! இது மாதிரியான பார்ட்டிகளில் தான் மீட் பண்ண வேண்டியதாயிருக்கு இல்லையா?''

''...?!''

''பாவம்... எனக்காக கோடி கோடியாய் சொத்து சேர்க்கறதுக்காக டே அண்ட் நைட் உழைக்கறீங்க. எனக்காகவே... என் எதிர்காலத்திற்காகவே நீங்க ரீமேரேஜ் பண்ணிக்கலை இல்லையா? அன்னைக்கு எங்க காலேஜில படிக்கிறப் பொண்ணு... பேருக் கூட ஐ திவ்யா... லேட் நைட் வந்துட்டுப் போனா இல்லையா டாடி! பாவம் ஏழைப் பொண்ணு. எக்ஸாம்பீ கட்டறதுக்கு உதவி கேட்டு வந்திருப்பா... அப்படித்தானே டாடி?'' சினமும், கேலியும் மிகுந்து வந்தன வார்த்தைகளில்.

''இல்லே... சுப்ரியா... வந்து...!''

''சொல்லாதீங்க டாடி! எந்த சமாதானத்தையும், நம்பற மாதிரி கட்டுக்கதைகளையோ இந்த மாதிரியான விஷயங்களுக்காக... அதுவும் ஒரு அப்பா, பொண்ணுக்கிட்டே சொல்ல வேண்டாம்... ப்ளீஸ்!

''...?!''

''நான் இந்த வீட்ல இழந்தது நிறைய டாடி! அதை பட்டியல் போட்டு சொல்ல முடியாது. தாய்ப்பாசமே கிடைக்காத எனக்கு நீங்க மட்டும் பாசத்தை அள்ளியாக் குடுத்தீங்க? நான் பி.சி.ஏ. படிக்கிறேனா, பிபிஏ படிக்கிறேனான்னு கூடத் தெரியாத மிகப் பெரிய பிஸினஸ்மேன் இல்லையா? நான் அந்த காலேஜ்ல தான் படிக்கிறேன்னுத் தெரிஞ்சிருந்தா... திவ்யா இங்கே வந்திருக்க மாட்டாதானே?''

அவள் பேசிய ஒவ்வொரு வார்த்தையும் செருப்பால் அடிப்பது போலிருந்தது தயாளனுக்கு.

தன் தவறுகளும், போலித்தனமான வாழ்க்கையும் பிடிபட்டது.

ஒரு வாரம் செல்போன்களை எல்லாம் அணைத்துவிட்டு, அலுவலகம் செல்லாமல் வீட்டிலேயே இருந்தார். தன்னை நினைத்து வெட்கப்பட்டார். தன் மன அழுக்குகளை கழுவிக் கொண்டார்.

மகளை அழைத்துப் பேசினார்.

''ஸாரி சுப்ரியா... என்னால விளக்கமாப் பேச முடியல... அசிங்கமாயிருக்கு. ஆனா தப்பு செய்துட்டேன். ஸாரிடா! இனிமேல் உனக்கு சிறந்த தகப்பனா இருப்பேன்''

''...?!''

''நான் உனக்கு அலையன்ஸ் பார்க்க ஆரம்பிச்சிட்டேன். நல்ல பையனாப் பார்த்து சீக்கிரமே கல்யாணம்...''

''நோ... நோ... டாடி! கல்யாணம்ங்கறதே சுத்த ஹம்பக்னு தோணுது. கல்யாணமாகி குழந்தைப் பெத்த பிறகும் இன்னொருத்தனோட ஓடிப்போகிற அளவுக்கு துணிவை தந்த அளவுக்கு வீக்காயிருக்கு கல்யாண பந்தமெல்லாம். எனக்கு அதுமேல நம்பிக்கை வரணும். இவன் எனக்க நம்பிக்கையானவன்னு பார்த்த மாத்திரத்தில் தோணனும். எனக்கு கல்யாணம்னா... அது லவ்மேரேஜா மட்டும் தான் இருக்க முடியும். அப்படிப்பட்ட நபரைப் பார்க்கிறனா... நோ... மேரேஜ்! என்றாள் உறுதியாக, தெளிவாக!'

என்னதான் தயாளன் மன்னிப்பு கேட்டு விட்டாலும் கூட அவளால் அவரின் செயல்களை மன்னிக்க முடியவில்லை. அவரைக் கண்டாலே வெறுப்பாக இருந்தது. நடந்த சம்பவங்களையும் ஒரேயடியாக மறக்கவும் முடியவில்லை. இத்தனை காலம் ஆறுதலாய் இருந்த நண்பர்களையும் ஒதுக்க முடியவில்லை.

மறுபடி நண்பர்களுடன் ஊர் சுற்றும் மகளை பார்த்து பயந்தார். அவளை சராசரிப் பெண்ணாய் பார்க்க ஆசைப்பட்டார். நன்கு யோசித்து ஒரு முடிவு எடுத்தார்.

ஒரு மனமாற்றத்திற்காகவும், குடும்ப அமைப்பென்றால் என்னவென்பதை தெரிந்து கொள்ளவும். எல்லாப் பெண்களைப்போல் அவளும் சராசரிப் பெண்ணாய் மாற வேண்டும் என்பதற்காகவும் அவளை வெலிங்டனில் உள்ள அக்கா சியாமளா

வீட்டில் கொஞ்ச நாள் தங்க வைக்க முடிவு செய்தார். அதை போனில் ஷியாமளாவிடம் சொல்லி அனுமதி கேட்டார். தன் மகளைப் பற்றி முழுவதுமாக சொல்ல மனம் வரவில்லை. 'அவள் லைப் ஸ்டைல் கவலையைத் தருகிறது. நட்பு வட்டம் சரியில்லை. அதையெல்லாம் மறந்து குடும்பத்தை அனுசரித்து நடக்கிற பெண்ணாய் மாற வேண்டும்-அவளைக் கொஞ்ச நாள் உங்கள் வீட்டில் விடலாமா?'' என்று அனுமதி கேட்க... ஷியாமளா பூரித்துப் போனாள்.

''இப்பவாவது உனக்கு அக்கா ஞாபகம் வந்ததே... அதுவே பெரிய சந்தோஷம். அவளுக்கொரு அத்தை இருக்கறதை இப்பவாவது சொன்னாயே அது... அதை விட பெரிய சந்தோஷம். என் தம்பி மகளைப் பார்க்க ஆவலாயிருக்கிறேன். எப்ப அழைச்சிட்டு வர்றே?'' என்று கேட்டாள் தாய்ப்பாசத்துடன்.

ஆனால் சுப்ரியாதான் கோபத்தில் குதித்தாள்.

''எதுக்கு, எதுக்கு டாடி என்னை நாடு கடத்தறீங்க? உண்மையில் உங்களை தான் நாடு கடத்தனும். நான் யார் வீட்டுக்கும் போக மாட்டேன்!''

''நீ என்னை என்ன வேணாலும் திட்டு. நான் செய்த தவறுகளுக்காக நான் பொறுத்துக்கறேன். ஆனா, நீ வெலிங்டன் போயே ஆகனும். அவங்க யாரோ இல்லை. உன் அத்தை. உன் வயசிலே அங்கே பொண்ணு கூட இருக்கிறா!''

''உங்க பேய் கதையில ஒவ்வொரு பக்கத்திலயும் பயப்படும்படி எழுதுறீங்களே எப்படி?''

''பொண்டாட்டி எப்பவும் என் பக்கத்திலேயேஇருக்கிற தால தான்!''

-ம.இராமலிங்கம்,
வாளாமங்கலம்.



''எனக்கு எவளும் தேவையில்லை. நான் எங்கேயும் போகமாட்டேன்.

''உனக்கும் ஒரு மாற்றம் தேவை சுப்ரியா. அந்த ஊர் உனக்குப் பிடிச்சிருக்கும்!''

''டாடி ப்ளீஸ்... என் ப்ரண்ட்ஸை எல்லாம் பிரிஞ்சி என்னால இருக்கவே முடியாது!''

''அந்த காண்டாக்ட்டே வேண்டாம்னு தானே உன்னை அனுப்பி வைக்கிறேன்!''

''அவங்களோட பழகக் கூடாதுன்னு சொல்றதுக்கு உங்களுக்கென்ன ரைட்ஸ் இருக்கு?''

''சுப்ரியா... சொல்றதைகேள். நான் பொறுமையா சொல்லிட்டிருக்கேன். எனக்கு உன்னோட எதிர் காலம் முக்கியம். அதுக்கு பெரிய தடைகல்லா இருக்கிறது. இந்த மாதிரியான கூடா நட்பு தான்! நீ என் பேச்சைக்



கேட்கலேன்னா நான் வேற மாதிரி ஆக்ஷன் எடுக்க வேண்டி வரும்!''

''என்னடாடி மிரட்டறீங்களா?''

''இல்லேம்மா... நடக்கப்போறதைச் சொல்றேன். உன் பிரண்ட்ஸ் எல்லாம் யாரு, என்ன பண்றாங்க, எங்கே இருக்காங்கன்ற ஜாதகமே என் கையிலே இருக்கு சிட்டி போலீஸ் கமிஷனர் என் குளோஸ் பிரண்ட்ங்கறது உனக்கும் தெரியுமேடா! சும்மா ஒரே ஒரு போன் தான். அவனவனை பிரிச்சி மேய்ஞ்சிருவாங்க''

''டா...டி!''

''இனி உன் வழியிலே அவங்க யாரும் கிராஸ் பண்ண மாட்டாங்க. பண்ணினா என்ன நடக்கும்ங்கறதும் தெரியும் அவங்களுக்கு. உன்னால ஆபத்து வரணுமா அவங்களுக்கு?''

''...?!''

''நான் எடுக்கிற நடவடிக்கை உனக்கு இப்ப கசப்பு மருந்தா தோணலாம். கொஞ்ச நாள் கழிச்சு நீயே எனக்கு தாங்க்ஸ் சொல்லுவே!'' என்று அன்பாய் அதட்டி, உருட்டி, மிரட்டி வெளிநாட்டுக்கு அனுப்பியும் வைத்து விட்டார்.

யாரிடமும் ஒட்டாமல் இருந்த சுப்ரியாவுக்கு ஆதியை யார், என்ன என்று தெரியாமலே பார்த்த கணம் முதல் காதலிக்க தொடங்கி விட்டாள்.

''எந்த உறவோட அன்பும் எனக்குக் கிடைச்சதில்லை ஆதி! தனியா வளர்ந்ததாலோ, என்னவோ எனக்கும் எதன் மீதும், யார் மீதும் பற்றுதல் வரவே இல்லை. முதன் முதலாய் நான் ஆசைப்பட்டதே உங்களை தான். ஏன்னா... எனக்கு எல்லாமே ஆசைப்படாமலே கிடைத்து விட்டது. எனக்கு நீங்கள் வேண்டும். அதுக்காக நான் என்ன வேண்டுமானாலும் செய்கிறேன். இந்த லைப் எனக்கு பிடிச்சிருக்கு. ரோமாவிடம் நீங்கள் காட்டும் அன்பும், அக்கறையும், கண்டிப்பும் தாயில்லா ஏக்கத்தை அதிகப்படுத்துது. உங்கள் அன்பு கிடைக்கலேன்னா.. என்னால எதுவுமே பண்ண முடியாதுன்னு தோணுது! என்றழுதாள் சுப்ரியா.

சொல்லி முடித்தவளை பரிதாபமாய் பார்த்தான். மொட்டை மாடிக்கு வந்து ரோமாவும் இதையெல்லாம் கேட்டுவிட்டு கண் கலங்கினாள்.

## 14

ஆனாலும் ஆதித்யாவால் சமாதானமாக முடியவில்லை. எதுவும் பேசாமல் நகர்ந்தான்.

''ஆதி.. நான் சொன்ன எதையும் நம்பலையா?''

நம்பறது, நம்பாததல்ல பிரச்சனை! மனசுக்கு பிடிக்கணும். பிடிச்சிருச்சின்னா.. மண்ணுல விழுந்தாக்கூட சில சமயம் கழுவிட்டு சாப்பிடறோமில்லையா?''

''அப்ப என்னை உங்களுக்கு பிடிக்கவே இல்லையா ஆதி? உங்களுக்கு பிடிச்சமாதிரி நான் எப்படி நடந்துக்கணும் சொல்லுங்க!''

''அதுக்கெல்லாம் அவசியமே இல்லை. என்னை பிரீயா விடு.



ஏகப்பட்ட வேலையிருக்கு!''

கதவருகில் நின்றிருந்த ரோமாவை ஆச்சரியத்துடன் பார்த்து விட்டு இறங்கிப் போய் விட்டான் ஆதித்யா.

சுப்ரியா பொங்கி வந்த அழுகையை கட்டுப்படுத்தினாலும் விம்மல் வெடித்தது. ரோமாவை அவளும் பார்த்துவிட்டாள். குன்றிப் போனாள்.

ரோமா அவளருகே வந்து கன்னத்தில் வழிந்த கண்ணீரை துடைத்தாள்.

''உண்மையான நேசத்திற்கு பயங்கர சக்தி இருக்கு சுப்ரியா. நீ எங்கண்ணனை காதலிக்கறது எனக்கு எப்பவோ தெரியும். நீ எனக்கு அண்ணியா வரணும்னு கடவுள்கிட்டே வேண்டிக்கிட்டு தான் இருக்கேன். உன் மனசு அதன் வேதனை எல்லாமே என்னாலப் புரிஞ்சுக்க முடியுது. உன் மனக்கஷ்டங்கள் எல்லாம் இதோ இந்த மேகம் போல் ஒரு நாள் கடந்து போகும்!''

''நிஜமாகவே சரியாய்டுமா ரோமா?'' சிறுபிள்ளையைப்போல் கேட்டாள்.

'ஹண்ட்ரட் பர்ஸண்ட்!''

''அப்ப அந்த ரேவதி?''

''கவலையேப் படாதே! அண்ணன் மனசிலே ஒரு குழப்பம் வந்தாச்சு''

''எப்படிச் சொல்றே?''

''எப்பவுமே உன்கிட்டே எரிஞ்சு விழறவர்.... இப்ப ஒண்ணுமே சொல்லாம தானே போனார்?''

''ஆமாம்!''

''அதுவே பெரிய மாற்றம் தானே?''

''ம்! என்றவள் முகத்தில் தெளிவு வந்தது.

ஆதித்யா வேலையில் ஜாய்ன் பண்ணிவிட்டான். காலையில் எட்டுமணிக்கு காரில் புறப்பட்டால் இரவு ஒன்பது பத்தாகி விடும் வீடு திரும்ப.

சாப்பிட்டு படுக்கவே நேரம் சரியாக இருந்தது. அதற்காகவே இன்னும் சீக்கிரமாய் எழுந்து கொண்ட சுப்ரியா இங்குமங்கும் நடந்த ஆதியை கண்களால் நிரப்பிக் கொள்வாள். சமயங்களில் அவன் ஆடைகளை அயர்ன் பண்ணித் தருவாள். அதில் கிடைத்த



சந்தோஷத்தையும், திருப்தியையும் வார்த்தையில் வடிக்க முடியாது. மனதிற்கு பிடித்தவருக்காக நாம் செய்யும் சின்ன சின்ன விஷயங்கள் அவரை விட நமக்கு தான் எல்லையில்லா மன சாந்தியை தருமல்லவா?

''எனக்கும் சமைக்க கத்துக் கொடுங்க ஆன்ட்டி?'' என்று சியாமளாவின் பக்கத்தில் போய் நின்று கொண்டாள்.

''உனக்கேம்மா தலையெழுத்து?''

''ஏம்மா... கத்துக்கட்டுமே... ஆசைப்படறாயில்லே? புகுந்த வீட்ல சமைச்சிதானே ஆகணும்?''

''அதைதான் கேக்கறேன்... அவளுக்கென்ன தலையெழுத்து? சுப்ரியா இளவரசிடி. அவங்க வீட்லேயே பட்லர் மாதிரி நாலஞ்சு சமையல்காரங்க வேலை செய்றாங்க. எல்லாரும் ஒரே மாதிரி யூனிபார்ம் போட்டிருப்பாங்க... சுப்ரியாவையே கேட்டுப்பாரு! என் தம்பியே அவ்ளோ பெரிய பணக்காரன். சுப்ரியா வாழப்போகிற இடம் அதை விட பெரிய இடமாயில்லே இருக்கும்? ஏற்கனவே நம்ம வீட்ல வந்து அல்லாடிக்கிட்டிருக்கு பொண்ணு. எனக்கே சங்கடமாதான் இருக்கு. உங்கண்ணன் வேற மிலிட்டரிக்காரன் மாதிரி இவளைப் போட்டு காய்ச்சி எடுக்கறான்''

''பரவாயில்லே ஆன்ட்டி! எனக்கு உங்க வீடு, உங்க பிள்ளை செய்ற கெடுபிடி, கட்டுப்பாடு எல்லாமே பிடிச்சிருக்கு. புதுசாயிருக்கு. சமையல் கத்துக்கறது நல்லது தானே ஆன்ட்டி?''

''நல்லதுதான்... ஆனா, இப்ப எதுக்கும்மா? அப்புறம் பார்த்துக்கலாம். உன்னைப் பார்த்தா ஆச்சரியமா இருக்கு சுப்ரியா! ரெண்டு மாதத்துக்கு முந்தி எப்படி இருந்த பொண்ணு... இப்ப முழுசா மாறியிருக்கே! எப்படி எது உன்னை மாத்துச்சோ? நன்றி முருகா! தயாளன் பார்த்தா... சந்தோஷத்துல அழுதுருவான்!''

ரோமாவும் சுப்ரியாவும் அர்த்தமுடன் பார்த்து சிரித்துக் கொண்டனர்.

★★★

இரவு சாப்பாட்டை முடித்து கைகழுவிய ஆதியிடம் சிறு துண்டை நீட்டினாள் சியாமளா.

''மாத்திரை எல்லாம் ஒழுங்கா சாப்பிடறியாம்மா?''

''ம்... சாப்பிடறேன்ப்பா! ஆதி... உங்கிட்ட ஒரு விஷயம் பேசணுமே!''

''என்னம்மா... சொல்லு?''

''அந்த அனுசுயா இன்னைக்கும் போன் பண்ணி இருந்தா. நாம எப்ப ரேவதிய பொண்ணு பார்க்கப் போகலாம்?''

''இப்ப என்னம்மா அவசரம்? ரோமாவுக்கு கல்யாணம் முடியட்டும்''

''அது ஒருபக்கம் நடக்கட்டும் ஆதி. நல்ல சம்பந்தம். பொண்ணு பாந்தமா இருக்கா. உன்னை ரொம்ப பிடிச்சிருக்குன்னு பனிச்சுனு சொல்லிட்டாளாம். நீயும் பார்த்து சொல்லிட்டா... முடிவு பண்ணி



வச்சிடலாம். ரோமாவுக்கு முடிஞ்சதுக்கப்புறம் முடிச்சிடலாம். என்ன சொல்றே?''

''டயர்டாயிருக்கும்மா... அப்புறம் சொல்றேனே...!''

''ச... சரிப்பா!'' என்றாள் சிறுயோசனையுடன் படுத்தவனுக்கு உறக்கமே வரவில்லை.

ஏன் என்னால் சம்மதம் சொல்ல முடியவில்லை. எதற்கு தயங்குகிறேன்? ரேவதியை மணக்க தயாராய் இருந்த மனசு... இப்போது ஏன் நெருப்பைக் கண்டது போல் விலகி ஓடுகிறது? சுப்ரியாவை நேசிக்கிறேனா? அவள் யார் என்று தெரியாமலே தாவிய இதயம்... அவள் கேட்ட ஒரே கேள்வியில் சிதறி வெடித்துப் போய்விட்டதே! மறுபடியும் எப்படி அவளிடமே ஓடிப்போனது?''

அவளிடம் தெரிந்த மாறுதலா? எனக்காகவே தன்னை மாற்றிக் கொண்டாலும், எனக்கே தெரியாமல் செய்த சில காரியங்களை எதேச்சையாய் நான் பார்க்க நேர்ந்ததாலா?

யாரும் அறியாமல் சுப்ரியா அவன் சட்டைகளை அயர்ன் செய்ததையும், அதிகாலையில் அவன் ஷூக்களை துடைத்து பாலீஷ் போட்டு வைத்ததையும் அவளுக்கே தெரியாமல் பார்த்துவிட்டான்.

அந்த சிறு வேலைகளில் கூட திருப்திப்பட்டுக் கொள்கிறாள். நேசமில்லாமலா? ஒரு பெண் காதல் வயப்பட்டு விட்டால்... இந்தளவிற்கு இறங்கி வருவது இயல்பான விஷயம் தான் என்றாலும் சுப்ரியாவை அதில் சேர்த்துக் கொள்ள முடியாது. அவள் இந்தளவிற்கு இறங்கிவரவேண்டிய அவசியம் இல்லாதவள். இந்தியாவின் பணக்காரர்கள் வரிசையில் தொண்ணூற்று எட்டாவது ஆளாய் இடம் பெற்றிருக்கும் தயாளனின் ஒரே செல்வமகள்!

உயிர்ப்பான காதலில்லாமல் சுப்ரியா தன்னை மாற்றிக் கொள்ள வாய்ப்பே இல்லை.

மறுநாள் ரோமா அண்ணனை நேருக்கு நேர் கேட்டு விட்டாள்.

''அண்ணா... அம்மா ரேவதிய மருமகளா நினைச்சி கனவு காணத் தொடங்கிட்டாங்க. நீங்க இன்னும் அமைதியா இருக்கிறது நல்லாயில்லே!''



''மனிதனுக்கு மன அழுத்தம் இருந்தா ஹார்ட் அட்டாக் உடனே வரும். அதனால மன அழுத்தம் குறையறதுக்கு தினமும் ஒரு மணி நேரமாவது நீங்க மனைவியோடு மனம் விட்டுப் பேசணும்''

''யாரோட மனைவியோடு சார்?''

-அரிசி ஸ்ரீராம், சாத்தூர்.

"அதான் சொல்லிட்டேனே! உன் கல்யாணத்துக்கு அப்புறம் பார்த்துக்கலாம்னு..."

"அண்ணா... போதும்ண்ணா கண்ணாமூச்சி விளையாட்டு! நேரடியாவே கேட்கிறேன். சுப்ரியா மேல உனக்கு லவ் இல்லே?"

"...?!"

"அவ பாவம்ண்ணா! பாசத்துக்காக ஏங்கறப்பொண்ணு! அவ அழகிற்கும், அந்தஸ்திற்கும் அம்பானி குடும்பத்துலக் கூட மாப்பிள்ளை பார்க்கலாம். ஆனா, உன் பாசத்துக்காக ஏங்கி ஏங்கியே உருக்குலைஞ்சுப் போறா. இதுக்கு முன்னாடி அவ லைப் ஸ்டைல் வேறமாதிரி இருந்திருக்கலாம். இப்ப ரொம்ப மாறிட்டாண்ணா!"

"எனக்கும் அவ மேல பாசம் இல்லாமலில்லே! அவளோட முதல் சந்திப்பு கசப்பு மருந்து. அவளைப் பார்த்த முதல் பார்வையிலேயே நானும் நேசிக்க ஆரம்பித்தது நிஜம். அவ என்னை கேட்ட ஒரு கேள்வியிலே வெறுக்க ஆரம்பிச்சிட்டேன். மேலும் மாமா பொண்ணுன்னு தெரிஞ்சப்பிறகு இன்னும் வெறுப்பு அதிகமாய்டுச்சி. அவகிட்டே மாறுதல் தெரிஞ்சப்பிறகு என்னையறியாமல் நானும் அவள் பக்கம் சாய ஆரம்பிச்சிட்டேன். பட், அவளோட பணத்துக்காகதான் காதலிக்கறதா அவங்கப்பா நினைச்சிடக்கூடாது. ஏற்கனவே பணத்திமிர்ல தானே நம்மளோட உறவே வேணாம்னு ஒதுக்கி வச்சிருந்தார்?"

"இதுபோதும் ஆதி... உன் மனசுல நான் இருக்கிறேன்னு தெரிஞ்சுக்கிட்டதே போதும் ஆதி! இதுக்கு மேலேயும் என்னை காக்க வைக்காதே!"

எங்கிருந்தோ திடீரென முளைத்து வந்த சுப்ரியா... பின்னாலிருந்து அவனை கட்டிக் கொண்டாள். அவள் முகம் அவனின் பரந்த முதுகில்!

எதிர்பாராத ஆதி திகைத்துப் போய்..." ஏய்... விடு... விடு!" என்று சங்கடமாய் நெளிந்தான்.

"நான் விடமாட்டேன். இனி ஒரு செகண்ட் கூட உன்னைப் பிரிஞ்சிருக்க மாட்டேன்!" மேலும் இறுக்கி அணைத்துக் கொள்ள... ரோமா வெட்கத்துடன் அங்கிருந்து ஓடிப்போய் விட்டாள்.

பெரிய பூங்கொத்து முதுகில் சாய்ந்திருப்பது போலிருந்தது. மெல்ல அவளை முன்னால் இழுத்து நிறுத்தினான்.

கண்ணீருடன் அவன் மார்பில் சாய்ந்து கொண்டவள் "தாங்க்ஸ் ஆதி... எனக்கு மறு ஜென்மம் கொடுத்து விட்டீர்கள்" என்றழுதாள்.

முதன் முறையாய் அவள் முதுகில் கைவைத்து தன்னோடு அணைத்து தலையை தடவிக் கொடுத்தான் ஆறுதலாய்.

## 15

கோழியை கூடையில் போட்டு மூடி வைத்து மறைக்கலாம். ஆனால் புகையை எவ்வளவு நேரத்திற்கு மறைக்க முடியும்? இதயத்தில் தோன்றும் காதலும் அப்படித்தான்!



தன் மனதைத் திறந்து காட்டியபின், அன்பை அள்ளிக்கொடுக்கும் அமுத சுரபியாகவே மாறிப்போனான் ஆதித்யா. சுப்ரியாவுக்கு தாயாகவே மாறினான்.

காதல் பறவைகள் குளிர்பிரதேசத்தில் சுற்றித்திரிந்தன. ரோமாவுக்கும், அம்மாவுக்கும் எதுவாங்கி வந்தாலும் அவளுக்கும் சேர்த்தே வாங்கி வருவான். அவன் அலுவலகம் முடிந்து வீடு திரும்பும் நேரத்திற்காக காலையிலிருந்தே காத்துக்கிடப்பாள்.

ஷியாமளா அவர்களின் காதலை அறிந்து முதலில் அதிர்ந்தாள். பின் பயந்தாள். அவர்கள் உறுதி தெரிந்தபின் மகிழ்ந்தாள்.

பயந்து... பயந்து தன் தம்பி தயாளனுக்கு போன் பண்ணி விபரத்தைச் சொன்னாள்.

பழைய தயாளனாய் இருந்திருந்தால் தாட்பூட் என்று குதித்திருப்பார். மாறாக பெரிதும் சந்தோஷப்பட்டார்.

"என்ன சொல்றதுன்னே தெரியலேக்கா! இந்த உலகத்தில் பணம் தான் எல்லாம்னு நினைச்சிருந்தேன். அது பின்னாலேயே ஓடினேன்! திரும்பிப் பார்க்கிறப்ப ரொம்ப தூராம் ஓடி வந்துட்டேன். கண்ணுக்கெட்டின தூரம் வரை யாருமே தென்படலே... என் மகள் உட்பட! அந்தந்த வயசுக்குரிய பாசத்தையோ, அக்கறையையோ, கட்டுப்பாட்டையோ தராததால் அவ என்னை விட்டு விலகிட்டா. அவளோடு உன் வீட்டுக்கு வர்றவரை எனக்கு வேற எண்ணமே இல்லை. வந்தபிறகு தான்... நம்ம ஆதித்யாவை சுப்ரியாவுக்கு முடிச்சா என்னன்னு தோணுச்சு. இத்தனைக்கும் இன்னைக்கு வரை அவனை நான் பார்த்ததே இல்லை. ஆனா, உன்னை, ரோமாவை, உன் வீட்டை பார்த்தப்ப என் பொண்ணுக்கு ஏத்த இடம், பாதுகாப்பான சொந்தம் இதைவிட கண்டிப்பா வேற எதுவும் இருக்க முடியாதுன்னு தோணுச்சு. ஆனா, அதை சொல்றதுக்கு தயக்கமா இருந்துச்சு. சுப்ரியாகிட்டே ஏதோ பெரிய தப்பிருக்கு... அதனாலதான் புதுசா திடீர்னு முளைச்சு தலைல கட்டறேன்னு நினைச்சுப்பியோன்னு பயந்தேன். இப்ப கடவுள் அருளால் எல்லாமே நல்லதா நடந்திருக்கு. என் பொண்ணை பத்திரமா ஒரு இடத்துல கடவுள் சேர்த்துட்டான். நடுநடுவோ நீ போன் பண்ணி சுப்ரியாக்கிட்டே ஏற்பட்ட மாற்றங்களை சொல்லும்போதெல்லாம் நான் எவ்ளோ சந்தோஷப்பட்டேன் தெரியுமா? ஆனா, அதுக்கெல்லாம் சிகரம் வைக்கறமாதிரி இத்தனை பெரிய சந்தோஷத்தை சொல்லுவேன்னு நான் எதிர்பார்க்கவே இல்லேக்கா! என் பொண்ணு இனி உன் பொண்ணு!"

"அதை நீ சொல்லணுமா? அவ இந்த வீட்டுக்கு வந்தப்பவே என் குழந்தையாகவே ஏத்துக்கிட்டேன். நீ எங்களை தப்பா நினைச்சிடப் போறியோன்னுதான் பயந்தேன். நல்லவேளை!

"என்னை இன்னமும் பழைய தயாளனாகவே நினைச்சுட்டிருக்கியாக்கா? பணத்துமேல இப்ப எனக்கு எந்த ஆர்வமும் இல்லே! அதெல்லாம் வெறும் காகிதம். அந்த காகிதத்தால மாத்த முடியாத என் பொண்ணை உறவும், அன்பும் தானே

மாத்திரிக்கு. ரோமாவுக்கு முடிஞ்சதும். இந்த கல்யாணத்தையும் முடிச்சிடலாம். ஆதியைப் பார்க்கணும்போல ஆசையிருக்கு. ஆனா, இப்ப நான் சவுதியிலே இருக்கேன். வர்றதுக்கு இருபது நாளுக்கு மேல ஆகலாம். இந்தியா வந்ததும் நேரே அங்கே ஓடிவந்துடமாட்டேனா?''

''நடுவிலேயாவது வந்து கப்ரியாவை பார்த்துட்டு போயிருக்கலாமே தயாளா?''

''எனக்கும் ஆசைதான்க்கா! ஆனா, அவளுக்கு என்மேல ரொம்ப கோபம் இருந்தது. தவிர என்னைப் பார்த்ததும் வீட்டு ஞாபகம் வந்து கூடவே கிளம்பிவர்றேன்னு அடம்பிடிச்சு வந்துடுவாளோன்னு பயம்! வேறெதுவுமில்லே...! என்றார்.

''இப்ப நாம எங்கேப் போறோம் ஆதி?'' டிரைவ் பண்ணிக் கொண்டிருந்த ஆதித்யாவின் தோளில் சாய்ந்தபடி கேட்டாள் கப்ரியா.

''தொட்டபெட்டாவுக்கு!'' என்றவன் கப்ரியாவின் முகத்தில் விழுந்த முடிகளை இரண்டு விரல்களால் ஒதுக்கிவிட்டான்.

அம்மாதிரியான சின்னச்சின்ன கவனங்களும், கரிசனங்களும் கப்ரியாவை நெகிழ்த்தின. அவன் மீதான காதலும் அதிகரித்தன.

''இத்தனை நாளும் எஸ்டேட்டுக்குள்ளேயே குண்டு சட்டியில குதிரை ஓட்டிக்கிட்டிருந்தோம். இப்ப மட்டுமென்ன ஜயாவுக்கு கரிசனம்?''

''இதுவும் என் ஐடியா இல்லே அருமை மாமன் மகளே! எனக்கு மத்தவங்க பார்க்கிற மாதிரி ஊர்சுத்தப் பிடிக்காது. பிடிக்காதுங்கறதை விட, ரோமா என்னை தப்பா நினைச்சிடக்கூடாதுன்றதுல கவனமா இருக்கேன். அவளோடதும் லவ்மேரேஜ் இல்லையா? நான் லேசுல சம்மதிக்கலே. அப்படியும் சம்மதிச்சப்ப நான் போட்ட கண்டிஷன்... வெளியிலே ரெண்டு பேரும் சேர்ந்து ஊர் சுத்தக்கூடாதுன்னு தான். அஸ்வினோட பேரண்ட்ஸ் இந்தக் கல்யாணத்துக்கு சம்மதிச்சதே ரோமாவோட கேரக்டர்தான்! நான் அவங்களை கண்ட்ரோல் பண்ணிட்டு உன்னோட இப்ப ஊர் சுத்த கிளம்பினதுக்கூட உறுத்தலாயிருக்கு. ஏன்னா... நான் வளர்த்த விதம் அப்படி! அம்மாவும், ரோமாவும் தான் என்னை கழுத்தைப் பிடிச்சு தள்ளாதக்குறையா, ''இன்னைக்கு சன்டே! உங்க ரெண்டு பேருக்கும் வீட்லே சாப்பாடுக்கிடையாது. தொட்டபெட்டாவுல நல்ல ஹோட்டல்ஸ் இருக்கு. அங்கே சாப்பிட்டுக்குங்கன்னு துரத்தி அடிச்சிட்டாங்க!''

அவன் சிரித்தபடி பேசும்போது... பார்த்துக் கொண்டே இருக்கலாம்போலிருந்தது.

''என்ன அப்படிப் பார்க்கிறே?''

''ம்ஹூம்!'' தலையாட்டினாள்.

''என்னவோ நினைச்சியே... சொல்லு... நிறைய பேசு!''

''ரோமா ஆரம்பத்திலேர்ந்தே எனக்கு சப்போர்ட் பண்ணினா. என்னை சேஞ்ச் பண்ண ஆரம்பிச்சதே அவளைப் பார்த்துதான்! நல்ல மாமியார், நல்ல நாத்தனார் கிடைச்சிட்டாங்க. நல்ல புருஷன்தான்...



என்னை ரெண்டுமாசமா அழவச்சி வெறுத்தார்!'' சிணுங்கலாய் சொன்னாள்.

''அது வெறுப்புன்னு சொல்ல முடியாது... பயம்! எங்கே உன்னை லவ் பண்ண ஆரம்பிச்சிடுவேனோங்கற பயம்!''

''என்னோட பாஸ்ட் லைப்பை பத்தி உங்களுக்கு உறுத்தலாவே இல்லையா? நீங்க விரும்பாத அத்தனை விஷயங்களும் என்கிட்டே இருந்ததே!''

''இப்ப எதுக்கு கபி... அந்தப் பேச்செல்லாம்?''

''பரவாயில்லே சொல்லுங்க!''

''உன்கிட்டே பிடிக்காத விஷயங்கள் இருந்ததுதான்! பட், அது மனசுக்கு பிடிச்சவங்ககிட்டே இருந்தப்ப எல்லாத்தையும் மறந்திடதானே தோணும்? எனக்கு உரிமையில்லாத சமயத்தில் உன் தனிப்பட்ட சுதந்திரத்துல தலையிட எனக்கு உரிமையில்லே இனி, எப்படியிருக்கிறாய் என்பதுதான் முக்கியம்?''

''தாங்க்ஸ்... தாங்க்யூ லோ...மச்!'' அவன் கரத்தை கெட்டியாகப் பற்றிக் கொண்டாள்.

''அப்புறம், இன்னொரு விஷயமும் பேசியாகணுமே!''

''சொல்லுங்க ஆதி!''

''கல்யாணத்துக்குப்பிறகு என் மனைவி என் வீட்லே தான் குடும்பம் நடத்தணும். வீட்டோட மாப்பிள்ளையா போக சம்மதிக்கமாட்டேன்!''

''நீங்க விரட்டினாலும் வெலிங்டனை விட்டுப் போக மாட்டேன் ஆதி! புத்தருக்கு போதி மரம் போல எனக்கு உங்க வீடு! இந்த மாற்றம், சூழ்நிலை, நீங்க ஆபீசுக்கு கிளம்பின பிறகு ஈவ்னிங் எப்போடா வரும்னு காத்திருக்கறது... எல்லாமே பிடிச்சிருக்கு. இந்த சந்தோஷத்தை நான் மிஸ் பண்ண விரும்பலே. சென்னையில மாளிகை மாதிரி வீடு! அவசியமே இல்லாம பதினஞ்சு, இருபது ரூம்ஸ்- ஏகப்பட்ட வேலைக்காரங்க. அப்பா வந்துட்டாரான்னு எனக்குத் தெரியாம, என்னைப்பத்தி அப்பாவுக்கும் தெரியாம... இடைவெளி ஏற்படுத்தற அந்த வீடு எனக்கு வேண்டாம். வீட்டுக்குள்ளே என் ஆதியை பார்க்க நினைச்சா... அடுத்த செகண்டே பார்த்துடணும்.''

''மனுஷனுக்கு மறதியே இல்லாம இருந்தால் எப்படி இருக்கும்?''

''இதே கேள்வியை என் கிட்ட நாலாவது முறையாக கேட்டிருக்கமாட்டீங்க!''

-ஆர்.பிருந்தா ரமணி, மதுரை.



"பரவாயில்லையே... இவ்ளோ யோசிச்சிருக்கே. பட், உங்கப்பாவுக்கு நீ ஒரே பொண்ணு! அங்கே தான் இருக்கணும்னு கம்பெல் பண்ணினா?"

"சம்மதிக்கவே மாட்டேன்! அவர் பொண்ணு கண்டிப்பா புருஷன் வீட்லதான் வாழப்போறா. வேணுமின்னா... அவரோட பேரப்பிள்ளைங்க அங்கே வாழ்ந்துக்கட்டும்.... அதுவும் பெரிசானப் பிறகு."

"அதை அப்புறம் பார்த்துக்கலாம்...ஐ'ம் ஸோ ஹாப்பி சுபி!" அவன் கரத்தை இடதுக் கையால் பற்றி அழுத்தினாள்.

"ஆதி... ஆதி... காரை நிறுத்துங்க!" திடீரென அலறினாள்.

"ஏன் சுபி?"

"ஐயோ... நிறுத்துங்க சொல்றேன்?" இரு கரங்களாலும் வாயைப் பொத்திக் கொண்டு குமட்டினாள்.

என்னாச்சு சுபி?" காரை நிறுத்தியவன் பதறினான். அவளோ வேகமாய் கதவைத் திறந்து சாலையோரம் ஓடிப்போய் வாந்தி எடுத்தாள்.

டாஷ்போர்டில் வைத்திருந்த தண்ணீர் பாட்டிலை அவசரமாய் எடுத்துக் கொண்டு ஓடினான் ஆதி!

வாந்தி எடுத்து முடித்து தண்ணீரைக் குடித்தவள் காரில் சாய்ந்தாள் களைப்புடன்.

"என்ன சுபி... என்னப்பண்ணுது?" அவள் தலையை கவலையுடன் தடவிக் கொடுத்தான்.

"தலை சுத்துதுங்க... ஒரு மாதிரி இருக்கு!"

"அஞ்சே நிமிஷம் பொறுத்துக்க... பக்கத்திலே தான் ட்வென்ட்டி போர் ஹவர்ஸ் ஹாஸ்பிடல் இருக்கு. போய்டலாம். காலைல சாப்பிட்டது ஏதாவது புட் பாய்ஸன் ஆகியிருக்கலாம்!"

அவளால் பதில் கூட சொல்ல முடியாதளவு களைத்திருக்க... வண்டியை வேகமாக ஓட்டினான்!

## 16

இரண்டு பேர் சேர்ந்து தங்கள் ரசனைகளைக் கொட்டி பளிங்கு கற்களால் உருவாக்கிய மாளிகை பூமி அதிர்ச்சியால் ஒரே கணத்தில உருத்தெரியாமல் போனால் எப்படி இருக்கும்? அப்படிப்பட்ட அதிர்ச்சியை தான் சந்தித்தனர் ஆதித்யாவும், சுப்ரியாவும்!

பல போராட்டங்களுக்கு பிறகு கிடைத்த நேசம்... நிலைக்காமல் போவதற்கான சாத்தியக் கூறுகள் அவனே அறியாமல் உருவானால் யாரால் தான் தாங்கிக் கொள்ள இயலும்!?

பூமி... ஆற்றுச் சுழலாய் சுற்றியது.

டாக்டர் முகத்தில் சந்தோஷத்தை அப்பிக் கொண்டு, சுப்ரியா மூன்று மாதம் கர்ப்பமாக இருக்கிறாள் என்றால் யாருக்கு தான் அதிர்ச்சியாக இருக்காது?



இருவரையும் கணவன் மனைவி என்று நினைத்துவிட்டார் போலும்!

அந்த பேரதிர்ச்சி தாக்கிய சூழ்நிலையிலும் ஆதித்யா அவளை பத்திரமாய் ஹாஸ்பிடலை விட்டு வெளியே அழைத்து வந்தான்.

'எப்படிக் கேட்பது? தான் கேட்கும் விதம் சுப்ரியாவை காயப்படுத்தி விட்டால்?' ஆதித்யாவின் நேசம் சுமந்த மனது அப்படித்தான் அல்லாடியது.

நெஞ்சில் சுமந்தவனின் மவுனத்தை தாங்கிக் கொள்ளமுடியாமல் அவன் கைகளை கெட்டியாக பற்றிக் கொண்டாள்.

"ஆதி... இது எப்படி... எப்படியானது என்று சத்தியமாய் தெரியவில்லை ஆதி!"

"........?!"

"ஆதி... என்மீது நம்பிக்கை வரவில்லையா? எனக்கு பாய்பிரண்ட்ஸ் நிறைய உண்டு. ஆனால் நான் உயிரையே வைத்திருக்கும் உங்கள் மீது சத்தியமாக சொல்கிறேன்... யாரிடமும் நான் முறை தவறி நடக்கவில்லை. அந்த விதத்தில் நான் நெருப்பு மாதிரிதான் இருந்தேன். என்னை நம்புங்கள் ஆதி... ப்லீஸ் மீ...!" அடிவயிற்றிலிருந்து எழுந்த வேதனையோடு கதறி அழுதாள் சுப்ரியா.

"நீங்க ஆப்ரேஷன் செஞ்ச நான் பிழைக்கிற மாதிரி கனவு கண்டேன். பயமா இருக்கு"

"ஏன்! நல்ல கனவு தானே!"

"நான் கண்டது பகல் கனவு"

-ஆர்.பிருந்தா ரமணி, மதுரை.




எதை நம்பினாலும், நம்பாவிட்டாலும் ஆதித்யாவுக்கு ஒரு விஷயத்தில் மட்டும் நூறு சதவீத நம்பிக்கை உண்டு. சுப்ரியா அவனை எந்த அளவு நேசிக்கிறாள் என்பது! அவன் மீது சத்தியம் பண்ணுகிறாளென்றால்? நிச்சயம்... இது அவளே அறியாமல் நடந்த ஒன்று தான்!

காதல் மீது முதலில் நம்பிக்கை வைக்கவேண்டும். அடுத்து காதலிப்பவர் மீது நம்பிக்கை கொள்ள வேண்டும். ஆதி அந்த விஷயத்தில் உண்மையாக இருந்தான்.

சுப்ரியாவின் நிலை முள்ளில் விழுந்த சேலை போல! பக்குவமாய் மனம் கிழிபடாமல் சரிபண்ண வேண்டும்.

"நான் உன்னை நம்பறேன் சுபி!"

'சுபி! அதீத காதலால் அவன் செல்லமாய் சுருக்கி அழைக்கும் பெயர். அப்படியானால் அவன் என்

மீது கொண்டுள்ள அன்பு கருகவில்லை.'

தாங்கமாட்டாமல் கதறி அழுதாள்.

''தாங்க்ஸ் ஆதி... நீ மட்டும் என்னை நம்பாமல் போயிருந்தால் நான் என்ன ஆகியிருப்பேன்னு சொல்லமுடியாது.

''அழாதே... முதல்ல அழறதை நிறுத்து!''

''ஆதி.... டிஸ்கொதே பார்ட்டிக்கு போனப்பதான் ஏதாவது ஆகியிருக்கணும். ஒரு நாள் வழக்கத்துக்கு மாறாக... மறுநாள் பகல் வரை தூங்கிக் கொண்டிருந்தேன். அன்று முழுக்க தலைகத்தல் இருந்தது. ட்ரிங்ஸில் மயக்க மருந்து கலந்துக் கொடுத்திருப்பார்களோ என்று இப்போது சந்தேகப்படுகிறேன்!''

''இது எப்போது நடந்தது?''

''ம்... கரெக்ட்... சரியாய் மூணுமாசம் ஆகுது!''

''யார் யாரெல்லாம் கூட இருந்தார்கள் என்று நினைவுப்படுத்திப்பார்!''

''தெரியலே ஆதி! அன்னைக்கு ஸ்டீபனோட பர்த்டே பார்ட்டி... எல்லா பிரண்ட்ஸும் வந்திருந்தாங்க...

அவன் சொல்ல சொல்ல கப்ரியாவுக்கு நிகழ்ந்த அவலம் புரிந்தது.

பார்ட்டி நடக்கும்போது அவளுக்கு மதுவில் மயக்க மருந்து கலந்துக் கொடுத்திருக்கிறார்கள். அதில் நான்கைந்து நண்பர்கள் தான் இவளை நள்ளிரவில் வீட்டில் கொண்டு போய் சேர்த்திருக்கிறார்கள். லோ, அந்த நான்கைந்து பேரும் அவளை ஏதோ ஒரு இடத்தில் வைத்து சிதைத்திருக்கிறார்கள் அவள் அறியாமலே!

என்ன செய்யலாம்?

தனிப்பட்ட நபர் என்றால் விவாதித்து ஒரு முடிவுக்கு வரலாம். இத்தனை பேர் எனும்போது... எப்பேர்பட்ட அவலம்? பாவம் கப்ரியா! வீட்டின் ஆணிவேர் சரியில்லாத ஒரே காரணத்தால் ஒரு இளம் பெண்ணிற்கு ஏற்படும் சோதனைகள் எந்த ரூபத்திலும் வரத்தான் செய்கின்றன.

''இப்படியே செத்துப் போகணும் போலிருக்கு ஆதி!''

''இப்படி முட்டாள்தனமா பேசறதை நிறுத்து! இங்கே பார்... முதல்ல கண்களைத் துடை! நான் சொல்றதைக் கேள்!''

''ம்!''

''இது... நீ அறியாமல் நிகழ்ந்த தவறுதானே?''

''ம்...!''

''ப்ச்... மறுபடி கண்ணெல்லாம் கலங்குது பார்!''

''.........!''

''இது உனக்கும், எனக்கும் மட்டுமே தெரிந்த ரகசியம்''.

''.........!''

''வேறு யாருக்கும் தெரியவேண்டாம்!''

''எ... எப்படி?''

''நான் இப்பவும் உன்னை அதிகமா நேசிக்கிறேன் கபி! அதனால... இந்தக் கருவை கலைச்சிடலாம்!''



''எ...என்ன?'' ஒரடி பின்னோக்கி நகர்ந்தாள் கப்ரியா.

''தீர யோசிச்சுதான் இந்த முடிவை எடுத்தேன் கபி! கருவிலேயே குழந்தையைக் கொல்றதை பெரிய பாவமாக நினைக்கிறவள் நான்! பட், நீ கல்யாணமாகாதப் பொண்ணு. பிராக்டிகலா யோசிச்சுப் பார். நமக்கு கல்யாணமாகப் போகுது. அம்மாவும், ரோமாவும் உன்மேல ரொம்ப பாசம் வச்சிருக்காங்க. இந்த சம்பவத்தால அந்த பாசம் என்னாகும்னு சொல்ல முடியாது. அம்மா கல்யாணத்துக்கு மறுப்பு சொல்ல இதுபோதும். எந்தவிதத்திலும் காரணமே இல்லாம நீ மட்டும் ஏன் பாதிக்கணும் கபி! நான் உன்னைத் தவிர வேறயாரையும் கல்யாணம் செய்யவும் போறதில்லை. என் மனைவி நீதான்!''

''போதும்... போதும் ஆதி... தாங்க முடியல. உங்க அன்பை தாங்கிக்கிற சக்தி எனக்கில்லே...''

''க...பி!''

''உங்க காதல் கிடைச்சதே பெரிய பாக்கியமா நினைக்கிறேன் நான்! அன்பான வார்த்தை உங்க வாயிலேர்ந்து வராதான்னு ஏங்கியவள் நான்! அப்படிப்பட்ட உங்களுக்கு நான் ஏத்தவளா இருக்க வேணாமா! நோ... நான் உங்களுக்கு வேண்டாம்!''

''பைத்தியம் மாதிரிப் பேசாதே!''

''இல்லே ஆதி... நானும் நல்லா யோசிச்சு ஒரு முடிவுக்கு வந்திருக்கேன்!''

''.........?!''

''இந்தக் கரு யாருடையதுன்னு எனக்குத் தெரியாது. ஆனால், இதுக்கு அம்மா நான்தானே? அதை மறுக்க முடியாதே!''

''க...பி!''

''எங்கம்மாவோட பாசம் இல்லாம, அவங்களால நான் பட்ட துன்பம் போதும். இந்தக் குழந்தை என்ன பாவம் செய்தது? நான் பெற்று வளர்க்கப் போகிறேன். எனக்குக் கிடைக்காத அத்தனை பாசத்தையும் கொட்டி வளர்க்கப் போகிறேன்.''

''அவசரப்பட்டு முடிவெடுக்காதே கபி... நான் சொல்றதைக்



''ஊருக்கு நாலு கிலோமீட்டர் தள்ளி இருக்கிற ஸ்கூல்ல தான் படிப்பேன்னு அடம் பிடிக்கிறயே! அங்க டீச்சர்கள்லாம் அழகா பாடம் நடத்துறாங்களா...''

''அழகான டீச்சர்கள்லாம் பாடம் நடத்துறாங்கப்பா!''

-அரிசி ஸ்ரீராம், சாத்தூர்.

கேன்!''

''இல்லை ஆதி! நீங்க என்கிட்ட காட்டிய இந்த அன்பு போதும். சில நாட்கள் தான் ஆகிறது நம் காதல் பிறந்து! ஆனால் அதோட ஆயுட்காலம் ஜென்ம ஜென்மமாய் மறையாது. நான் உங்களுக்கு வேண்டாம். அந்த ரேவதியையே நீங்க கல்யாணம் பண்ணிக்குங்க!''

''இதோ பார்... அவசரத்திலே எடுக்கிற எந்த முடிவும் சரியாயிருக்காது. யோசிப்போம். நல்ல முடிவை எடுப்போம். ஆனால் எந்த முடிவை எடுத்தாலும் நீயும் நானும் ஒண்ணு சேர்வதாய் மட்டுமே இருக்கும்!''

அவளை சிரமப்பட்டு காரில் ஏற்றிக் கொண்டு வீட்டிற்கு வந்தான். இருவரின் முகமும் சரியில்லாததை வீட்டினர் கவனிக்கத் தவறவில்லை. அப்போதைக்கு எதையும் கேட்காமல் அமைதிக்காத்தனர்.

மறுநாள் அவன் அலுவலகம் புறப்பட்ட இரண்டு மணிநேரத்தில் ரோமா பதட்டத்துடன் போன் பண்ணினாள்.

''அண்ணா... சுப்ரியா திடீர்னு வீட்டை விட்டுப்போய்ட்டா. நான் எவ்வளவோ சொல்லியும் கேக்கலே...''

''மைகாட்!''

''உங்க ரெண்டு பேருக்குள்ளே சண்டையாண்ணா!''

''ஆமாம்... விளக்கிச் சொல்ல நேரமில்லை. அவள் வீட்டை விட்டு கிளம்பி எவ்வளவு நேரமாச்சு?''

''பத்து நிமிஷம் தான் இருக்கும்!''

''சரி... நான் பார்த்துக்கறேன்!'' என்றவன் அஸ்வினைத் தொடர்பு கொண்டு சுருக்கமாய் சில விபரங்களை மட்டும் சொன்னான்.

ஒருபுறம் அஸ்வின் தேட... குன்னூரைத் தாண்டி போயிருக்க முடியாது என்பதால் அங்கிருந்தே வெலிங்டன் நோக்கி பஸ்ஸ்டாண்ட், ரயில்வே ஸ்டேஷன் என ஆராய்ந்தபடி தேடினான்.

நேரம் வேகமாய் ஓட... அஸ்வின் தான் போன் பண்ணிச் சொன்னான்.

கப்ரியா கிடைத்து விட்டாள் என்றும் உடனே வரும்படி ஒரு ஹாஸ்பிடல் முகவரியைச் சொன்னான்.

என்னப்பா, மானேஜர் அறையில் இருந்து தாலாட்டு கேட்குது

எங்க மானேஜர் குழந்தை மாதிரி... பி.ஏ. அவரை தாலாட்டுப் பாடி தூங்க வைக்கிறார்.

-தங்கப்பழம்.





''ஹாஸ்பிடலா? சுப்ரியாவுக்கு ஏதாவது...?''

''ஒண்ணுமில்லே சீக்கிரம் கிளம்பி வாயேன்!''

அரைமணி நேரத்தில் அவன் சொன்ன இடத்துக்கு வந்து சேர்ந்தான்.

அஸ்வின் வாசலிலேயே காத்திருந்தான்.

''எங்கே அஸ்வின்? எங்கே சுப்ரியா?''

''டென்ஷனாகாதே... அவளுக்கு சின்ன ஆக்ஸிடெண்ட்!''

''பயப்படற மாதிரி ஒண்ணுமில்லே ஆதி... நோ ப்ராப்ளம். அவ ஆட்டோவுல போயிருக்கா. நடுவழியிலே கார் மோதி ஆட்டோ கவுந்திருக்கு.''

''ஐயோ!''

''கையிலேயும், தலையிலேயும் அடி! வேறொண்ணுமில்லே...பட்...''

''என்ன அஸ்வின்?'' பயத்தில் கண்கள் விரிந்தன.

''சுப்ரியாவுக்கு...''

''சுப்ரியாவுக்கு...?''

''அபார்ஷன் ஆயிடுச்சு!''

''.........?!''

''நீ வந்து சைன் பண்ணனும்! ஆதி...! இது எனக்குத் தெரிந்த ஹாஸ்பிடல் தான்... அதனால பிரச்னையில்லே... விஷயம் வெளியேற தெரியாது...'' தோழமையுடன் அவன் தோளைத் தட்டி சொன்னான்.

''அஸ்வின் நீ என்னைத் தப்பா...''

''சீ ச் சீ . . . அ ரை கு றை மயக்கத்திலேயும் உன் மேல எந்த பழியும் வந்துடக் கூடாதுங்கற பயத்துல சுப்ரியா என்கிட்டே எல்லா விஷயத்தையும் சொல்லிட்டா. ஐ'ம் ப்ரவுட் ஆப்யூ ஆதி!''

''அஸ்வின்...!''

''முதல்ல சைன் பண்ணிட்டு வா!''

உள்ளே சென்று நர்ஸ் காட்டிய இடத்தில் கையெழுத்தைப் போட்டு விட்டு வந்தான் ஆதி!

''அஸ்வின்... இந்த விஷயம் ரோமா உட்பட....''

''டோண்ட் வொரி ஆதி! யாருக்கும் தெரியாது. தெரியாம பார்த்துக்கறது என் பொறுப்பு.


தேவியின் கண்மணி

சந்தா விவரம்

ஓர் ஆண்டு ரூ. 140/-

6 மாதம் ரூ. 70/-

வெளிநாடு ரூ. 750/-

அனுப்ப வேண்டிய முகவரி:

நிர்வாகி

தேவியின் கண்மணி

246, அண்ணாசாலை,

ஆயிரம் விளக்கு,

சென்னை-600 006.

உங்க அப்பா நம்ம திரும ணத்துக்கு சம்மதிச்சிட்டாருன்னு சொல்றியே... அவர் என்ன போடுவார்?

நாட்டு சரக்கெல்லாம் அவ ருக்கு பிடிக்காது... பாரின் சரக்கு தான் குடிப்பார்.

-தங்கப்பழம்.



ஆனா, எப்படிப்பட்ட மனுஷன் நீ! இந்த விஷயத்திலே நீ எடுத்த முடிவு... வராதுல்லா... அவ்வளவு ஈஸியா இந்த மனசு யாருக்கும் வராது. பாவம் சுப்ரியா. நல்லப் பெண். அவளுக்கு நல்ல காதலனா மட்டுமில்லே, நல்ல கணவனாகவும் மட்டுமில்லே... ஒரு தாயாகவும் இருக்கிறே? அவளுக்கு நல்ல அண்ணனா நானும் இருப்பேன்... சரியா?''

''அ...ஸ்...வி...ன்!'' அவனை ஆரத்தழுவிக் கொண்டான் ஆதி!

''எமோஷனல் ஆகாதே! இன்னொரு விஷயம் சுப்ரியாவுக்கு அபார்ஷன் முடிந்து மயக்கம் தெளிய... ஈவ்னிங் ஆகும். அதனால இப்போதைக்கு உங்க வீட்டுக்கு விஷயம் சொல்லாதே! அப்புறமா... சின்னதா ஆக்ஸிடன்ட்னு சொல்லிக்கலாம்...ம்!?''

''தாங்க்ஸ்''

எல்லாம் முடிந்து கண்விழிந்த சுப்ரியா ஆதியைப் பார்த்ததும் கண்கலங்கினாள்... அத்தனை களைப்பிலும்.

''ஆ...தி!'' ''நோ... எதையும் பேசாதே... என்னைத் தவிக்க விட்டு போகப் பார்த்தியே!'' ''இல்லே... ஆதி... நான் உங்களுக்கு...''

''பேசாதேன்னு சொல்றேனே... காதல் என்ன பாஸிங்கிளவுட்ஸ்னு நினைச்சிட்டியா... நினைச்சப்ப வர்றதும்... நினைச்சப்ப போறதும்? கல்வெட்டு சுபி... மனசுல அழுத்தமா எழுதி வச்சிட்டேன். அழிக்க முடியாது. என்னை அழித்தாலொழிய...''

''நோ...!'' சுப்ரியா அவன் வாயைப் பொத்தினாள். அந்த வார்த்தையை ஜீரணித்துக் கொள்ள முடியாமல் கண்கள் பொங்கி காதுகளில் இறங்கியது உப்புநீர்!'' ''நீ அழுததெல்லாம் போதும்... ரெஸ்ட் எடு! இனி உன் வாழ்க்கையில எல்லா முடிவையும் நான் தான் எடுப்பேன். என்னா... நீ ஒரு அழகிய முட்டாள்னு பலமுறை நிரூபிச்சிட்டே....'' ''உங்களை செலக்ட் பண்ணினதுகூடவா?''

''பார்த்தியா திமிரை... உன்னை...'' அக்கம்பக்கம் பார்த்தபடி மெல்லக் குனிந்து... காதலுடன் முத்தமிட்டான் நெற்றியில்!

எல்லாம் மறந்து மனம்விட்டு சிரித்தாள் சுப்ரியா.

நிறைந்தது.

# 'ஏன் காதல் உன்னோடு தான்

ஜில்லென்று வீசிய தென்றல் காற்றை அனுபவித்தபடி, 'பஸ்'ஸி ஜன்னலோர ஸீட்டில் அமர்ந்திருந்தாள் ரஞ்சனி.

கரு நீலத்தில், ஊதா நிற பூக்கள் தூவியிருந்த புடவை, அளவ பின்னல், காதில் சிறு வளையம், கழுத்தில், கையில் மெல்லிய இலி முகத்திலிருந்த லேசான அலங்காரம் எடுப்பாயிருந்தது அ ளுக்கு.

'ரோஜாவைத் தாலாட்டும் தென்றல் 'பாடல் மென்மைய ஒலிக்க, கண்களை மெல்ல மூடியவளுக்கு, புருவம் சுருங்கி நினைவுகள் பின்னோக்கி சென்றது.

இது மனோஜிதனுக்குப் பிடித்தமான பாடல். திருமணவிழா தில் இருவரும் பழக்கமாகி, விரைவிலேயே காதலர்களாகி போனார்கள்.

உன்னை வீட்டிற்கு அழைத்துச் சென்று அப்பா, அம்மாவி நம் விஷயத்தைக் கூறலாம் என்றிருக்கிறேன் ரஞ்சி. வரும் ஞா காலை பத்து மணிக்குத் தயாராயிரு'' என வசீகர புன்னகையுடன் அவளின் சிவந்த கன்னங்களை ஆசையுடன் வருடிவிட்டுச் சென் மனோஜிதன்.

அனாதை இல்லத்தில் வளர்ந்த ரஞ்சனி, மனோஜிதனின் கிடைத்ததை பெரும் பாக்கியமாகவே நினைத்தாள். பகட்டில் அவனுடைய எளிமையே அவளுக்கு வியப்பாகத் தானிருக்கும் னின் பெற்றோருக்கு தன்னைப் பிடிக்க வேண்டும் என வேண் வாறு, அவனுடைய வருகைக்காக ஞாயிறன்று காத்திருந்தாள் அ அதே வேளை விடுதிக்குள் வந்து நின்ற, 'நீலநிற பென்ஸ்' க ருந்து அழகே உருவான தேவதை போல் இறங்கி வந்தாள் ஒரு பெ

''இங்கே ஜனரஞ்சனி என்ற பெண்ணை நான் பார்க்க டும்?'' வந்தவள் கேட்டாள்.

''நான் தான் ரஞ்சனி. நீங்கள்?''

''நான் நயனி. உன்... உங்களுடன் சற்று நேரம் பேச வேண்

விஜி விக்னேஷ்

என்பதால் சிசேரியன் என்றும் கூறுவார்கள். ஜூலியஸ் சீசர் அவரது தாயாரின் வயிற்றைக் கிழி எடுக்கப்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

பிரசவத்தின் போது அறுவை சிகிச்சை எப்போது தேவைப்படுகிறது? பிரசவம் எளிதில்லாமல் கஷ்டமானதாக தோன்றும் காலத்தில் டாக்டர்கள் சிசேரியன் சிகிச்சைக்கு முற்படுகிறார்கள். தாய், சேய் இரு
...ய பொறுப்பு டாக்டருக்கு உண்டு. இக்
...சேரியன் சிகிச்சைக்கு சிபாரிசு செய்கி

...தொடர்புடைய பாகம் நெருக்கமாக
...தில் 'பெல் விக் ரீஜன்' என்று கூறுவார்
...ருந்தால் குழந்தையை மூடிக்காத்துக்
...டைய வாய்ப்பு ஏற்படும். அந்த சம
...ர்கள். சிசேரியன் அறுவை சிகிச்சை
...ல்லை.
...ழந்தை அதிக வளர்ச்சிப் பெற்றிருக்
...றாக அமைந்து இருக்கும். பிரசவ
...க்கு ஏற்படும். கர்ப்பப்பையில் இருக்
...கொடி சுற்றிவிடலாம். இதுபோன்ற
...ன் சிகிச்சையை நாடுவார்கள்.
...வி போன்றது என்று கூறுவார்கள்.
...லாமல் பிரசவம் எளிதாக அமைய
...ண்டறிந்து தெரிவிக்க வேண்டும்.

- அருவிநாதன்.

பால் பாக்கெட்டுகள் வெண்ணை, பழங்கள், காய்கள் போன்றவற்றை எப்பொழுதும் நன்றாக கழுவிய பின்பே பயன்படுத்த வேண்டும்.

# என்னைப் பற்றி!



## பொங்கல் வாழ்த்து!

**வ**ருடத்தின் துவக்கத்தில் உங்களை சந்திப்பதில் பெரும் மகிழ்ச்சி! ஒவ்வொரு பண்டிகை நாட்களிலும் என் படைப்புகளோடு உங்களை சந்திக்க வைக்கிற கண்மணி குடும்பத்தாருக்கும் மனமார்ந்த நன்றி!

"மேகமாய் வந்துப் போகிறேன்" நாவல் உங்கள் உள்ளங்களில் நிலை கொள்ளப் போவது உறுதி. அன்பின்றி இவ்வுலகம் அசையாது! அது கிடைக்காததாலேயே எத்தனையோ ஜீவன்கள் வழிமாறிப் போயிருக்கிறார்கள். அதில் சுப்ரியாவும் ஒருத்தி!

புத்தாண்டு பொங்கல் வாழ்த்துக்கள்!

நேசமுடன்

**ஆர். மணிமாலா**



கீரை வாடாமல் இருக்க அதன் வேர் பாகத்தை நீரில் அமிழும்படி வைத்து இலைபாகத்தை ஈரத் துணியில் சுற்றி வைக்கலாம்.

இரவில் சமையலறையில்

This document was created with Win2PDF available at http://www.win2pdf.com.
The unregistered version of Win2PDF is for evaluation or non-commercial use only.
This page will not be added after purchasing Win2PDF.